111

# சாந்தி

ஆசிரியர் : ரகுநாதன்

ஜனவரி 1955 ★ விலை ஆறு அணா

REGISTRAR OF BOOKS
5 JAN 1955
1764
111/55



தந்தி : பெய்த்

FAITH



போன் : 149

112

நவ நாகரீகத்திற்கேற்ற பவுன் தங்க நகைகள்
வெள்ளிப்பாத்திரங்கள் & கல் நகைகள்
உத்திரவாதத்துடன் கிடைக்குமிடம்



சிதகோ.இ.பெருமாள்பிள்ளை
ஜுவல்லர் திலி.டவுண்

# சித. கோ. இ. பெருமாள் பிள்ளை

**43. கீழ ரத வீதி**

தலைமை ஆபீஸ் :

**கூளக்கடை பஜார் - திருநெல்வேலி டவுண்.**

சாந்தி

கலை இலக்கிய மாத இதழ்



1764

இந்த இதழில்

★

வாழ்க சமாதானம் (தலையங்கம்) .... 3
விச்சுளி ரகுநாதன் .... 8
சாந்தி நிலவுக!
திருச்சிற்றம்பலக் கவிராயர் .... 17
நல்ல பெயர் (குட்டிக்கதை) ... 21
பாராட்டுக்கள் ... 22
போங்கப்போமோ? "அருளரசன்".... 24
பௌர்ணமி நிலவிலே
கிருஷ்ணசந்தர் .... 25
கவிமணி தந்த கருத்துக்கள்
எஸ். ஆர். .... 41
இன்றைய சந்தையில் "முரளி" .... 49
ஓநாயும் ஆட்டுக்குட்டியும்
"புதுமைப்பித்தன்" .... 60
புத்தக விமர்சனம் .... 67
'எதிர்பாராதது' (விமர்சனம்) .... 69

---

கதைகளில் வரும் பெயர், சம்பவம் அனைத்தும் கற்பனை; எவரையும் குறிப் பிடுவன அல்ல.

# சாந்தி

ஆசிரியர் : ரகுநாதன்

## விளம்பர விகிதம்

| | |
|---|---|
| பின்புறம் கவர் | .... ரூ. 75—0—0 |
| உள்புறம் கவர் | ... ரூ. 60—0—0 |
| முழுப் பக்கம் | ... ரூ. 50—0—0 |
| அரைப் பக்கம் | ... ரூ. 30-0—0 |

வருஷ விளம்பரங்களுக்குக் குறைந்த சார்ஜ்

பிற விவரங்களுக்கு

81, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

வாடிக்கைக்காரர்கட்கு எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

★ உள்ளங் கவரும்

★ உயர்ந்த அச்சுகளுக்கு

★ உறுதியான வேலைப்பாட்டிற்கும்

★ உன்னத சுவரொட்டிகளுக்கும்

★ உகந்த இடம்!

## ஸ்ரீ லெக்ஷ்மி பிரஸ்

ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

## பொங்கல் புது நாளில்

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எங்கள் நல் வாழ்த்துக்கள்

எங்களிடம் சகலவிதமான பேப்பர்களும், அட்டைகளும்,
GANGES பிரிண்டிங் மைகளும் சகாயமான
விலைக்குக் கிடைக்கும்.

★

## முக்கூடல் டிரேடிங் கம்பெனி

பேப்பர், பிரிண்டிங் இங்க் & பீடி இலை வியாபாரம்
கீழரதவீதி, திருநெல்வேலி டவுண்.

## புத்தாண்டு வாழ்த்துக்கள்.

மணமும் குணமும் ருசியும் நிறைந்த சுத்தமான காப்பி

# ஸ்வஸ்திக் காப்பியே!

ஊக்கமும் உற்சாகமும் பெற ஸ்வஸ்திக்
காப்பி அருந்துங்கள்.

## ஸ்வஸ்திக் காப்பி ஸ்டோர்ஸ்

ஹைரோடு - திருநெல்வேலி ஜங்ஷன்

நேயர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

## எமது பொங்கல் வாழ்த்துக்கள்.

★

சாந்தி, ஜனசக்தி, சமரன், சங்க நாதம், சோவியத் நாடு, பிளிட்ஸ், நியூஏஜ், பீப்பிள்ஸ் சைனு முதலிய பல சஞ்சிகைகளும் சர்வ தேசிய முற்போக்குப் பத்திரிகைகளும் புத்தகங்களும் கிடைக்கும்.

போட்டி உலகிலே ஒரு புதுமை!

○

லோட்டஸ் கிராஸ்வேர்ட்ஸ்

எளிய குறிப்புக்கள் –

உயர்ந்த பரிசுகள்.

திருநெல்வேலி டிப்போ ஏஜெண்ட் :

## இளங்கோ ஸ்டோர்ஸ்

ஹைரோடு - திருநெல்வேலி ஜங்ஷன்.

வெளி வந்துவிட்டது!

ஜெயகாந்தன் எழுதிய

சிறந்த சிறு கதைகளின் தொகுப்பு

## உதயம்

தமிழ் நாட்டில் மலிந்து கிடக்கும் 'சிறுகதைச் சந்தை' யினின்றும் விலகி, சிறந்த இலக்கியத்தின் சிகரமாக விளங்கும் புதிய முகாமில் தனக்குரிய ஸ்தானத்தைப் பெறும் ஏழு கதைகள் இதில் அடங்கியுள்ளன. புத்திலக்கியப் பாரம்பரிய ரசிகர்கள் அனைவரும் படித்து ரசித்து வளர்க்கப்பட வேண்டிய தொகுப்பு இது.

**88** பக்கங்கள் — விலை ரூ. **0—12—0**

வெளியிடுவோர் :

விஜயா பிரசுரம்
32, எழும்பூர் ஹைரோடு
சென்னை-8.

விவரங்களுக்கு :

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
199, மவுண்ட் ரோட்
சென்னை-2.

# சாந்தி

'' நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற் குழைத்தல் '' — பாரதி

மலர் 1 | ஜய, மார்கழி ○ ஜனவரி, 1955 | இதழ் 2


## வாழ்க சமாதானம்

○

புத்தாண்டு உதயமாகும் இந்தப் புனித நன்னாளில் ஆசிய நாடுகளின் ஒற்றுமைக்காகவும், அகில உலக சமாதானத்துக் காகவும் சென்னையில் கூடுகின்ற அகில இந்திய சமாதான மகா நாடு நமக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் எதிர்காலத்தில் சிறந்த நம்பிக்கையையும் ஊட்டக்கூடியதாகும்.

இந்த நூற்றாண்டின் ஒரு தலைமுறைக்குள்ளாகவே நாம் இரண்டுமாபெரும் யுத்தங்களைக்காணும் துர்ப்பாக்கிய சாலிகளாகி விட்டோம்.

சென்ற யுத்தத்தினால் ஏற்பட்ட சீரழிவிலிருந்து பல நாடுகள் தலை நிமிருமுன்னரே, ஆதிக்க வெறியர்கள் மற்றொரு உலக யுத்தத்துக்கான ஆயத்தங்களைச் செய்து வருகிறார்கள். அணு குண்டு ஹைட்ரஜன் குண்டு போன்ற ராக்ஷஸக் கருவிகளைக் கட்டவிழ்த்து விடத் திட்டமிடுகிறார்கள். மேற்கே ஜெர்மனியில் நாஜிகளை ஆயுதபாணிகளாக்கியும், கிழக்கே பார்மோசா தீவில் அடைக்கலம் புகுந்துள்ள சியாங்கேஷேக்குடன் பரஸ்பரப் பாதுகாப்பு ஒப்பந்தம் என்ற பெயரால் ராணுவ உதவியளித்தும் ஆசியாவின் அமைதியை அச்சுறுத்தியும் வருகிறார்கள்; ஆசியாவை ஆக்கிரமிப்பதற்காக, ஜப்பானை ஒரு கருவியாக உருவாக்கி வருகிறார்கள்.

யுத்த வெறியர்களின் செய்கைகளால் ஏற்பட்டுள்ள யுத்த அபாயம் நமது அருமைத் தாய் நாட்டையும் எதிர் நோக்கியே இருக்கிறது. இந்திய நாட்டின் எல்லைப் பிரதேசமான பாகிஸ் தானிலும், போர்த்துகீசியப் பிரதேசங்களிலும் இலங்கையிலும் அமைக்கப்பட்டுவரும் யுத்த தளங்களால் இந்தியாவின் சுதந்திர மும் அரசுரிமையுமே அச்சுறுத்தப்படுகின்றன. தென்கிழக்கு ஆசியப் பாதுகாப்புக் கூட்டணியிலும் இந்தியாவை இழுத்து விடுவதற்குப் பல சூழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. காஷ்மீர், போர்த்துகீசியத் திட்டுப்பிரதேசம் முதலிய பிரசினை களில் தலையிட்டு நம்மை மிரட்டிப்பார்க்கிறார்கள் யுத்தவெறியர் கள்.

எனவே இந்த நிலைமையில் இந்திய மக்கள் உலக சமாதானத் துக்காக ஒன்றுபட வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. யுத்த வெறியர்களின் போர்த் திட்டங் கள் நாளுக்கு நாள் உடைந்து உருக்குலைந்து வருவதையும் நம்மால் காணமுடிகிறது. ஜெனீவா மகாநாட்டின் மூலம் இந்தோ சீனாவில் போர் நிறுத்தம் ஏற்பட்டதையும் நாம் கண்டோம். எல் லாவற்றுக்கும் மேலாக, உலகத்திலேயே பெரும்பான்மையான மக்கள் செல்வத்தைக்கொண்ட, இந்திய சீன நாட்டுப் பிரதமர் களான பண்டித ஜவாஹர்லால் நேருவும் சூஎன்லாயும் சந்தித்துப் பேசி, சேர்ந்து வகுத்த பஞ்சசீலம் என்னும் ஐம்பெரும் கோட் பாடுகள் உலகம் எங்கணுமே சமாதானத்தை நிலை நிறுத்துவதற் கும், ஆசிய நாடுகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும் வழிகோலியுள்ளதையும் நாம் கண்டு மகிழ்கிறோம். பிரபல காந் திய நிபுணர் ஜே. ஸி. குமரப்பா கூறியுள்ளது போல், "ஆசியா ஏகாதிபத்திய வெறியர்களின் வேட்டைக் காடாக"த்தான் இருந்து வந்துள்ளது. இனியும் ஆசிய மக்கள் தமது உயிரையும் உடமையையும் வேட்டையாட விடமாட்டார்கள் என்ற உறு தியை, சென்னை மகாநாடு நமக்கு எடுத்துக்காட்டும் என்று நம்புகிறோம்.

சென்னையில் நடைபெறும் சமாதான மகா நாட்டில் பலவித அரசியல் கொள்கைகளும் மத நம்பிக்கைகளும் கொண்ட பல்வேறு பிரமுகர்கள் கலந்துகொள்கிறார்கள். ஜே. ஸி. குமரப்பா, பண்டித சுந்தர்லால் முதலிய காந்திய நிபுணர்கள், முல்க்ராஜ் ஆனந்த், அப்பாஸ் போன்ற பிரபல எழுத்தாளர்கள், பிருதிவிராஜ் கபூர், ஓம்காரநாத் டாகுர் போன்ற கலைஞர்கள் முதலியோர் கலந்து கொள்கிறார்கள். தமிழ் நாட்டிலிருந்தும் திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், யோகி சுத்தா னந்த பாரதியார் போன்ற ஆஸ்திக சீலர்களும், சகஸ்ரநாமம்,

சிவாஜீ கணேசன், ஜி. வரலட்சுமி, மனோகர் போன்ற சினிமா நட்சத்திரங்களும், திருவெண்காடு சுப்பிரமணியம், காருகுறிச்சி அருணாசலம், கக்கையா, சௌடையா, வசந்தகுமாரி முதலிய சங்கீத பூஷணங்களும் பங்குகொள்கிறார்கள். மேலும், அரசியல் வாதிகள், எழுத்தாளர்கள், வழக்கறிஞர்கள், டாக்டர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் முதலிய பல துறையினரும் மகாநாட்டில் கலந்துகொள்கிறார்கள். எனவே இந்தமகாநாடு ஜாதி இன மத அரசியல் பேதங்கள் அற்ற ஒரு பெரும் மகாநாடாக, நாட்டு மக்களின் ஏகோபித்த உணர்ச்சியையும் நல்லெண்ணத்தையும் பிரதிபலிக்கும் தலைசிறந்த மகாநாடாக, உலக சமாதானத்துக்கு உருப்படியான திட்டங்களை வகுக்கும் மகாநாடாக விளங்கும் என்ற நம்பிக்கையோடு நாம் அதனை வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம்.

## நாடகத் தடைச் சட்டம்

பல திறப்பட்ட அறிஞர்களின் எதிர்ப்பையும், கலைஞர்களின் கண்டனத்தையும் புறக்கணித்து விட்டு, சென்னை அரசாங்கம் நாடகத் தடைச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. இந்தச் சட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்று பல பத்திரிகைகளும் சட்டசபை எதிர்க் கட்சியாரும் முழுமூச்சுடன் போராடினார்கள். கருத்துச் சுதந்திரத்துக்காக அவர்கள் செய்த கடமையைப் போற்றுகிறோம்; பாராட்டுகிறோம். பெரும்பான்மையான மக்களின் மனவுணர்ச்சிகளைப் புண்படுத்தும் முறையிலோ, அல்லது நாட்டின் அமைதிக்குப் பேராபத்து விளைவிக்கும் முறையிலோ ஒரு நாடகம் இருந்தால் அதனைத் தடை செய்வதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆனால், இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்தால், அப்படிப்பட்ட நாடகங்கள் மட்டுமே தடை செய்யப்படும் என்பதற்கான பூரண உத்தரவாதத்துக்கு இடமிருக்கிறதா? இல்லை. ஏனெனில் சட்டத்தை அமல் நடத்தும் அதிகாரத்தை அதிகார வர்க்கத்திடம் மட்டுமே அரசாங்கம் வழங்கியுள்ளது. அதிகார வர்க்கத்தினரின் ஏகபோக ஆயுதமாக இந்தச் சட்டம் இருக்குமேயானால், இந்தச் சட்டம் தவறான முறைகளில் பிரயோகிக்கப்படக்கூடும். ஏனெனில் கடந்த கால அனுபவங்களும் அதுவே. அரசாங்கத்தையோ அரசாங்கத்தின் காவலாளரான போலீஸையோ, எவ்வகையிலேனும் கண்டிப்பதாயிருந்தால்கூட, ஒரு நாடகம் அதிகாரிகளால் தடை செய்யப்படலாம். மேலும், கலை இலக்கியம் நாடகம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் அதிகாரவர்க்கத்தினர் போதுமான பொறுப்புணர்ச்சியுடனோ கலைவளர்ச்சி பற்றிய கண்ணோட்டத்துடனோ நடந்து கொள்வார்கள் என்றும் பொதுமக்கள் எதிர்பார்ப்பதற்கில்லை.

எனவே இந்தச் சட்டத்தை அமல் நடத்தும் அதிகாரத்தைப் பொறுத்தவரை அரசாங்கம் ஒரு திருத்தத்தைச் செய்தால், நாடகக் கலையோ கருத்துச் சுதந்திரமோ பாதிக்கப்படமாட்டாது என்று நாம் நம்புகிறோம். ஒவ்வொரு ஜில்லாவிலும் மக்களின் பல்வேறு பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்து, அந்தக் குழுவில் அந்த ஜில்லாவின் அதிகாரிக்கும் ஒரு ஸ்தானம் அளித்து, அதன் மூலம் சட்டத்தை அமல் நடத்த வேண்டும். அந்த ஆலோசனைக் குழுவில் அந்த ஜில்லாவின் கலைஞர்கள், எழுத்தாளர்கள் முதலியோரின் பிரதிநிதிகளும், வியாபாரிகள், மாணவர்கள் போன்றவரின் பிரதிநிதிகளும், ஸ்தலஸ்தாபன, ஜில்லாபோர்டு அங்கத்தினர்களும், சட்ட சபை அங்கத்தினர்களும், மற்றும் பிரமுகர்களும் இடம் பெற வேண்டும்; அந்த ஆலோசனைக் குழுவில் ஜில்லா அதிகாரிக்கும் இடம் அளிக்க வேண்டும். என்றாலும் ஆலோசனைக் குழுவின் பெரும்பான்மையோரின் முடிவை நிராகரிக்கவோ மாற்றவோ செய்யும் ஏகபோக ரத்து அதிகாரம் அந்த அதிகாரிக்கு இருத்தல்கூடாது. இப்படிப்பட்ட ஒரு ஆலோசனைக் குழுவின் உதவியோடு நாடகங்களைப் பரிசீலனை செய்வதால் அதிகாரவர்க்கத்தினரின் சொந்த விருப்பு வெறுப்புக்களால் ஒரு நாடகம் பாதிக்கப்படமாட்டாது என்ற உறுதி ஏற்படுவது சாத்தியம்; மேலும் நல்ல நாடகங்களும் பெரும்பான்மையான மக்கள் விரும்பி வரவேற்கக்கூடிய நாடகங்களும் புறக்கணிக்கப்படாமல் அரங்கேறுவதும் சாத்தியமாகும். எனவே நாடகத்தடைச் சட்டத்தில் இப்படிப்பட்ட திருத்தத்தைச் செய்ய அரசாங்கத்தார் முன்வர வேண்டும் என்று விரும்புகிறோம். நாடகத் தடைச்சட்டத்தால் பாதிக்கப்படக்கூடிய கலா ரசிகர்களும் கலைஞர்களும் பொது மக்களும் இப்படிப்பட்ட ஒரு திருத்தத்தை உடனடியாகக் கொண்டு வரவேண்டும் என்று அரசாங்கத்தினரை வற்புறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம். அப்போதுதான் உண்மையான கருத்துச் சுதந்திரமும் கலை வளர்ச்சியும் பாதுகாக்கப்படும்.

## 'கல்கி' மறைந்தார்

சென்ற டிசம்பர் 5-ம் தேதியன்று பிரபல தமிழ் எழுத்தாளரும் பத்திரிகை ஆசிரியருமான 'கல்கி' (ரா. கிருஷ்ணமூர்த்தி) காலமாகி விட்டார். காந்திஜியின் தலைமையில் நடந்த தேசிய இயக்கத்தால் ஏற்பட்ட தேசிய விழிப்பின் காரணமாக, நம் நாட்டு அரசியலிலும் இலக்கியத்திலும் பத்திரிகைத் தொழிலும் ஒரு புதிய உத்வேகமும் உணர்ச்சியும் தோன்றின. நாட்டின் நிலைமையைப் பலவகையிலும் தெரிந்து கொள்ளத்துடித்த நாட்டு

மக்களின் அறிவுப் பசியைத் தணிக்க, புதுமையும் எளிமையும் நிறைந்த பத்திரிகைகளும் இலக்கியமும் தேவைப்பட்டன. எனவே எல்லோருக்கும் விளங்கக்கூடிய எளிய தமிழ் நடையில் எழுதும் பல எழுத்தாளர்கள் தோன்றினார்கள். இந்த எழுத்தாளர் கூட்டத்திலிருந்துதான் கல்கி தோன்றினார். தமிழ்ப் பத்திரிகை உலகின் இந்த வளர்ச்சிக்குக் காரணமானவர்களில் கல்கி குறிப்பிடத் தகுந்தவர். கல்கி தமது சேவையின் மூலம் ஒரு பெரிய வாசகர் கூட்டத்தைத் தமிழ் நாட்டில் உண்டாக்கினார். பத்திரிகை படிக்கும் பழக்கத்தைப் பரவச் செய்த பணியில் கல்கிக்குப் பெரும் பங்கு உண்டு. கல்கி பாமர ரஞ்சகமான பல கதைகளையும் நாவல்களையும் எழுதியுள்ளார். அத்துடன் சங்கீத விமர்சனம், பிரயாணக் கட்டுரைகள், அரசியல் குறிப்புக்கள் முதலியனவும் எழுதியுள்ளார். சங்கீத விமர்சனம் என்பது சங்கீத வித்வான்களுக்கே புரியும் பரிபாஷையாக இருந்த நிலையை மாற்றி, சங்கீதத்தை அனுபவிக்கும் முறையைத் தமது விமர்சனங்களின் மூலம் கற்றுக்கொடுத்தார். அதுபோலவே தமிழிசை வளர்ச்சிக்காக, கல்கி பல்வேறு எதிர்ப்புக்களுக்கும் இடையே முழுமூச்சோடு பாடுபட்டார். தமிழிசையை வளர்ப்பதில் அவர் ஆற்றிய சேவைக்கும் தமிழ் மக்கள் பெரிதும் கடமைப்பட்டவர்கள். மற்றும் எட்டயபுரத்தில் பாரதிக்கு மணி மண்டபம் கட்டும் பணியிலும், வ. ரா. போன்ற எழுத்தாளர்களுக்கு நிதி திரட்டிக் கொடுக்கும் கைங்கரியத்திலும் கல்கி முன்னிலையில் நின்று பணியாற்றினார். தமது இறுதிக் காலத்தில் கல்கி சென்னை எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் இருந்து, எழுத்தாளர்களை ஒற்றுமைப் படுத்தவும் பாடுபட்டார். இவ்வாறு பல வகையிலும் புகழும் செல்வாக்கும் பெற்றிருந்த கல்கியின் மறைவு தமிழுலகுக்கு ஒரு பெரும் நஷ்டமே யாகும். அவரது பிரிவால் வருந்தும், அவரது குடும்பத்தாருக்கும், 'கல்கி'ப் பத்திரிகை நிர்வாகிகளுக்கும், 'கல்கி' வாசகர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

★



# விச்சுளி

## ரகுநாதன்

மாகுன்றனைய பொற்றோளான் வழுதிமன் வான்கரும்பின்
பாகொன்று சொல்லியைப் பார்த்து என்னைப்பார்த்திலன்; பையப்பையப்
போகின்ற புள்ளினங்காள்! புழற்கோட்டம் புகுவதுண்டேல்
சாகின்றனள் என்று சொல்வீர் அயன்றைச் சடையனுக்கே!

**ம**துராபுரியில்......

இரவு இரண்டாம் சாமத்தின் வரவை அறிவித்து அரண்மனைக் காவல்கூடத்திலிருந்து கண்டா மணி ஓசை கணீரென்று முழங்கியது. கருக்கிருளின்பயங்கரப்பேரமைதியைச் சிதைத்துச் சிலிர்த்து நடுங்கும் அந்த ரீங்காரத்வனி அரண்மனையின் விதானகூடங்களில் முட்டி மோதி எதிரொலித்து விம்மியது. அலை மேல் அலை பரப்பி அதிர்ந்த மணிச் சப்தம் தேய்ந்து இற்றுக் காற்றோடு கலந்து மோன சமாதி அடைந்தது.

மீண்டும் நிச்சுவாசப் பேரமைதி.

இருள் கவிந்து அமைதி நிலவும் அந்த இரவு வேளையில் இமைகள் கவிந்தும் இதயங்கள் கவியாமல் தறிகெட்டுப் பாயும் பல்வேறு சிந்தனைகளோடு மூவர் தவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் மன்னர் மன்னன் மதுராபுரிப் பாண்டியன்; மற்றவர் இருவரும் பெண்கள். ஒருத்தி பாண்டியனின் பட்ட மகிஷி பொற்றாமரையாள்; மற்றொருத்தி பூங்குழலி என்ற பாணக்கூத்தி.

மணியோசை மடிந்து மறைந்ததும், பாண்டியன் கண்களைத் திறந்து பார்த்தான். எதிரே சயனக் கிருஹத்தின் தூண்டா மணி விளக்கத்தின் சுடர் ஆடாது அசையாது குத்திட்டு நின்று அவனையே பார்ப்பது போலிருந்தது. அருகிலே கவிழ்ந்து சரிந்த அளகபாரத்தோடும் குலைந்து நெகிழ்ந்த ஆவியம் பூந்துகிலோடும் பொற்றுமரை படுத்திருந்தாள். விம்மியெழுந்து தாழும் அவளது மார்பகம் மெல்லிய சுடரொளியில் சகோரப் பறவைகளைப்போல் மோகனமாகக் காட்சி அளித்தது. அந்த மோகனகாரத்தில் விபரீத ஆசையால் வேட்கையுற்ற தன் கண்களையும் மனத்தையும் ஒரு கணம் லயிக்க விட்டான். அவன் கைகள் அவளையும் மீறி பொற்றுமரையாளின் ஆகத்தைத் தழுவின. எனினும் அதனுல் அவனது வேட்கை திசை மாறவோ, திரிந்துவிடவோ இல்லை. மனைவியின் ஸ்பரிசத்தால் அந்த ஆசை மேலும் புகைந்து கனன்றதே தவிர, பூத்து அடங்கவில்லை. திடீரென்று எழுந்து சென்று, கண்ணை உறுத்தும் அந்தச் சுடர் விளக்கை அவித்து விட்டு வந்தான் பாண்டியன்.

இருளின் அந்தகாரத்தில் அவனது அகக்கண்கள் அவளது மோகனத் திருவுருவை மானசீகமாகப் பிரதிஷ்டை செய்து ஆனந்தம் கொண்டன; அவன் மனம் அவளது திருநாமத்தை மந்திரோச்சாடனம் செய்யத் தொடங்கியது:

"பூங்குழலி! பூங்குழலி!"......

.... பூங்குழலி விறலியர் வகுப்பில் பிறந்து வளர்ந்த வேழம்பக் கூத்தி. சான்றோரின் உறைவிடமாய்ப் புகழ்ந்து பாடப்பட்ட தொண்டை வளநன்னுட்டின் தவப்பயன் அவள். தொண்டைநாட்டைச் சேர்ந்த புழற் கோட்டம் என்ற பிரதேசத்திலுள்ள அயன்றைப் பதியில் பிறந்தவள். அவள் லலிதகலைகளின் கண்கண்ட கலாசொரூபமாய்த் திகழ்ந்தாள்.

கண்ணைக்கவரும் எழிலும், கருத்தைக் கவரும் லாவண்யமும் நிறைந்து, புதுமெருகிட்ட பொற்சிலையாய் இருந்தாள் பூங்குழலி. இசை, நாட்டியம் முதலிய கலைகளில் அவள் கைதேர்ந்தவள். எல்லாவற்றையும் விட அந்தரத்திலே நின்று கழைக் கூத்தாடும் வித்தையில் அவள் பல்வேறு அசுரசாதனைகளைச் செய்யும் வலிமையும் பயிற்சியும் பெற்றிருந்தாள். மூன்று குலத் தமிழ் மன்னர்களிடமும் தனது அரிய வித்தைகளைக் காட்டி, பரிசில் பெற்றுப் போவதற்காக, அவள் தன் பாணர்களோடு வந்திருந்தாள். சேரனையும் சோழனையும் கண்டு, தன் வித்தைகளைச்செய்து காட்டியபின் அவள் கடைசியாக, மதுராபுரிக்கும் வந்து பாண்டிய மன்னனின் திருக்கொலுவிலே தன் கலாமேதையை அரங்கேற்றினுள்.

மதுரைக்கு அவள் வந்து ஒரு மாதகாலமாகிவிட்டது. பாண்டியனின் திருமுன்னர் அவளது கலா நிகழ்ச்சிகள் நித்தநித்தம் நடந்து கொண்டிருந்தன. நித்தநித்தம் பாண்டியனும் அவளுக்கு

பொன்னும் மணியும் ரத்தினமு மாக அள்ளிச் சொரிந்து கொண் டிருந்தான். யாழிசையாலும், கண்டத்வனியாலும், நடன அலங்காரத்தாலும், கழைமீது ஏறிக் கரணவித்தை செய்யும் அற்புத சாதனைகளாலும் அவள் பாண்டிய ராஜ சபையினரின் உள்ளத்தில் மட்டுமல்லாமல், மதுராபுரி மக்களின் மனத்திலும் நீங்காத ஸ்தானத்தைப் பெற்றுவிட்டாள். ஆனால்பாண்டியன் மனத்திலோ அவள் வெறும் கலாராணியாக மட்டும் இடம் பெறவில்லை. அவனது இதய ராணியாகவும் இடம் பெற்று விட்டாள்!

பூங்குழலியை கண்ட கணம் முதலே பாண்டியனின் மனம் அவள் பால் லயித்து விட்டது. நாளுக்கு நாள் அந்த லயானுபவம் வளர்ந்து பெருகி, ஆசையாக உருவெடுத்து, பின்னர் அடங்காத காமவேட்கையாக விகசித்து விட்டது.

"பூங்குழலி! பூங்குழலி!" அவன்மனம் மீண்டும்முனகியது.

அன்றொரு நாள்......

அன்றிரவு அவன் நகர் சோதனைக்காக வெளியே சென்றான். நகர் சோதனையாவது? பூங்குழலியின் மாளிகைக்குள் புகுவதற்கு ஏதாவது காரணம் வேண்டுமே! மாளிகையின் அருகே அவன் சென்றபோது, உள்ளேயிருந்து இனிய கீதம், காதல் கீதம் கேட்டது. பூங்குழலியின் குரல்தான். துணையை இழந்து வாடும் அன்றிலின் ஏக்கமும், சுகத்தை நாடித் தவிக்கும் இதயத்தின் சோகமும் அந்தக் கீதத்தில் பொங்கிப் பிரவகித்தது.

மன்னன் மனத்திலே ஒரு நிறைவு; ஒரு நம்பிக்கை: 'என் இதய வேட்கையின் எதிரொலி தானா அது? அவள் யாருக்காக ஏங்குகிறாள்? எனக்காகத் தானா?........'

"பூங்குழலி! பூங்குழலி!" மன்னன் மாளிகைக் கதவை மெதுவாகத் தட்டினான். கதவு திறந்தது. பூங்குழலி எதிர்ப்பட்டாள். மாடத்திலிருந்த விளக்கொளி மன்னனை இனம் காட்டியது.

"தாங்களா?.... அரசே!" அவள் குரலில் ஒரு நடுக்கம்; பயம்; தயக்கம்.

"ஆமாம், குழலி. நகர் சோதனைக்காக வந்தேன். உன் கானாமிர்தம் என்னைக் கவர்ந்திழுத்து வந்து விட்டது.... இந்த அகால வேளையில் நீ யாரை நினைத்து இவ்வாறு பாடிக் கொண்டிருந்தாய்? யார் அந்தப் பாக்கியசாலி?"

பூங்குழலியின் முகத்தில் புன்னகையும் நாணமும் ஒளிந்து மறைந்து உருத்திரிந்தன; விளக்கொளியில் அவள் முகம் சிவந்து கன்றியது. மன்னனின் மனம் பூரித்தது. மறுகணம் அவன் கை அவள் கரத்தை எட்டிப் பிடித்தது! தீயை மிதித்தவன் போல் கையை வெட்டிப் பிடுங்கிப் பின் வாங்கினாள் பூங்குழலி. அவள் முகத்தில் புகைந்த வெறுப்பும் உக்கிரமும் மன்னனை ஒரு கணம் நடுங்கவைத்தன.

"பொற்கைப் பாண்டியனின் மரபில் வந்த புண்ணியவான் தானா, தாங்கள்?.... மன்னர்

மன்னா! தயைசெய்து இப்போதே இங்கிருந்து போய்விடுங்கள்!''

மன்னனுக்குத் தன் பாரம் பரிய கௌரவம் ஒருகணம் நெஞ் சில் உறுத்தியது. எனினும் அந் தப் பாடல்?....

"குழலி! அப்படியானால்,.... நீ யாரை நினைத்துப் பாடினாய்?''

"என் காதலரை எண்ணி!"

"யாரவன்?"

"தாங்கள் அல்ல!''........

........கைகூடாக் காதலின் மனச் சுமை நெஞ்சை அழுத்த மன்னர் மன்னன் நெடிய பெரு மூச்சு விட்டான்.

'பூங்குழலி! பூங்குழலி நாளை என்னிடமிருந்து விடை பெற்றுக்கொள்வாள்! நிறைவே றாத என் ஆசைத் தீயை அணைக் காமல் இங்கிருந்து போய்விடு வாள். தன் காதலனைத் தேடிச் சென்று விடுவாள்!'....

மன்னன் மனம் நிலைகொள் ளாமல் தவித்துப் புலம்பியது.

அர்த்தசாம வேளையை அறி வித்து மணியோசை அலறி ஓய்ந் தது; கீழ்த்திசை மின்னல் வீச்சு தூரத்திலே தெரிந்த அதிதி மாளிகையின் கலச கோபு ரங்களை வரம்பிட்டுக் காட்டியது. அந்த மாளிகையில்தான் பூங்குழலி இருந்தாள்.

பூங்குழலி அந்த மாளிகையில் ஓர் புறத்தே சயனித்திருந்தாள். அவளுக்கும் அன்றிரவு தூக்கமே பிடிக்கவில்லை. உடம்புக்கு இதம் கொடுக்கும் அந்த ஹம்சதூளிகா மஞ்சம் அவளுக்கு முள்படுக்கை போல் உறுத்தியது. தூக்கம் கொள்ளாமல் புரண்டு புரண்டு தவித்துக் கொண்டிருந்தாள்....

அவள் மனத்திலே எண்ணற்ற உணர்ச்சிகள்: குதூகலம், ஏக்கம், வருத்தம், சோகம், பயம்.......

"பிறந்த நாட்டை விட்டுப் பிரிந்து எத்தனை நாட்களாகி விட்டன? பிறந்த நாட்டைப் பற்றிய வேட்கை மட்டும்தானா? சடையன்! அத்தான் சடையனை யும் பார்த்து எவ்வளவு காலமாகி விட்டது? சே! பரிசிலையும் புகழை யும் விரும்பி நான் எவ்வளவு நாட்களை அவமாய்க் கழித்து விட்டேன்! அத்தான் தானே சொன்னார்! 'பூங்குழலி! இந்த நாடு உன்கலைக்குத் தலைவணங்க வேண்டும்!' என்று!... அதனால் நான் அவரையே மறந்து இப் படிக் காலம் கடத்தியிருக்க லாமா?... எல்லாம் நாளையுடன் முடிந்துவிடும். பின்னர் நான் நேராக அத்தானிடம் ஓடிச் செல்வேன். இனிமேல் அவர் கட்டளையிட்டாலும் கூட நான் எங்கும் செல்லமாட்டேன்!...''

பூங்குழலி தன் அத்தைமகன், ஆசைக்காதலன் சடையநாதனை எண்ணி உருகினாள். சடையன் ஆணின் வீரலட்சியம்; பெண் ணின் அழகுலட்சியம். காஞ்சிமா நகரிலுள்ள குருகுலத்தில் அவன் சித்திரக்கலை பயின்று கொண்டி ருந்தான். அவன் இதயத்தின் எழுதாத ஓவியமாகத் திகழ்ந்தாள் பூங்குழலி; பூங்குழலியின் ஆடாத நடனமாகத் தோற்றமளித்தான் சடையன்!

"சடையா! சடையா!'' என்று முனகிக்கொண்டாள் பூங்குழலி. அந்தப் பெயரை உச்சரிக்கும் போது அவள் உடம்பெல்லாம் புளகித்துப் புல்லரித்தது. ஆனால் அதே கணம் அவள் மனத்தில் அந்த இனம் தெரியாத பய

வுணர்ச்சியும் சிலிர்த்து நடுங்கியது. மன்னனைப்பற்றிய பயமா அது?....

மூன்றும் சாமவேளையை அறிவித்து மணியோசை கணகணத்து ஓய்ந்தது. மணியோசையின் ஹுங்காரம் மங்கி மடிந்ததும், தொடர்ந்து அரண்மனையின் அட்டதிக்குப் பாலகர்கள் நாவலோசை யெழுப்பி, காவல் மாற்றும் பேரொலி கேட்டு மறைந்தது....

பொற்றாமரையாள் மூடிய கண்களைத் திறவாமல் உள்ளுக்குள் குமைந்துருகிக் கொண்டிருந்தாள். பூங்குழலி காலடி வைத்த நாள்முதலே அவள் மனத்தில் பொறாமைத் தீ கனன்று குமுறத் தொடங்கி விட்டது. பூங்குழலியின் மீது மன்னனின் மனம் நாடிவிட்டது என்ற உண்மையை அவள் அன்றே உணர்ந்துவிட்டாள். அரசனுடைய சிம்மாசனத்திலும், மஞ்சத்திலும், மனத்திலும், உடலிலும் உரிமைகொண்ட பொற்றாமரைக்கு, அரசனின் நயன பாஷையையும் அங்க அசைவுகளின் அர்த்த பாவத்தையும் ஆண்டாண்டுக் காலமாய்க் கண்டுணர்ந்து அனுபவித்து வந்த பட்டமகிஷிக்கு, மன்னனின் மனமும் கண்ணும் திசைமாறிச் சுழலுவதைத் தெரிந்துகொள்ளச் சிரமமே ஏற்படவில்லை.

"பூங்குழலி! சக்களத்தியைப் போல் இந்தச் சண்டாளி வந்து மன்னர் மனத்தை மயக்கி விட்டாளே! அவள் காலடி எடுத்து வைத்த நாள்முதல், என் மனநிம்மதியையே குலைத்து விட்டாளே!.... மன்னர் அவளை விரும்புகிறார். அவளும் மன்னரை விரும்புகிறாளா? விறலியர் வகுப்பில் பிறந்த விபசாரிதானே! பொன்னும் பொருளும் தானே அவள் லட்சியம்? அதைத்தான் தினமும் கொட்டியளக்கிறாரே! பின்னே?...

"ஆனால் நாளையுடன் அவள் நாடகம் முடியப்போகிறதாம்! பேர்பெற்ற விச்சுளி வித்தையைச் செய்து காட்டிவிட்டு அவள் மன்னரிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளப்போகிறாளாம்!... ஆனால் மன்னர் அவளைப் போகவிடாவிட்டால்?... அவளும் போகாவிட்டால்?......"

பட்டமகிஷியின் மனம் தனது உடைமைப் பொருளைப் பறிகொடுக்கும் உணர்ச்சியால் சினந்து புகைந்தது. அவள் மனத்தில் ஆக்ரோஷமும் பொறாமையும் குரோதமும் குழம்பிக் கலந்து கொந்தளித்தன.

"விச்சுளியாம், விச்சுளி!..." என்று அவள் உள்ளம் குமுறியது......

கடைச்சாமத்தின்முடிவைத்தெரிவித்து அரண்மனை மணியோசை மீண்டும் முழங்கியது. கீழ்த் திசை வானத்திலே விடிவெள்ளி மறைந்து வெள்ளிய பனிமூட்டம் போன்ற உதய ஜோதி பரவத் தொடங்கியது. துயில் நீத்து எழுந்த அந்தப்புரக் காவற் பெண்டுகளின் சிலம்போசை உஷத் காலத்தின் உதயராகம் போல இனிமையாக ஒலித்தது. புள்ளினங்களின் கீச்சுக் குரல் உலகுக்குப் பள்ளியெழுச்சி பாடியது.

ஆனால் மன்னர் மன்னனுக்கோ, பொற்றாமரைக்கோ, பூங்

குழலிக்கோ யாரும் பள்ளியெழுச்சி பாட வேண்டியிருக்கவில்லை! அவர்களில் யாருமே அன்றிரவு தூங்கவில்லை.

## 2

ராஜசபை கூடும் நேரத்தை அறிவித்து, சங்கும் எக்காளமும் கொம்பும் பறையும் குலவையிட்டு முழங்கின.

"தென்னன் புகழ் வாழ்க! மீனக்கொடி வெல்க!" என்ற நாவலோசை முழங்க, ராஜ தம்பதிகள் இருவரும் பரிவாரம் புடைசூழ, ராஜ சபைக்குள் பிரவேசித்தார்கள். வானளாவி நிற்கும் அரண்மனையின் முன் வாசல் கோபுரத்தின் நிழலிலே போடப்பட்டிருந்த மீனச்சின்னம் பொறித்த தங்கச் சிம்மாதனத்தின் மீது தம்பதிகள் இருவரும் அமர்ந்தார்கள்.

அரண்மனை முற்றத்துக்கு எதிரேயுள்ள வெட்ட வெளிப் பரப்பில் நாலு கோணங்களிலும் மூங்கில் கம்பங்கள் நடப்பட்டு அவற்றைச் செப்புக்கம்பிகளால் பிணைக்கப்பட்டிருந்தன. அந்தக் கம்பங்களுக்கு மத்தியில் அரண்மனையின் கலச கோபுரங்களின் மணி முகட்டையே விஞ்சி வளர்ந்து நிற்பதுபோன்ற ஒரு உயரமான கம்பம்.

அன்று நடக்கவிருக்கும் அதிசய வித்தையைக் காண்பதற்காக, காலையிலிருந்தே வந்து குழுமியிருந்த ஜனத்திரள் வெள்ளம் எதிரே அலைமோதிக்கொண்டிருந்தது. கம்பத்தினடியில் நின்ற பாணக்கூத்தர்களும் ஏவலாளர்களும் கம்பத்தை அடிக்கொரு தடவை பரிசோதித்துச் செப்பனிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"விறலியை வரச் சொல்!" என்று அதிகாரத்வனியில் மன்னனிடமிருந்து ஆக்ஞை பிறந்தது.

பூங்குழலியும், பாணர் தலைவனும் அரச சன்னிதானத்தின் முன்னர் அடிபணிந்து வணங்கி எழுந்தார்கள்.

"அரசர்க்கரசே! இன்று கடைசி நிகழ்ச்சியாகப் பூங்குழலி செய்துகாட்டவிருக்கும் விச்சுளி வித்தையை நீங்கள் எங்குமே கண்டிருக்க மாட்டீர்கள். கழைக் கூத்துக் கலையிலேயே இந்த விச்சுளி வித்தைதான் நிகரற்றதாகும். அதோ வானளாவித் தெரியும் சிகரக் கம்பத்தின்மேல் நின்று பூங்குழலி இதனைச்செய்து காட்டுவாள். அந்தக் கம்பத்தின் உயரே நின்றவாறு அவள் தன் மூக்கில் கிடக்கும் ரத்தின மூக்குத்தியைக் கழற்றி வானில் விட்டெறிவாள். அது கீழே விழு முன் அந்தக் கம்பத்திலிருந்து விச்சுளிக் குருவிபோல் துள்ளிப் பாய்ந்து, மூக்குத்தியை மூக்கிலணிந்தவாறு மீண்டும் கம்பத்தின் உச்சிக்குவந்துவிடுவாள். எல்லாம் ஒருகண நேரத்துக்குள் நடந்துவிடும். இந்த அரிய வித்தையை ஒருமுறைக்கு மேல் மறுமுறை செய்வது அரிது. எனவே எல்லோரும் இதனைக் காணத் தவறிவிடக் கூடாது" என்று வினயமாக வேண்டிக்கொண்டான், பாணர் தலைவன்.

"சரி, நடக்கட்டும்!" நிர்விசாரமாகக் கரகரத்தான் மன்னர் மன்னன். பாணனும் குழலியும் மன்னனை மீண்டும்வணங்கிவிட்டு கம்பத்தருகே சென்றார்கள்.

பூங்குழலி அன்று காண்போர் வியக்கும் வண்ணம் அழகுக்கு

அழகு செய்து வந்திருந்தாள். அவள் மூக்கில் கிடந்த ரத்தின மூக்குத்தி சூரிய ஒளியில் சப்த வர்ண ஜாலங்கள் காட்டிப் பள பளத்தது. சுற்றிநிற்கும் ஜனங்க ளெல்லாம் வாய் மூடி மௌனி களாய் வைத்த கண் வாங்காமல் நின்றுகொண்டிருந்தார்கள். பூங் குழலி தன் இடைக்கச்சையை ஒரு முறை வரிந்து கட்டி விட்டு, அந்த நெடிய கம்பத்தைப்பற்றி, பழக்கிளையில் தொத்திச்செல்லும் பசுங்கிளிபோல் அநாயாசமாக மேலேறிச் சென்று அதன் உச்சி யில் ஒயிலாக நின்று, தன் சமன் நிலையைக் கணித்தறிந்து நிதானித் துக்கொண்டாள். பின்னர் அந்தக் கம்பத்தின் உச்சியில் இருந்த வாறே சிறிதுநேரம் சிலவித்தை களைச் செய்து காட்டி எல்லோ ரையும் மகிழ்வித்தாள்.

கீழேயிருந்து குரல் கொடுக் கும் பாணனின் சமிக்ஞைகளுக் கும் உத்தரவுக்கும் ஏற்ப அவள் வித்தைகளைச் செய்து முடித் தாள். கடைசியாக, அந்தப் பயங்கரமான விச்சுளி வித்தை யைச் செய்ய அவள் முற்பட் டாள்.

எல்லோருடைய கண்களும் வானத்திலேயே, அந்தச் சிகரக் கம்பத்தின் உச்சியிலேயே, அதன் மீது நிற்கும் பூங்குழலியின் திருவுருவிலேயே நிலைத்து நின் றன. மூச்சு விடக்கூடப் பயந் தவர்கள் போல் எல்லோரும் வைத்த கண் வாங்காமல் மேலே பார்த்தார்கள். எங்கும் நெடிய மௌனம்.

கம்பத்தில் மீது நின்று எல் லோரையும் கைதொழுதுவிட்டு, பூங்குழலி தன் ரத்தின மூக்குத் தியைக் கழற்றினாள். நிர்மல மான வானவெளியில் பிரகாசிக் கும் சூரிய ஒளி அந்த ரத்தின மூக்குத்தியை எல்லோருக்கும் இனம் காட்டியது.

பூங்குழலி மூக்குத்தியை வான மண்டலத்தை நோக்கி விட்டெ றிந்தாள்; உயரே சென்ற மூக் குத்தி அறுந்து விழும் நட்சத் திரம்போல் ஒளி வீசிக்கொண்டு இறங்கி வந்தது; மூக்குத்தி தன் தலை மட்டத்துக்குமேலே வரும் போதே, பூங்குழலி அந்தக் கம் பத்தைத் உதைத்துக்கொண்டு மேல் நோக்கிப் பாய்ந்தாள்........

"நிறுத்து!......" என்ற திடீர்க் குரல் ராஜ சிம்மாசனத்திலிருந்து பிறந்தது! அங்கு நிலவிய பயங் கரப் பேரமைதியில் அந்தக் குரல் இடியோசை போல் ஒலித்தது! திடீரென்று எல்லோருடைய கண்களும் ராஜ சன்னிதானத்தை நோக்கித் திரும்பின.

அங்கு தன் இருக்கையை விட்டு எழுந்தவாறு, பட்ட மகிஷி பொற்றாமரையாள் நின்று கொண்டிருந்தாள்! மேலே சிக ரக் கம்பத்தின் உச்சியின்மீது பூங்குழலி நின்று கொண்டிருந் தாள்! அவள் மூக்கில் அந்த ரத்தின மூக்குத்தி பளபளத் தது!......

கீழே நின்ற பாணன் திடுக் கிட்டு விட்டான். பூங்குழலி கணப்பொழுதில் செய்து முடித்த வித்தையை எவரும் பார்க்க வில்லையோ என்று அஞ்சினான். நடுங்கும் உடலோடும் உள்ளத் தோடும் அவன் ராஜ சன்னி தானத்துக்குச் சென்றான்; வித் தையைச் செய்து முடித்த வெற் றிக் களிப்போடும் புன்னகை

யோடும் பூங்குழலி மறுகணமே கீழிறங்கி வந்து அரசனை வணங்கினள்.

"அரசர்தம் தேவி!ஏன் வித்தையை நிறுத்தச் சொன்னீர்கள்?" என்று பவ்வியமாகக்கேட்டான், பாணன்.

பொற்றாமரை கடகடவென்று.வாய்விட்டுச் சிரித்தாள்.

"யாரை ஏமாற்ற பார்க்கிறீர்கள்? பூங்குழலி மூக்குத்தியைக் கழற்றவும் இல்லை; எறியவும் இல்லை! அவள் எறிந்தது வேறொரு ரத்தினம்!" என்றாள்பட்டமகிஷி.

"இல்லை, அரசி! அவள் தன் மூக்குத்தியைத்தான் விட்டெறிந்தாள்!" என்றான் பாணன்.

"இந்த வித்தை வெறும் ஏமாற்று! ஏமாற்று இல்லையென்றால், இதே வித்தையை இங்கேயே, இப்போதே, மறுமுறை செய்து காட்டச்சொல், பார்ப்போம்!" என்றாள் அரசி.

"இல்லை அரசி! இந்த வித்தையை மீண்டும் செய்வது அவ்வளவு எளிதல்ல. இதனைச் செய்வதற்கு, பூங்குழலி ஆறுமாத காலத்துக்கு மேல் சுவாச பந்தன அப்பியாசங்கள் செய்து பயிற்சி பெறவேண்டும். ஆறு மாசம் பயிற்சி பெற்றால்தான் இதனை ஒரே ஒரு முறை செய்ய இயலும். அதற்கிடையில் என்று செய்தாலும், அவள் உயிருக்கே ஆபத்து!" என்று பரிதாபகரமாகவும் விளக்கமாகவும் கூறினான் பாணன்.

"ஏமாற்றுவதற்கு இதுவும் ஒரு வழியா?" என்று ஏளனச் சிரிப்பு தொனிக்கக் கேட்டாள் பொற்றாமரையாள்.

சபை முற்றும் நெடிய மௌனத்தில் ஆழ்ந்தது.

பூங்குழலி மன்னனைப் பார்த்தாள்; மன்னனின் கண்களோ அவள்மீது நிலைகுத்தி நின்றன. அந்தக் கண்கள் உணர்த்தும் பொருளைப் பூங்குழலி லகுவில் கண்டு கொண்டாள். 'எனது காதலை நீ ஏற்றுக்கொண்டால், இந்த இக்கட்டிலிருந்து உன்னைத் தப்பித்து விடுகிறேன்' என்று கூறுவது போலிருந்தன அந்தக் கண்கள்.

பூங்குழலி அரசியைப் பார்த்தாள். 'உன்னைப் பழிவாங்கத் தீர்மானித்து விட்டேன்' என்று பொறாமை பொங்கக் கூறுவது போலிருந்தன அரசியின் கண்கள்.

"என்ன சொல்கிறாய்?" என்று கேட்டாள் அரசி.

"பூங்குழலியின் உயிரைப் பணயம் வைக்க நான் சம்மதிக்க மாட்டேன்!" என்று அலறினான் பாணன்.

பூங்குழலி ஒரு கணம் பேசாது நின்றாள். அந்த ஒரு கணத்தில் அவள் மனத்தில் எண்ணற்ற காட்சிகள்! புயல்கள்! மதுரை நகரமே தன்னைப் பார்த்துச் சிரிக்கிறது. விச்சுளி வித்தை என்று சொல்லி ஊரை ஏமாற்றிய விந்தையைக் கேள்விப்பட்டு உலகமே சிரிக்கிறது! அந்த அவச்சொல்லைக் கேள்விப்பட்டு அவளுடைய அத்தான் சடையனே சிரிக்கிறான்! தான்

இத்தனை நாளும் சம்பாதித்து வந்த புகழும் சிரிக்கிறது! தான் பெற்று வந்த பரிசில்கள் சிரிக்கின்றன! பரிசளித்த வள்ளல்கள் சிரிக்கிறார்கள்! சிரிப்பு! சிரிப்பு! எக்காளச் சிரிப்பு! எளனச் சிரிப்பு! அவளால் பொறுக்க முடியவில்லை. அவளுக்குத் தன் உயிர் ஆபத்துள்ளாகி விட்டது என்றுகூடத் தோன்றவில்லை. அதற்குப் பதிலாக, அவளுடைய மானம், காதல், கற்பு, பெயர், புகழ் எல்லாமே சோதனைக்குள்ளாகி நிற்பது போல் தோன்றியது!

அங்கு நிலவிய சவ அமைதியைக் குலைத்துக்கொண்டு பூங்குழலியின் கணீரென்ற மணி நாதம் ஒலித்தது:

"பாண்டிமாதேவி! உங்கள் விருப்பம் போல் இதோ, இப்போதே, இந்தக் கணமே நான் மீண்டும் அந்த வித்தையைச் செய்து காட்டுகிறேன்!"

"குழலி! என்ன வார்த்தை இது?" என்று பரிதபித்தான் பாணன்.

"எனக்குத் தெரியும். என்னைச் சோதித்துக் கொள்ளுங்கள். நான் அணிந்துள்ள ரத்தின மூக்குத்தியைத் தவிர, பிற நகைகள் அனைத்தையும் களைந்து விடுங்கள்!" என்று உறுதியுடன் பதிலளித்தாள் குழலி.

மீண்டும் கூட்டத்திலே பரபரப்பு. மீண்டும் பேரமைதி. பூங்குழலி மீண்டும் ஒரு முறை கம்பத்தின்மீது ஏறி உச்சியில் நின்றாள்; எல்லோரும் பார்க்கும் வண்ணம் மூக்குத்தியைக் கழற்றி எடுத்து ஆகாயத்தில் விட்டெறிந்தாள்; அது இறங்கி வரும் சமயம் விச்சுளிப் பாய்ச்சல் பாய்ந்து, மூக்குத்தியை மூக்கில் தரித்தவாறு கம்பத்தின் உச்சிக்கு வந்து நின்றாள்.

கூட்டத்தினரிடையே திடீரென்று ஒரே ஆரவாரம் எழுந்தது. ஆனால் அந்த ஆரவாரம் ஓயும் முன்னமே பூங்குழலியின் உடல் திடீரென்று நிலை தடுமாறி அந்தக் கம்பத்தின் அகாத உயரத்திலிருந்து அடி சாய்ந்து விழுந்தது! கம்பத்தின் அடியில் நின்ற பாணனின் அவய ஓலம் அந்த ஜனக் கூட்டத்தையே நடுங்க வைத்தது!

"குழலீ!"......

கீழே வந்து விழுந்த பூங்குழலியின் பொன்னுடலைக் காண மன்னனும் மகிஷியும் விரைந்தோடி வந்தார்கள்; ஆனால், கபோலம் கீறிப் பிளந்து ரத்தப் பிரவாகத்திலே மூழ்கிக் கிடந்த பூங்குழலியின் பிணத்தைத்தான் அவர்கள் கண்டார்கள்! ஆனால் அந்த மூக்குத்தி—? அது தரித்த நிலையிலேயே இருந்தது!

பொற்றாமரையாள் வெறி பிடித்த பைத்தியம் போல் கடகடவென்று இடைவிடாது சிரித்தாள்! அவளது சிரிப்பின் அர்த்தம் புரியாமல் திகைத்து மயங்கினான் மன்னர் மன்னன். விச்சுளி வித்தையைப் பற்றி அவள் ஏற்கெனவே தெரிந்து வைத்திருந்தாள் என்ற ரகசியம் அவளைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்? ★




**திருச்சிற்றம்பலக் கவிராயர்**

கன்னம் சிவப்புறக் கன்னியர் தம்முளக்
காதல் விளம்புவ தும் — வெகு
நன்னய மாகவே இல்லற வாழ்வினில்
நல்லறம் பூணுவ தும் — அவர்
அன்னைய ராகி மதலையர் தம்மொடு
ஆனந்தம் காணுவ தும் — போர்
முன்னியெ ழுந்திடில் கண்ணிமைப்பில் மண்ணில்
மூடி மறையா வோ?

1

செல்லச் சிறுநடை பயிலும் குதலையர்
சிற்றில் சிதைப்பது வும் — மெல்ல
மெல்லவந் தேபெற்ற அன்னையர் தம்மடி
மீதில் அமருவதுவும் — தாயர்
முல்லை யரும்பெனும் பல்லொளி சிந்திட
முத்தம் பருகுவதும் — நமைக்
கொல்ல வரும்யுத்தப் பேய்புக நேர்ந்திடில்
கொள்ளைகள் போகா வோ?

2





துண்டுப் பிறைநிலா வாரியில், நுண்துளி
தூற்றும் இளம் பனியில் — கரு
வண்டு பயின்றிடும் இங்கித நாதத்தில்
வாசக்கு ளிர்மல ரில் — சுகம்
கண்டு குலவிடும் மக்களெலாம் சூறைக்
காற்றெனும் போர்வரு மேல் — எரி
குண்டு பட்டு வாழ்க்கை விண்டுபட்டு விழும்
கூக்குரல் கேளா வோ? 3

வானம் அளந்திடும் கோபுரமும் எழில்
வண்ணத்தின் சித்திர மும் — கலை
ஞானம் மலிந்திடும் சாத்திரமும் பல
நன்மைசெய் எந்திரமும் — மக்கள்
மானமும் வாழ்வும் உயர் நலமும் பெண்டிர்
மங்கல நாண்கயி றும் — கொடுங்
கூனச் சிறுமதிப் போர் வெறியால் அலங்
கோலங்கள் ஆகா வோ? 4

சீர்முனைந்தே குலம் வாழ்ந்து வளம்பெறச்
செய்தொழில் வல்லவ ரும் — நதி
நீர்முனை தேக்கியே கால்திருத்தி எங்கும்
நெல்லை விளைப்பவ ரும் — தங்கள்
ஏர்முனை நீங்கியே போர்வெறி யர்தரும்
எந்திரம் தாங்கிட வோ? — கொடும்
போர்முனை வந்திடில் பல்தொழில் சக்திகள்
போரில் அழியா வோ? 5



முத்துக் குளித்தெழும் கத்துகடலில், நீர்
மூழ்கி குளித்தெழ வோ? — நெல்
வித்து விளையும் கழனியி லேகுண்டு
வீசி விதைத்திட வோ? — நீர்
தத்தித் தவழ்நதி வெள்ளத்திலே மக்கள்
ரத்தம் பெருகிட வோ? — நமைச்
சித்திர வாதைசெய் யுத்தமெனும் கொடுந்
தீமை பரவிட வோ?

6

ஆயிர மாயிரம் கோடிலட்சம் மக்கள்
ஆவி குடித்த வெறி — காளி
கோயில் கிடாயென மக்கள் குலத்தினைக்
கொன்று குவித்த வெறி — பெற்ற
தாயர் புலம்பிட, மைந்தர்தம் ஆவியைத்
தட்டிப் பறித்த வெறி — யுத்தப்
பேயர்தம் ஆதிக்க வேட்கையி லேஉருப்
பெற்றதோர் யுத்த வெறி.

7

ரத்தவெறி கொடும் யுத்தவெறி சாம்
ராச்சிய வேட்டை வெறி — அன்று
நித்த நித்தம் கொரியா சிந்து ரத்தத்தில்
நீச்ச லடித்த வெறி — எழிற்
சித்திர பூமியைக் கொத்திக் குலைத்திடத்
திட்டங்கள் தீட்டும் வெறி — அதை
இத்தினமே குழி வெட்டிப் புதைக்கு மோர்
இயக்கமே சாந்தி நெறி.

8

ஆசிய மண்ணகம் தன்னிலோர் அன்னியன்
ஆதிக்கம் செய்ய விடோம் — கொடும்
நாசியர் கும்பலின் சூழ்ச்சிகளால் நமை
நாசப் படுத்த விடோம் — நந்தம்
தேசிய மக்களை பீரங்கித் தீனியாய்த்
தின்று கழிக்க விடோம் — விரி
காசினி எங்கணும் சாந்தி நிலவிடக்
கங்கணம் கட்டிடு வோம்.

9

ஆருயிர் தன்னைப்பி ளக்கும்செ யலுக்காய்
அணுவைப் பிளக்க விடோம் — நட்பின்
பேருதவி யெனப் போருதவி தரும்
பேரங்கள் பேச விடோம் — நந்தம்
நேருவின் ஐம்பெருங் கொள்கை நெறிநின்று
நேசம் வளர்த்திடு வோம் — இந்தப்
பாருல கெங்கிலும் சாந்தியின் இன்னிசை
பாடி மகிழ்ந்திடு வோம்.

10

சாந்தி நிலவுக வையமெலாம் மக்கள்
சந்ததம் வாழ்ந்திடவே — நிறை
சாந்தி நிலவுக மக்கள் மனைவியர்
சந்ததி வாழ்ந்திடவே — எங்கும்
சாந்தி நிலவுக நற்கலை பண்புசேர்
சாத்திரம் வாழ்ந்திடவே — உயர்
சாந்தி நிரந்தரம் எங்கும் நிலவிடச்
சாந்தி நெறி படைப்போம்.

11



★ குட்டிக் கதை

# நல்ல பெயர்

○

ஒரே ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தான்; அவன் தன் குடி ஜனங்களைப் பலவாறுகக் கொடுமைப்படுத்தி வந்தான். தன் குடி ஜனங்கள் அனைவருக்கும் ஒரு படி நெல்லைக் கொடுத்து ஒரு படி அரிசியாக அதனைத் திருப்பித் தரவேண்டும் என்று சட்டம் செய்திருந்தான். இந்த அநியாயத்தை எதிர்க்க வகை தெரியாது தவித்த மக்கள், அவன் கட்டளைப்படியே ஒரு படி நெல்லுக்கு ஒரு படி அரிசி செலுத்தி வந்தார்கள். இந்தக் கொடுங்கோலன் சாகமாட்டானு என்று தமக்குத் தெரிந்த தெய்வங்களையெல்லாம் கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் ஒருமட்டும் அந்தக் கொடுங்கோலன் மரணப்படுக் கையில் விழுந்து விட்டான். சாகப்போகும் நேரத்தில் அவன் தன் மகனை வரவழைத்து, "அப்பா நான் சாகப்போகிறேன். நான் செத்தபிறகு நீதான்பட்டத்துக்கு வரப்போகிருய்.நமது குடிஜனங் களிடம் எனக்கு நல்ல பெயர் வாங்கிக்கொடுப்பது உன் கடமை. அதை நீ செய்வாயாடா, ம க னே!" என்று அங்கலாய்த்துக் கொண்டான்.

"அப்படியே ஆகட்டும். உங்கள் கடைசி ஆசையை நான் நிச்சயம் நிறைவேற்றி வைக்கிறேன். உங்களுக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுக்கிறேன்" என்று கையடித்துச் சத்தியம் செய் தான் அந்த இளவரசன்.

பின்னர் அந்தக் கொடுங்கோலன் இறந்து விட்டான். அவன் இறந்த சில தினங்களில் அவனது மகனான அந்த இளவரசன் கோலாகலமாகப்பட்டத்துக்குவந்தான். பட்டத்துக்கு வந்ததுமே தன் அப்பன் ஒருபடி நெல்லுக்கு ஒருபடி அரிசி கேட்ட சட்டத் தை மாற்றினன். ஒருபடி உமிக்கு ஒருபடி நெல் தரவேண்டும் என்று அந்தச் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்தான்!

குடிஜனங்கள் பயந்து போய்விட்டார்கள். "தெய்வமே! செத்துப்போன ராஜா ஒருபடி நெல்லுக்குத்தானே ஒருபடி அரிசி கேட்டான். இந்தச் சண்டாளனே ஒருபடி உமிக்கு ஒருபடி அரிசி கேட்கிறுனே! அ ந் த ப் புண்ணியவானை எங்களிடமிருந்து கொண்டு போய் விட்டாயே. அவனுடைய செங்கோல் எங்கே? இவனுடைய கொடுங்கோல் எங்கே?" என்று அங்கலாய்த்து, தெய்வங்களைப் பிரார்த்திக்கத் தொடங்கினர்கள்.

இப்படியாக, மகன் அப்பனுக்கு நல்ல பெயர் வாங்கிவைத்து, தன் வாக்குறுதியைக் காப்பாற்றினன்! ★

# பாராட்டுக்கள்



[சாந்தியின் முதல் இதழை வாழ்த்தி வரவேற்று, அறிஞர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள், விற்பனையாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் முதலியோர் நமக்கு வாழ்த்துக்களும் ஆசிமொழிகளும் பாராட்டுரைகளும் வழங்கி ஏராளமான கடிதங்களை எழுதியுள்ளார்கள். அந்தக் கடிதங்கள் சிலவற்றின் சில பகுதிகளை இங்கு வெளியிடுகிறோம். வாழ்த்துக்கள் வழங்கிய அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைச் செலுத்திக் கொள்கிறோம் - ஆசிரியர்]

"...பலவகையிலும் பத்திரிகை சிறந்ததாயுள்ளது. மேன்மேலும் இப்பத்திரிகை சிறந்தோங்குமாறு இறைவன் துணை புரிக..."

**பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, சென்னை.**

"பத்திரிகை செல்வாக்குடன் வளர்ந்து திகழ வேண்டும் என்பது என் பிரார்த்தனை"

**வே. சாமிநாத சர்மா, எழுத்தாளர், சென்னை.**

"சாந்தி தங்களுடைய முத்திரையையும் தனித் தன்மையையும் முழுக்க முழுக்க ஏந்தி மிளிர்கிறது. புதிது புதிதாய்ப் பத்திரிகைகள்—ஆனல் போன சுவட்டிலேயே. இந்தமாதிரி அஜகதி நம்மைச் சோர்விலும், பெருமூச்சிலும் துவளச் செய்யும் தருணத்தில் புதிதாக ஒரு செய்தியைக் கொண்டு வரும், அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய தனித் தன்மையுடன் ஒரு முயற்சி நம்மைக் கண்டு முறுவலிப்பது எவ்வளவு நம்பிக்கையைத் தருகிறது!...."

**தி. ஜானகிராமன், எழுத்தாளர், சென்னை.**

"....முதல் இதழ் விஷயச் சிறப்புடன் நன்றாக இருக்கிறது. சிறு கதைகளும், கட்டுரைகளும் அருமை..."

**வல்லிக்கண்ணன், எழுத்தாளர், சென்னை.**

"...எழுத்தைப்பற்றி என் மனம் நிறைந்த பாராட்டை ஏற்றுக்கொள்ளவேண்டும். கதைகள் கட்டுரைகள், துணுக்குகள் கவிதை எல்லாமே மிகச்சிறப்பு"

**அகிலன், எழுத்தாளர், திருச்சி.**

"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்—இந்த வாசகத்துக்கேற்ற படியே தொழில் புரிந்திருக்கிறீர்கள். நீங்கள் வாழ்க! உங்கள் பத்திரிகை வளர்க!"

**வலம்புரி சோமநாதன், எழுத்தாளர், சென்னை.**

"சாந்தி கண்டு மகிழ்வு கொண்டேன். தங்கள் கலைப் பணியும் இலக்கியப்பணியும் தமிழ் மக்களுக்குப் பெரும் பயன் விளைப்பதாக!"

**ராஜ அரியரத்தினம், ஆசிரியர், "ஈழகேசரி".**

"ஸ்ரீ சிதம்பர ரகுநாதன் தமிழ் மக்கள் நன்கறிந்த நல்ல எழுத்தாளர். அவரை ஆசிரியராகக்கொண்டு சாந்தி மலர்கிறது. தமிழ் மொழியையும் தமிழர் வாழ்வையும் மேம்படுத்தவும் புதிய இலக்கியங்களைப் படைக்கவும் தோன்றியுள்ள சாந்தியை வரவேற்கிறோம். சாந்தி நீடூழி வாழ்க!"

**"சுதேசமித்திரன்" தினப்பதிப்பு, சென்னை.**

"சாந்தி உருவமும் உள்ளடக்கமும் வெகு சிறப்பு; வெகு சிறப்பு. திருச்சிற்றம்பலக் கவிராயர் 'நாம்' அருமையான கவிதை. ஓசை அழகும் கருத்தழகும் செவியை நிறைக்கிறது; சிந்தையை நிறைக்கிறது. கவிதை வெகுரம்மியம்; வெகுரம்மியம்"

**கே. ஏ. நம்பி, வாசகர், நாகர்கோயில்.**

"சாந்தியின் மறு இதழைப் பார்க்க மனம் துடிக்கிறது. சாந்தி மாத இதழ் வார இதழாகத் திகழ்ந்தால் தமிழ் மக்கள் பார்க்க ஆசைப்படுவார்கள் என்று நம்புகிறேன்..."

**சாகுல்ஹமீத், வாசகர், கொழும்பு.**

"உங்களுடைய பேச்சுக்களையும் எழுத்துக்களையும் கேட்கவும் படிக்கவும் வாய்ப்பு இல்லாமல் இங்கு இருக்கின்றோமே என்று ஏங்கிய எனக்கு உங்கள் சாந்தி. சாந்தியளித்தது. சாந்தியின் முதல் இதழே இவ்வளவு அருமையாக இருந்தால் இனி வரும் இதழ்களைப்பற்றிச் சொல்லவா வேண்டும்....?"

**சிவ. கோபாலகிருஷ்ணன், வாசகர், பம்பாய்.**

"...பத்திரிகை கச்சிதமாய் அமைந்திருக்கிறது..திருநெல்வேலியிலிருந்துகொண்டு இவ்வளவு நன்றாகக்கொண்டு வந்திருப்பதைப் பாராட்ட வேண்டும். 20-ம் தேதியிலிருந்தே பலர் வந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள். பத்திரிகை வெளிவந்ததும் நல்ல விற்பனை துவங்கி இருக்கிறது..."

**சே. செல்லப்பன், சாந்தி விற்பனையாளர், மதுரை.**

# பொங்கப் போமோ?

○

"அருளரசன்"

செம்பருதி திங்களெலாம் வாழ்த்தா நிற்பார்!
செழும் பொங்கல் பொங்க வென்று கூவா நிற்பார்!
தம்பழமை பெருமை யெலாம் தறுக்கிக் கூறித்
தைபிறக்க வழிபிறந்த தெனக்க ளிப்பார்!
கும்பலிட்டுக் குடிசைகளில் வாழுவோர்க்குக்
கும்மாளம் பொங்கிடுமோ? பொங்கப் போமோ?

மனைகளிலே சாலையிலே தெருவோ ரத்தே
வருத்தமுடன் இராப்பகலாய் வாழு வோர்கள்
தினைத்துணையும் பயனறியா துழைத்து வாடித்
திருவோடு கையேந்திப் பிச்சை ஏற்கும்
இனைத்தான இழிநிலையும் தீரா நாளில்
இன்பந்தான் பொங்கிடுமோ? பொங்கப் போமோ?

ஆண்டுக்கோர் நன்னுள்ள தம்மா! அந்தோ!
அளிப்பீரே பிச்சையெனக் கூவும் ஓலம்
மாண்டு விழும் நாளெந்நாள்? மகிழ்வால் ஏழை
வயங்கும் நாள் எந்நாளோ? வழக்கம் போலே
ஆண்டுதோறும் தைப்பொங்கல் வந்தே சென்றுல்
அகமகிழ்ச்சி பொங்கிடுமோ? பொங்கப் போமோ?

சில்லோர்க்கே நல்வாழ்க்கை என்ப தான
தியசமு தாயமுறை அமைப்பு மாறி
எல்லார்க்கும் எல்லாமே என்பதாகி
இல்லாதார் இருப்போர்கள் எல்லாம் மாறி
வல்லாராய் நல்லாராய் மக்கள் எல்லாம்
வாழ்வாங்கு வாழுமெனில் பொங்கப் போமே!




கிருஷ்ண சந்தர்

ஏப்ரல் மாதம். கிளைகளிலெல்லாம் பாதாம் மலர்கள் பூத்துச் செறிந்து கனத்துத் தொங்கின. வசந்தருதுவின் புரையோட்டம் அங்கு வீசிய குளிர் காற்றில் கலந்திருந்தது. நீண்டு வளர்ந்த துங்க மரங்களுக்கடியில் கார்காலத்தின் வெண்பனி திட்டுத் திட்டாகப் படிந்திருந்தது. தூரதிருஷ்டிக்கு, அந்தப் பனித்துகள்கள் வெண்மையான மலர்கள்போல் காட்சியளித்தன. மே மாதம் பிறந்து விட்டால், அந்தப் பனித் திரைகள் உருகிக் கரைந்து விடும்; பின்னர் கபில நிறங்கொண்ட பூதேவியின் திகம்பர மேனியில், பட்டுப்போன்ற பசிய புல்லிதழ்கள் வளர்ந்து போர்த்துவிடும்; பாதாம் மரங்களில் பச்சைப் பசிய பாதாம் காய்கள் கொத்துக் கொத்தாய் காய்த்துக் குலுங்கிக் கனக்கத் தொடங்கி விடும்; தூரத்தே தெரியும் நீலமலைச் சிகரங்களைக் கவிந்து போர்த்துள்ள மஞ்சுப் பனி மூட்டம் மறைந்துவிடும்; ஏரிக்கரைக்கு அப்பாலுள்ள புழுதி படிந்த சாலையில் ஆட்டுக்குட்டிகளின் சப்தம் எதிரொலிக்கும்; ஆடு மேய்க்கும் இளைஞர்கள் வருவார்கள்; துங்க மரத்தடியில் அமர்ந்து தங்கள் ஆடுகளைக் கண்காணிப்பார்கள்; அவர்களில் யாரேனும் ஒரு கோஷ்டிகான நாட்டுப் பாடலைப் பாடத் தொடங்குவார்கள். வசந்தத்தில் யார்தான் பாட மாட்டார்கள்?

வாழ்க்கையில் காதலையே முதலும் முடிவுமாகக்கொண்ட இலக்கிய சிருஷ்டிகள் மலிந்துவிட்ட காலம் இது. காதல்தான் பூர்ண வாழ்க்கையா? 'காதல் போயிற் சாதல்' என்பதுதான் வாழும் தத்துவமா? காதல் மகோந்நதமான மனித உணர்ச்சிதான்; எனினும் வாழ்க்கைஎன்பதோ அதைக் காட்டிலும் மகோந்நதமானது; மகத்தானது.

இந்த உண்மையை அடிப்படையாகக்கொண்டு, பிரபல உருதுக் கதாசிரியர் எழுதியுள்ள அலங்கார சித்திரமே இந்த அருமையான சிறுகதை.

ஆனால், இன்னும் மே மாதம் பிறக்கவில்லை;ஏப்ரல் மாதம்தான். தங்கப் பழுப்பு நிறங்கொண்ட துங்க மரங்களின் கெட்டியான கிளைகளில் இன்னும் பசுந் துளிர்கள் தளிர் விடவில்லை; நீல மலைச் சிகரங்களின் பனிமூட்டம் இன்னும் தெளியவில்லை; ஏரிக் கரைக்கு அப்பாலுள்ள சாலைவழி குளிர்ந்து விறைத்துப் போய் மோன சமாதியில் மூழ்கிக் கிடந்தது. தாமரை மலர்களெனும் அகல் விளக்குகளை ஏற்றி யேந்தி, வசந்தருதுவை வரவேற் கும் ஏரிப்பரப்பு செயலற்றுக் கிடந்தது. அந்தச் சின்னஞ்சிறு அகல் விளக்குகள் ஒரு வேளை அந்தப் பச்சைப் பசிய நீலநிற ஏரியின் உந்தித் தலத்தில் எங்கோ ஒளிந்து கொண்டிருந்தன போலும்! வசந்த பருவம் வந்து விட்டாலோ, அந்த மலர்கள் ஒன் றன் பின் ஒன்றாக நீர் மட்டத் துக்கு வந்து தலை காட்டும்; கண்ணாம்பூச்சி விளையாடும் குறும்புக் குழந்தைகளைப்போல் செல்லச் சிறு நகையுடன் வெளியே வரும். ஆனால், இப் போதோ ஏரியில் தாமரைப் புஷ்பங்களையே காணவில்லை; ஏனெனில் ஏப்ரல் மாதம்தான் கார் காலத்தின் அந்திப்போது; இப்போதெல்லாம் பாதாம் பூக்கள் மட்டுமே வெள்ளைவெளே ரென்று பூத்துக் குலுங்கும்; பசிய நீலம் கலந்த ஏரிப்பரப்பின் மீது குலுங்கி அதிர்ந்து கொட்டி உதிரும்; நீர்ப்பரப்பின் மீது விழுந்து மிதக்கும் அந்த வெள்ளிய மலர்க் கூட்டம், வசந்தத்தின் வரவை எதிர் நோக்கிக் காத்திருக்கும் வெண் பல்லக்குகளைப் போல் அசைந் தாடிக்கொண்டிருக்கும்.......

மரப் பாலத்தில் சாய்ந்து குனிந்தவாறு, நான் அவள் வரவை எதிர் நோக்கி நின்றேன். ஆனால், அவள் வந்த பாடாய்க் காணோம். அந்திமாலை அஸ்த மனச் செக்கர் வெள்ளமாக மாறிக்கொண்டிருந்தது. பெரிய படகு வீடுகள் பாலத்தைக் கடந்து, உல்லார் ஏரியின் திசை நோக்கிச் சென்று கொண் டிருந்தன. அந்தப் படகு வீடு களின் மீது சந்தியாவின் வண் ணக் கோலங்கள் பட்டுத் தெறித்து விளையாடும் கோலா கலத்தை நான் வெகுநேரம் ரசித் துக் கொண்டிருந்தேன். பொன் னிறம், இளஞ்சிவப்பு, கருஞ் சிவப்பு, இளம் பழுப்பு, கரும் பழுப்பு — இப்படியாக அந்த நிறங்கள் மாறி மாறி இருளத் தொடங்கின; கடைசியாக என்னைச் சுற்றிலும் இருளே கவிந்துவிட்டது. இருளில் அந்தப் படகுகள் என் கண் ணுக்குத் தெரியவில்லை.

திடீரென்று நான் குளிரால் நடுங்கினேன்; என் கழுத்தை உயர்த்தி சுற்றுமுற்றும் பார்த் தேன். இருள் எங்கும் பரவி விட்டது; ஏரியின் மீதும், பாலத் தின் மீதும், பாதாம் மரங்களின் மீதும் பரவி விட்டது; ஆளரவ மற்ற சாலைவழி அந்தகாரத்தில் மூழ்கிவிட்டது. வீடு நோக்கிச் செல்லும் வழிப்போக்கன் ஒரு வனின் உல்லாச கீதத்தைப் போல, இருளின் அமைதியூடே

வானமண்டலத்தில் முதல் தாரகை பூத்து மினுங்கியது;காற்றின் சீதம் அதிகரித்தது; பனிக் காற்றின் வேகத்தினுல், என் நாசித் துவாரங்கள் நமநமத்து நடுங்கின. பின்னர் நிலவு உதய மாயிற்று......!

திடீரென்று நான் அவளைக் கண்டேன்; சாலை வழியிலுள்ள பாதாம் மரங்களுக்கூடாக, அவள் ஒரு வன தேவதையைப் போல் ஓடி வந்து கொண்டிருந் தாள். அவள் என்னைக்கண்டதும் நின்று விட்டாள். பின்னர் அவள் தன் நடையைத் துரிதப் படுத்தி, என்னை நோக்கி ஓடோ டியும் வந்தாள்.

அவள் தனது மெல்லிய விரல் களால் என் தோளைத் தொட்ட போது, அவள் இரைக்க இரைக்கப் பெருமூச்சு வாங் கினுள்; பின்னர் அவள் நீண்ட நெட்டுயிர்ப்புடன் தன் தலையை என் தோள் மீது சாய்த்தாள். அவளது நீண்ட கரிய அளகச் சுருள்கள் என்னுள் ஆழப் புதை வதுபோலிருந்தன; அந்தக் கருங் குழல் கற்றைகள் என் கழுத் தைச் சுற்றிலும் விழுந்து மூடின. அவற்றின் பட்டுப் போன்ற குளிர்ந்த ஸ்பரிச சுகத்தை அனு பவித்தவாறே நான் அவளை நோக்கிக் கூறினேன்:

"உனக்காக நான் வெகு நேர மாய்க் காத்துக்கொண்டிருக்கி றேன்."

"எனக்குத் தெரியும்" என்று சிரித்துக்கொண்டே கூறியவாறு அவள் தன் மென்சிறு கரத்தை என் கரத்தோடு சேர்த்தாள். என் தோளை மறுபடியும் தொட் டாள்; பின்னர் அந்தக் கரத்தை என் தோள் மீது வைத்தாள். பாதாம் மரத்திலிருந்து ஒரு மெல்லிய வெள்ளிய மரக்கிளை ஒடிந்து ஒசிந்து என் தோள்மீது விழுந்து கிடப்பதைப் போன்ற சுகத்தை நான் உணர்ந்தேன்.

நாங்கள் இருவரும் நெடு நேரம் வரையிலும் பேசாதிருந் தோம்; அன்பு நிறைந்த அர வணைப்பில் பிணைப்புற்றிருந்தோம். உலகையே மறந்து, எங்களுக் குள் ஒருவருக்குள் ஒருவராக மனமிழந்து இன்ப லஹரியில் மூழ்கியிருந்தோம். பின்னர் அவள் என் பிணைப்பிலிருந்து விடுபெற்றவாறு, பேசத்தொடங் கினுள்: "சாலை வழியின் திருப் பம் வரையிலும் என் அப்பா என்னேடு துணைக்கு வந்து விட் டார். அவர் இங்கு வரையிலும் என்னேடு துணை வந்திருந்தால், நான் என்ன செய்திருப்பேன்? உங்களைக் கண்டும் காணுதது போல், கடந்து சென்றிருப் பேன். நல்ல வேளை! அவர் அங் கேயே திரும்பிப் போய்விட் டார்!"

"நீ அவரிடம் என்ன சொன்னுய்?"

"ராஜி வீட்டில் இன்று இரவு முழுவதும் நாங்கள் பாட்டுக்கச் சேரி நடத்தப் போகிறேம் என்று சொன்னேன். ஏனெனில் மலர் செறிந்த ஏப்ரல் மாதத்தின் கடைசி இரவு இது. எனவே எங்கள் கிராமத்திலும், அக்கம் பக்கத்துக் கிராமங்களிலும் உள்ள இளம் பெண்களெல்லாம்

இன்று இரவு முழுவதும் பாட்டும் கூத்துமாகப் பொழுது போக்குவது வழக்கம்...நான் நேரத்தோடேயே வரவிரும்பினேன். எனினும் எவ்வளவோ வேலைகளை முடிக்கவேண்டியிருந்தது; நெல் குத்த வேண்டியிருந்தது. மேலும், நேற்றுத் துவைத்துப் போட்ட என் துணிமணிகளும் காயவில்லை.....அம்மா விறகு பொறுக்குவதற்காகக் காட்டுக்குச் சென்று விட்டாள். அவள் வரும் வரையிலும், நான் காத்திருக்க வேண்டியதாகிவிட்டது.......அவள் வரும் வரையிலும் நான் காத்திராவிட்டால், நான் எப்படி உங்களுக்கென்று காட்டு இலந்தைப் பழங்களையும், பேரீச்சம் பழங்களையும், கரும்பையும் கொண்டு வந்திருக்கமுடியும்? பாருங்கள். உங்களுக்காக நான் என்ன கொண்டுவந்திருக்கிறேன் என்று! என் மீது கோபப்படாதீர்கள்! இந்த மாதிரி பராமுகமாய் இராதீர்கள். இதோ பாருங்கள். எப்படியும் நான் வந்து சேர்ந்து விட்டேன். நிலவும்கூட மேலே வந்துவிட்டது. வாருங்கள். ஏரிக்கரையிலுள்ள படகிலேறிக்கொண்டு, படகோட்டிச் செல்வோம். வாருங்கள். வாருங்கள் என்றாள்......"

அவள் என் கண்களையே பார்த்தாள்; நான் அவள் கண்களையே பார்த்தேன். அவள் கண்களில் வியப்பும் காதலும் விரவி ஒளிசெய்தன; பௌர்ணமி நிலவு மரச் செறிவின் ஊடாகப் பாய்ந்து வந்து என்னை இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தது. அந்தப் பால் நிலவு என்னிடம் பின்வருமாறு சொல்லிற்று: "அவள் சொல்வதே சரி. அந்தப் படகில் உன் காதலியை ஏற்றிக்கொண்டு, ஏரியின் மத்திய பாகத்துக்குப் படகோட்டிச் செல். இன்றுதான் ஏப்ரல் மலர்ச்சியின் இனிய இரவு; காஷ்மீரப் பள்ளத்தாக்கு முழுவதிலும் வெண்பனித் துகள்கள் போல, பாதாம் புஷ்பங்கள் கொட்டிக் குலுங்கிக் கிடக்கும் பருவத்தில் நடைபெறும் ஆனந்த கீதங்கள் ஒலிக்கும் திருநாள் இன்றுதான். இந்தக் கோலாகலத் திருநாளன்று அவள் தன் பெற்றோரையும், சகோதர சகோதரிகளையும், தோழிகளையும் விட்டுப் பிரிந்து, உன்னை நாடி வந்திருக்கிறாள். அமிர்தப் பாலைப்போல் அவளது இதயத்திலே காஷ்மீரத்துக் கானங்கள் பொங்கிப் பிரவகிக்கும் இந்தப் பௌர்ணமி நிலவு வேளையில் அவள் உன்னைத் தேடி வந்திருக்கிறாள். அவளது கழுத்தை அலங்கரிக்கும் அந்தச் சிவப்புக் கண்டசரத்தைக் கவனித்தாயா? இன்றைய திருநாள் வைபவத்துக்கு அவளது தாய் அவளுக்கு அன்போடு சூட்டிவிட்ட மணிமாலை அது. அந்த மாலையை அவள் கழுத்தில் அணிந்த போது அவள் தாய் அவளிடம் என்ன சொன்னாள், தெரியுமா? 'என் மகளே, போய்வா. இன்று இரவு நீ நன்றாகப் பாடவேண்டும். ஏனெனில் நமது அருமைத் திருநாட்டில் இன்றிரவில்தான் வசந்தம் மலரப் போகிறது. வசந்தருதுவின் வரவைக்கூறும் இந்தப்

பௌர்ணமி இரவில், குங்குமப் பூப் போன்று மலர்ந்து விரியும் உன் துவரிதழ்களிலிருந்து அரு மையான கீதங்கள் பிறந்து ஒலிக்கட்டும்'''.

அவளது கண்களின் கலங்கிய பார்வையின் மூலம் அந்த வட்ட நிலா எனக்கு இத்தனை கதையை யும் சொல்லிற்று. உடனே நான் முகத்தை வேறு பக்கம் திருப்பினேன். தூரத்திலே, ஜீலம் நதிப் பரப்பிலே, படகோட் டிகள் தங்கள் படகுகளில் விளக்கேற்றினர்கள். ஒரு வானம் பாடி களிப்புடன் பாடத் தொடங்கியது. பள்ளத்தாக் குக்கு அப்பாலுள்ள குக்கிரா மங்களிலிருந்து, நெடிய துங்க மரங்களின் ஊடாகத் திரிந்தலைந்து வரும் மெல்லிய பூங்காற்றில் பஹாரி கீதங்களின் இன்னி சையும், மான்விழி மடவார் களின் மங்கிய சிரிப்பொலியும், நாள் முற்றும் உழைத்தலுத்த மாந்தரின் ஆழ்ந்த, படபடப் பான பேச்சுக் குரலும், உணவு கேட்டு ஓலமிடும் சின்னஞ்சிறு குழந்தைகளின் மெல்லிய அழு கைக் குரலும் கலந்து வந்து எதிரொலித்தன. சுடு சோறு, பொறித்த மீன், கொதித்துக் கமழும் 'காரம் இலை' ரசம் முதலிய உணவுப் பொருள்களின் கமகமப்பையும் அந்தக் காற்று தூரா தொலையிலிருந்து சுமந்து வந்து பரப்பியது. என்னைச் சுற்றியுள்ள சூழ்நிலை யிலும், அவளுடைய கூட்டுறவி லும் என் மனம் திடீரென்று பூரண சாந்தியும் சந்துஷ்டியும் பெற்றது. நான் அவளது கரத் தை என் கரத்தால் பற்றியெடுத் தவாறு, அவளிடம் சொன் னேன்: ''வா, நாம் படகில் செல்லலாம்.''

நாங்கள் ஏரிக்கரையை நோக்கி நடந்தோம். பாலத் தையும், வரிசை வரிசையாக வுள்ள பாதாம் மரங்களையும், பசிய இளம் புல்லந்தரிசையும் கடந்து சென்றோம். ஏரியின் கரையோரமாக நாங்கள் இரு வரும் கைகோத்தவாறு மெது வாக நடந்து சென்றோம். தவளைகள் புதர்க்கூட்டங்களி லிருந்து முணமுணத்தன; மின் மினிப் பூச்சிகள் அங்கு மிங்கும் மின்னிச் சென்றன; இராக் காலத்தின் சின்னஞ்சிறு பூச்சி பொட்டுக்களான ஜிங்கார், பீண்டா, சீஞ முதலிய தும்பி யினங்கள் மெல்லிய, இனிமை யான சொப்பன சுகம் போன்ற ரீங்கார இசைகளை இசைக்கத் தொடங்கின; ஏரியின் மத்திம பாகத்தில் பூர்ணச் சந் திரன் காதலரின் வரவு நோக்கிக் காத்திருக்கும் வெள்ளைப்படகு போல் பிரதிபலித்து மிதந்து கொண்டிருந்தது; இந்தக் காதல் இரவுக்காக ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகக் காத்துக் கொண் டிருந்தது... எனக்காகவும் என் காதலிக்காகவும் காத்துக் கொண்டிருந்தது... லட்சோ பக் கணக்கான ஆடவருக்கா கவும், பெண்டிருக்காகவும் இந் தப் புனிதமான சிருஷ்டி உத யத்தின் இரவில் காத்துக்கொண் டிருந்தது.... முதன் முதல் காதலின் புனித முத்தத்தைப் பெறப்போகும் கன்னியெழிலைப்

போல் காத்துக்கொண்டிருந்தது....

சின்னஞ்சிறு மரப்படகு ஒன்று கரையருகே நின்ற ஒரு காட்டு இலந்தை மரத்தோடு கட்டப்பட்டுக் கிடந்தது. அங்கு ஏரிக்கரையின் மண் மெதுமணலாக, மிருதுவாக இருந்தது. ஏரிநீர் தரைமகளைத் தழுவி முத்தமிடுவது போல, கரையின் மீது அடிக்கடி அலைவீசி யெழுந்து வடிந்து கொண்டிருந்தது. நான் படகைக் கட்டவிழ்த்து விட்டேன்; பின்னர் அந்த இலந்தை மரத்தின் மெல்லிருளின் நிழலிலே அவளை என் கரங்களால் இழுத்தணைத்தேன்; முத்தமிட்டேன். ஏரித் தண்ணீர் ஏரிக்கரை மணலை விட்டுவிட்டுப் பலமுறை முத்தமிட்டு வடிந்தது; நானும் அதுபோல் அவளை விட்டுவிட்டுப் பலமுறை முத்தமிட்டேன். நான் அவளுடைய கண்களின்மீது முத்தமிட்டபோது, ஏரிப்பரப்பின்மீது கோடானு கோடித் தாமரை மலர்கள் மேலெழும்பி மலர்ந்து விரிந்தன; அவளது கன்னத்தில் முத்தமிட்டபோது, மந்த மாருதமெல்லாம் ஒன்று கூடி வீசி, நூற்றுக் கணக்கான இனிய கீதங்களை இசைக்கத் தொடங்கியது; அவளது உதடுகளில் நான் முத்தம் சொரிந்தபோது, தேவாலயங்களின் லட்சக் கணக்கான மணிகளெல்லாம் மனித விசுவாசத்தைப் பிரதிபலிக்கும் பெரும் பிரார்த்தனை கீதமாக வானமண்டலமெல்லாம் நிறைந்து ஒலித்தன; பூப்பரப்பின் மலர்க் குலங்களும், வான வெளியின் தாரா கணங்களும், மலைமுகடுகளின் மேகத்திரள்களும் ஒன்று கூடி உற்சாகமாகக் குலவையிட்டுக் கூத்தாடத் தொடங்கின; அவளது மெல்லிய சுவாசத்தின் நறுமணம் என்னுள் இனிய சுகந்தத்தைப் பரப்பியது. பின்னர் நான் அவளது நாடியில் முத்தமிட்டேன்; மெல்லிய பூங்கொடி மாதிரி வளைந்தொசியும் கழுத்தில் முத்தமிட்டேன்; என் உடம்பின் உணர்ச்சி வேகம் பூரண திருப்தி பெற்றது. எனவே தாமரை மலர்கள் மறைந்தன; பாட்டுக் குரல்கள் பம்மின; ஆனந்த நடனம் ஆழ்ந்த அமைதியில் திடீரென்று அடங்கி யமர்ந்தது. மீண்டும் தவளைகள் முணமுணத்தன; மெல்லிய சப்தத்தோடு ஏரியின் சிற்றலைகள் கரையில் மோதி வடிந்தன; அவள் என் தோள்மீது சாய்ந்தவாறே மெதுவாக விம்மிப் பொருமிக் கொண்டிருந்தாள்.

நான் அவளைப் படகினுள் தூக்கிச் சென்றேன். படகின் துடுப்பைக் கையிலேந்தி மெதுவாகத் துடுப்பை வலித்து, படகை உந்தித் தள்ளிச் சென்றேன். அவள் புன்னகை செய்தவாறே, மறுதுடுப்பை எடுத்துக் கொண்டாள். சிறிது நேரத்தில் எங்கள் படகு ஏரியின் மத்திய பாகத்துக்கே வந்து விட்டது. அங்கு ஏரி நீர் மிகுந்த அமைதியுடன் நிச்சலனமாக இருந்தது; எனவே எங்கள் படகும் அசைவற்று நின்றது. நாங்கள் இருவரும் எங்கள் கைகளில் இருந்த

துடுப்புக்களைப் படகினுள் போட்டுவிட்டு, நிலவைப் பார்த்தோம்.

அவள் சாதுர்யமாகப் புன்னகை புரிந்தவாறு, தன் பார்வையை நிலவிடமிருந்து திருப்பினாள். திருப்பி, எங்களுக்காக அவள் கொண்டு வந்திருந்த சிறிய உலர்ந்த பழங்கள் கொண்ட மூட்டையை அவிழ்த்தாள். அவள் தன் வாயில் ஒரு ஈச்சம் பழத்தைப் போட்டுக்கொண்டவாறே, எனக்கும் சில ஈச்சம் பழங்களைக்கொடுத்தாள்.

"இந்தப் பழங்கள் பலருசியும் கலந்தவை. இவை புளிக்கவும் செய்கின்றன; அதே சமயத்தில் இனிக்கவும் செய்கின்றன. அப்படித்தானே!" என்றாள் அவள்.

"அப்படித்தான்!" என்று நானும் ஆமோதித்தேன்.

"இந்தப் பழங்கள் போன வருஷத்து வசந்தருதுவில் சேகரித்தவையாக்கும்" என்றாள் அவள்.

நான் பழக் கொட்டையைத் தண்ணீருக்குள் எறிந்தேன்.

"ஆனால்,சென்ற வசந்தருதுவில் நீங்கள் மட்டும் இங்கில்லை!" என்று சொன்னாள்,அவள்......

ஆம். சென்ற வசந்த பருவத்தின் போது நான் அங்கு இல்லைதான். ஆனால் ஈச்சமரங்கள் அங்கு இருந்திருக்கும்; நான் தான் அங்கில்லை. ஈச்ச மரங்கள் அங்கு பூத்துக் குலுங்கவே செய்திருக்கும். செந்நிற இதய கமலங்களைக் கொண்ட சின்னஞ்சிறு வெள்ளிய ஈச்ச மலர்கள் சென்ற வசந்தருதுவின் போது மடல் பிளந்து உவகை பொங்கச் சிரித்துக் குலுங்கவே செய்திருக்கும்; அப்போது, நான்தான் அங்கில்லை. பின்னர் அந்த வெண் மலர்கள் சின்னஞ்சிறு பசிய ஈச்சம் பிஞ்சுகளாக மாறியிருக்கும்; அந்தப் பிஞ்சுக் காய்கள் மிகவும் சிறியதாகவும், புளிப்பாகவும் இருந்திருக்கும்; அவற்றைச் சிறிதளவு உப்புடனும், மிளகாய்ப் பழங்களோடும் மக்கள் தின்றிருப்பார்கள். அவற்றைத் தின்னும்போது அவர்களுக்கு நாக்கெல்லாம் ஜலம் ஊறியிருக்கும்; மூக்கிலும்கூட நீர் வழிந்திருக்கும்; எனினும் மக்கள் அவற்றை ரசித்துச் சாப்பிட்டிருப்பார்கள். சென்ற வசந்தத்தின்போது, அவளும் அந்தப் புளிக்கும் பிஞ்சுகளைத் தின்றிருப்பாள். நான் மட்டும் தான் சென்ற வருஷம் அங்கில்லை. பின்னர் அந்தப் பச்சைப் பசிய இளம் பிஞ்சுகள், மஞ்சளாகவும் தங்கச் சிவப்பு நிறமாகவும் மாறியிருக்கும். களிபொங்கும் கண்கள் கொண்ட விவசாயி மக்களுக்கு அவற்றின் நிறஜாலமும், பழச்சாறும், பழச் சாற்றின் ருசியும் பிடித்துப் போயிருக்கும். அவற்றைத் தமது வெளிறிய கைகளால் அவர்கள் பறித்துச் சேகரித்து, வீட்டுக் கூரைகளின் மீது சூரிய ஒளியில் உலரப் போட்டிருப்பார்கள். ஏனெனில் மறு வசந்தம் கோலாகலமாக வருங்காலத்தில், இனிப்பும் புளிப்பும் கொண்ட அந்த உலர்ந்த ஈச்சம் பழங்களை யாருக்காவது தின்னக் கொடுக்கலாம்

என்று அவர்கள் கருதியிருப்பார்கள்....

ஈச்சம் பழங்களைத் தின்று முடிந்ததும், நாங்கள் இருவரும் காட்டிலந்தைப் பழங்களைத் தின்னத் தொடங்கினேம். உலர்ந்த காட்டிலந்தைப் பழங்களைத் தின்னத் தொடங்கும் போது அவ்வளவு ருசி தட்டுப்படுவதில்லை. எனினும், அவற்றை வாயில் வெகுநேரம் வரையிலும் ஒதுக்கி வைத்திருந்து, பின்னர் மெல்ல மெல்லச் சுவைத்துத் தின்ருல், அவை தேனுகத் தித்திக்கின்றன.

'இவை மிகவும் தித்திப்பாய் இருக்கின்றன" என்றேன் நான்.

அவள் ஒரு இலந்தைக்கொட்டையை வாயிலிட்டுத் தனது வெள்ளிய சிறு பற்களால் கடித்துடைத்து, அதனுள் இருந்த பருப்பை எடுத்து என்னிடம் கொடுத்தாள்: "இதைச் சாப்பிட்டுப்பாருங்கள்!"

"அடடே! இது அசல் பாதாம் பருப்பு மாதிரியல்லவா ருசிக்கிறது. இதுபோன்ற இலந்தைப் பழங்களை நான் தின்றதே இல்லை" என்று கத்தினேன் நான்.

அவள் சொன்னுள்:"நான் சிறு பிள்ளையாயிருந்தபோது, என் அப்பா எனக்கென்று சிறிது நிலம் கொடுத்தார்; அந்த நிலத்தில் நான் வளர்த்துப் பயிராக்கிய என் இலந்தை மரத்தில் பழுத்த பழங்கள், இவை. அந்த மரத்தின் பழங்கள் எல்லாப் பழங்களையும்விட இனிப்பானவை. அந்த மரத்தின் பழங்கள் நன்கு செக்கச் சிவந்து பழுத்துக் குலுங்கும்போது கிராமத்திலுள்ள என் சிநேகிதிகள் எல்லாம் அந்த மரத்தடியில் வந்து குழுமிக்கொள்வார்கள்; தங்களுக்குப் பழம் பறித்துத் தரும்படி என்னை நச்சரித்துவிடுவார்கள். சென்ற வசந்தத்தின் போது..........."

நான் அங்கு இல்லாத காலமான சென்ற வசந்தத்தை நினைத்துப்பார்த்தேன். அவளுடைய சின்னஞ்சிறு நிலத்தில் அந்த இலந்தை மரம் நின்ற காட்சியைக் கற்பனை பண்ணினேன். சென்ற வசந்தத்தில் அந்த மரம் முழுவதும் பச்சைப் பசிய இலைகள் நிறைந்து இருந்திருக்கும்; கொட்டையில்லாத, புளிப்புள்ள இளம் இலந்தைப் பிஞ்சுகள் அந்த மரத்தில் கொத்துக் கொத்தாய்க் காய்த்திருக்கும். காஷ்மீர் பள்ளத்தாக்கிலுள்ள விவசாய மக்கள் அந்தப் பிஞ்சுக் காய்களைத் துவையல் அரைத்து ருசித்துச் சாப்பிட்டிருப்பார்கள். பின்னர் அந்தப் பிஞ்சுக் காய்களுக்குள் பிஞ்சுக்கொட்டைகள் தோன்றியிருக்கும்; நாளாரம்பத்தில் அந்தக் கொட்டைகள் முற்றி முதிர்ந்து கெட்டியாகியிருக்கும். அப்போதும், அந்தப் பச்சை இலந்தைகள் புளிக்கவே செய்திருக்கும். எனினும் அதன் கொட்டையிலுள்ள பருப்பு மட்டும் அப்போதும் சுவையாகவும் மிருதுவாகவும் மென்மையாகவும் இருந்திருக்கும். சிருஷ்டியின் அற்புதம் மேலும் மேலும் நிகழ்ந்துகொண்டிருக்கும்

போதே, அந்தப் பச்சைக் காய்கள் அருணோதயச் செக்கரைப்போல் நிறம்மாறிப் பழுத்திருக்கும்; இதோ இந்தக் காஷ்மீர யுவதியைப்போல் இனிமை நிறைந்ததாய் மாறிப் போயிருக்கும். மரகதச் சோலையாகவுள்ள மரக்கிளைகளிலே அந்தப்பழங்கள் பழுத்துச்சிவந்து பொன்னொளி வீசிக்கொண்டிருந்திருக்கும். அவள் தன் சகோதரனை அந்த மரத்தின் மீது ஏறி, பழங்களைப் பறித்து, தன் தோழியரிடம் விட்டெறியச் சொல்லியிருப்பாள். ஆஹா! நான் அங்கு இல்லாத சென்ற வருஷ வசந்தத்தின்போது அந்தப் பழங்கள் எவ்வளவு இனிமையுடையதாய் இருந்திருக்கும்!...

பின்னர் நாங்கள் சோளக் கதிர்களைத் தின்னத் தொடங்கினோம். புதிதாக உழப்பட்ட மண்ணின் மணத்தைப்போல், அந்தக் கதிர்களில் ஒரு இனிய மணம் நிறைந்திருந்தது. நெருப்பிலே வாட்டப்பட்டிருந்தபோதிலும், முத்துப்போன்ற அந்தத் தானிய மணிகள் தமது பொன்னொளியை இழந்துவிடவில்லை.

"இவைகூட நன்றாயிருக்கின்றன" என்றேன் நான்.

"ஆமாம். சென்ற அறுவடையின்போது பயிரான எகிப்திய நாட்டுச் சோளம் இது! இதை நான் ஒரு மண்பானையில் பத்திரமாகப் போட்டு வைத்திருந்தேன்" என்றாள் அவள். அந்தக் கதிரிலுள்ள முதல் வரிசையை நான் தின்று முடித்தேன்; பின்னர் அவள் அதன் இரண்டாவது வரிசையைத் தின்றுவிட்டு, கதிரை என்னிடம் தந்தாள். நான் மீண்டும் இரண்டு வரிசைகளைக் காலி செய்துவிட்டு அவளிடம் கொடுத்தேன். இப்படியாக, அந்தக் கதிரில் வரிசை குலையாமல் இருந்த தானிய மணிகள் அனைத்தையும் நாங்கள் தின்று தீர்த்தோம். ஆம். சென்ற வசந்தத்தின்போது நான் அங்கில்லை; எனினும் சென்ற அறுவடையில் விளைந்த தானியக் கதிர் நன்றாகத்தான் இருந்தது!

ஆனால், என் காதலி—அவள் அங்கிருக்கத்தான் செய்தாள். அவளுடைய தந்தை நிலத்தை உழுது பயிரிடத்தான் செய்தார்; மேகங்கள் மழை பொழியத்தான் செய்தன; வானத்தை நோக்கி, சிருஷ்டியின் மரகதப் பதாகைகளை வீசியாட்டி, பூமி களிகொள்ளவே செய்தது. என் காதலியும் தன் தாய் தந்தையரோடும், சகோதர சகோதரிகளோடும் அந்த நிலத்தில் பாடுபட்டிருப்பாள். எனவே அந்தச் சோளப் பயிரின் மரகதப் பதாகைகள் நன்கு செழித்து வளர்ந்து, கத்தி முனையைப்போன்ற கூர்மை படைத்த நெடிய கதிர்த் தாள்களோடு விம்மி வளர்ந்திருக்கும். ஒரு தாய் தன் குழந்தையை வயிற்றில் பாரமேற்று வளர்ப்பதைப்போல, தானியக் கொத்துக்கள் கதிர்த்தாள்களினூடே பச்சைப் பசியதாய் வளர்ந்து வந்திருக்கும். அந்த வயல் வெளி எங்கணும், கைகளிலும் வயிற்றிலும் குழந்தைகளைத் தூக்கிச் சுமக்கும் தாய்மார்களைப்போல் எண்ணிறந்த கதிர்கள் வளர்ந்து

நிறைந்திருக்கும். முதலில் அந்தத் தானியக் கதிர்கள் மெல்லிய பசும் இலைகளால் போர்த்தப் பட்டு வெள்ளை வெளேரெனத் தோன்றியிருக்கும்; அந்தக் கதிரை நகத்தால் மெல்லக் கீறினல், வெண்மையான தானியப் பால் வழிந்தோடியிருக்கும். அந்த வெள்ளைப் பால் கபில நிற மண் வளத்திலிருந்து உருவாகிச் சுரந் திருக்கும்; ஆனல், அப்போது நான் மட்டும் அங்கில்லை. பின்னர் சில நாட்களில் அந்தத் தானியப்பால் கெட்டித்து, நிறம் மாறி, தானிய மணி நிறைந்த இளங்கதிர்களாக முற்றி வளர்ந் திருக்கும். அப்போதும் நான் அங்கில்லை; அவளும் எனக்காகக் காத்திருக்கவில்லை. பயிர்கள் அறுவடையாகி, வயல் வெளி களில் அம்பாரமாகக் குவிக்கப் பட்டிருக்கும்; பின்னர் அந்தத் தானியப் போரிலிருந்து, கதிர்கள் இழுத்துப் பரப்பப்பட்டிருக்கும்; மாடுகள் அந்தக் கதிர்களைப் பிணையலடித்து, தானியம் வேரு கவும், வைக்கோல் வேருகவும் பிரித்திருக்கும். அந்தக் கதிர்களில் சிலவற்றை, சிறந்தனவற்றை, ஒரு சிறு மண் பானைக்குள் சேகரித்து ஒளித்து வைத்துவிட்டு அவளும் அங்குள்ள ஏனைய குடியானவப் பெண்மணிக ளோடு ஆடிப்பாடிக் களித்திருப் பாள். எனினும் அப்போது நான் அங்கில்லை. பூமியும், வாழ்க்கையும், காதலும், சிருஷ் டியும், சுவை நிறைந்த சோளக் கதிரின் பொன்னெளியும் அங் கிருந்திருக்கும்; ஆனல் நான் மட்டும்தான் அங்கில்லை.

நான் அவளை ஆனந்தம் ததும் பப் பார்த்தவாறே அவளிடம் பேசினேன்: "இன்றிரவு நிலவும் பூர்ணப் பொலிவோடு விளங்கு கிறது. எல்லாமே நிறைவுடனும் செழிப்புடனும் விளங்குகின் றன. நேற்றுவரையிலும் இப்படி இல்லை. இன்று எல்லாமே பூர்ண சந்திரோதயம்போல் பொலி வுற்று விளங்குகின்றன. இல்லையா?"

அவள் அந்தத் தானியக் கதிரின் கடைசி வரிசையில் பாதி யைத் தின்று, மறு பாதியை என் உதட்டருகே, அவளது இதழ் ஈரத் தை இன்னும் உணர்ந்துகொண் டிருக்கும் என் உதட்டருகே கொண்டு வந்தாள். "நான் உன்னை முத்தமிடப் போகிறேன்" என்றேன் நான்.

"கூடாது. இந்தப்படகு சின் னப் படகு. இது கவிழ்ந்து விடும். நாம் மூழ்கிப்போவோம்!" என்று கத்தினள், அவள்.

"பின் என்னதான் செய் வது?" என்றேன் நான்.

"மூழ்கியே போவோமே!" என்ருள் அவள்...

* * *

அந்தப் பௌர்ணமி இரவை நான் என்றும் மறந்ததில்லை. இப் போது எனக்கு எழுபது வயது ஆகிறது; எனினும் எல்லாம் நேற்று நடந்ததுபோல், அந்த நாட்கள் என்மனசில் பசுமை குன்ருமல் பதிந்து இருக் கின்றன. அந்த நாட்களில் அவளைக் காதலித்தது போல், என் ஆயுளில் நான் வேறு யாரை யும் அப்படிக் காதலித்ததில்லை என்றே சொல்லவேண்டும். ஒரு

வேளை அவளும் பின்னர் அப்படி வேறு யாரையும் காதலித்திருக்க மாட்டாள். அந்தப் பூர்ண சந்திரோதய இரவு எங்கள் இருவரையும் ஏதோ ஒரு அதிசயமான பிரேம பாசத்தால் பிணைத்து இணைத்து விட்டது; மேலும் அவள் என்னோடு துணிந்து ஓடி வந்துவிட்டாள்; அதன் பின்னர் அவள் தன் பெற்றோரிடம் திரும்பிப்போகவே இல்லை. முதல் ஐந்தாறு நாட்களும் நாங்கள் அந்தப் பள்ளத்தாக்கில் இங்குமங்கும் சுற்றித் திரிந்தோம்; மரத்தடிகளில்படுத்துறங்கினோம்; சிற்றோடைகளின் களகளப்புக் கானத்தைக் கேட்டு மகிழ்ந்தோம்; எங்கள் காதலின் பரவச மயக்கிலேயே மூழ்கிக் கிடந்தோம். நான் ஏரிக்கரையில் ஒரு சிறு வீட்டை விலைக்கு வாங்கினேன்; அதில் நானும் அவளும் ஒருமாத காலம் ஆனந்தமாக வாழ்க்கை நடத்தினோம். ஒரு நாள் நான் அவளை நோக்கி, "ஒரு தோட்டக்காரனை நியமிப்பதற்காக, நான் ஸ்ரீநகர் வரையிலும் சென்று வருகிறேன். நமது வீட்டைச் சுற்றி, நாம் ஒரு அழகிய நந்தவனத்தைச் சிருஷ்டிப்போம்" என்று சொன்னேன். அவளுக்கும் என் யோசனை பிடித்திருந்தது.எனவே நான் மூன்று தினங்களில் திரும்பிவந்து விடுவதாகச் சொல்லிவிட்டு, ஸ்ரீநகருக்குப் புறப்பட்டுச் சென்றேன். வருவதாகச் சொல்லிச் சென்ற நாளில் நான் வந்து விட்டேன்; எனினும் அவளைத் திடுக்கிடச் செய்வதற்காக மெல்லப்பதுங்கிப் பதுங்கி வீட்டினுள் சென்றேன் அங்கு, அடுப்பங்கரையில் அவள் ஒரு இளைஞனோடு குதூகலமாகப் பேசிக் களித்துக் கொண்டிருந்தாள்; உடனே நான் திடீரென்று கதவுக்குப் பின்னால் மறைந்து நின்று கொண்டேன். அவர்கள் இருவரும் ஒரே தட்டில் ஒன்றாக அமர்ந்து உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சிலசமயம் அவன் அவள் வாயில் உணவை ஊட்டினான்; சிலவேளை அவள் அவன் வாயில் உணவை ஊட்டினாள்; சிரிப்பும் களிப்புமாக அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அதிருஷ்ட வசமாக அவர்களை நான்தான் கவனித்துக் கொண்டிருந்தேனே யொழிய, அவர்கள் என்னைக் கவனிக்கவில்லை. நான் அங்கு இல்லாத, அந்தச் சென்ற வருஷத்து வசந்த ருதுவின்போது அவளுக்குக் கிடைத்த பழைய காதலன்தான் அவன் என்று கருதியவாறு, நான் மீண்டும் பதுங்கிப் பதுங்கி வெளியே வந்து விட்டேன். 'வசந்தருதுக்கள் வந்துவந்து செல்லும்; பூர்ண சந்திரனும் உதயம் ஆகியாகி மறைவான்; அவளுடைய காதலும், ஒரு விபசாரியின் காதலைப்போல் ஆளுக்கு ஆள் தாவும். எனவே எனக்கும் வசந்தபருவம் முடிந்து, இலையுதிர் காலம் தலைகாட்டி விட்டது. எனக்கு இங்கு இனி வேலையில்லை' என்று சிந்தித்தவாறே, அவர்களை மீண்டும் சந்திக்காமலே நான் அந்த வீட்டை விட்டு வெளியேறி விட்டேன்; மீண்டும் அங்கு திரும்பிச் செல்லவே இல்லை......

இப்போது, நாற்பத்தைந்து வருடங்களுக்குப் பின்னர் நான் மீண்டும் அந்தப் பள்ளத்தாக்கில் காலடி எடுத்து வைத்தேன். இப்போது என் மக்கள் என்னோடு இருக்கிறார்கள். என் மனைவி இறந்துபோனாள். எனினும் என் பிள்ளைகளும், அவர்களுடைய மனைவிமார்களும், அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளும் என்னுடன் இருக்கிறார்கள். தூரா தொலையிலுள்ள ஸ்ரீநகரிலிருந்து காஷ்மீர நாட்டின் இந்த ஏரிக்கரையைக் கண்டு களிப்பதற்காக நாங்கள் வந்திருக்கிறோம். இதுவும் ஏப்ரல் மாதம்தான். மாலை வேளை. மரப்பாலத்தின்மீது நின்றுகொண்டு, வெண்மலர்கள் குலுங்க எங்களை வரவு கூறித் தலையசைக்கும் பாதாம் மரச்செறிவை நான் காண்கிறேன். ஆளரவமற்ற சாலையின் திருப்பத்திலே, கையிலே சின்னஞ்சிறு மூட்டையைச் சுமந்து கொண்டு ஒரு இளம்பெண் என்னைக் கடந்து அவசர அவசரமாகச் செல்கிறாள். என்இதயம் ஒரு கணம் படபடத்துத் துடிக்கிறது........ மூண்டும் முடிச்சுமான துங்கமரத்தின் கிளையொன்றில் ஏறிக்கொண்டு, ஒரு பெண் தன் கணவனை அந்திவேளைச் சாப்பாட்டுக்காகக் கூவி அழைக்கிறாள்.... எங்கோ ஒரு கதவு திறந்து மூடப்படுகிறது... ஒரு குழந்தை அழுகிறது... பின்னர் அமைதி சூழ்கிறது... எங்கும், என்னைச் சுற்றிலும் அமைதி நிலவுகிறது...... தேவப்பிரார்த்தனையைப்போல், விவசாயிகளின் வீடுகளிலிருந்து புகைமண்டலம் எழும்பி, வானைத் தழுவுகிறது.... துங்கமரக்கிளைகளில் கூடுகட்டி வாழும் பறவைகள் சிறகடித்துச் சப்திக்கின்றன... பின்னர் மீண்டும் அமைதி நிலவுகிறது.... ஆறு மெதுவாகக் களகளத்து ஓடுகிறது... படகோட்டி தன் படகில் விளக்கேற்றுகிறான் .... தாரஸ்தாயியில் தனக்குத்தானே பாடிக்கொள்கிறான்........

நான் மெதுவாகப் பாலத்தைக் கடந்து சென்று, பின்னால் திரும்பிப்பார்த்தேன். என் பிள்ளைகளும், மருமக்களும், பேரன் பேத்திகளும் தமக்குள் சம்பாஷணையில் ஈடுபட்டவாறே என்னைப் பின் தொடர்ந்து வந்தார்கள். பாலத்தைக் கடந்து விட்டோம். பாதாம் மரவரிசைகள் வெட்ட வெளியான புல்லந்தரிசோடு முடிவடைந்தன...... ஏரியும் ஏரிக்கரை இலந்தை மரமும், இலந்தை மரத்தோடு கட்டப்பட்டுக் கிடக்கும் சிறு மரப்படகும், நாற்பத்தைந்து வருஷங்களுக்கு முன்னர் இருந்தது போலவே அங்கு இருந்தன. நான் குடியிருந்த வீடும் இருந்தது. ஆம். அதுதான் எனது முதல் வசந்தவீடு; அதுதான் பூர்ண நிலவின் இல்லம். அந்த வீட்டினுள் விளக்கெரிந்தது; குழந்தைகளின் செல்லச்சிரிப்பொலி களகளத்தது. யாரோ ஆழ்ந்த கனத்த குரலில் பாடிக்கொண்டிருந்தார்கள். ஒரு வயதான கிழவி, "சும்மா இரு" என்று அதட்டினாள். மீண்டும் அமைதி நிலவியது. உள்ளே போவோமா என்று நான் யோசித்தேன். போவதால் இடையூறு

கிடையாது. எப்படியிருந்தாலும், அது என் வீடு. நான்தான் அதை விலைக்கு வாங்கினேன். சொத்துரிமைச் சட்டத்தின்படி அந்த வீடு எனக்கே இன்னும்சொந்தம். எனவே நான் உள்ளே சென்று அங்கு யார் வசிக்கிறார்கள் என்று பார்ப்பதில் தவறொன்றுமில்லை. எனவே நான் உள்ளே சென்றேன்.

வீட்டின் வெளி முற்றத்தில் சில குழந்தைகள் கண்ணாம்பூச்சி ஆடிக்கொண்டிருந்தார்கள்; ஒரு இளம்பெண் தன்கணவனுக்காக, கொதிக்கும் சுடு கஞ்சியை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு வந்தாள். என்னைக் கண்டதும், அவள் அந்தப் பாத்திரத்தைக் கையில் ஏந்தியவாறே நின்றாள். தங்கள் வீட்டினுள் வந்த அன்னியனைக் கண்டு, அந்தக் குழந்தைகளும் வியப்புடன் என்னைப் பார்த்தார்கள். மரத் தூணோடு ஒன்றி நின்ற ஒரு கிழவி அதிகாரத்வனியில் என்னை நோக்கிக் கேட்டாள்:

"நீங்கள் யார்? எங்கு வந்தீர்கள்?"

"இது என் வீடு" என்றேன் நான்.

"ஆமாமாம், இது உங்கள் அப்பன் வீடுதான்!" என்று அந்தக் கிழவி கிண்டலாகப் பதில் சொன்னாள்.

"என் அப்பன் வீடல்ல; என் வீடுதான். இந்த வீட்டை நான் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் விலைக்கு வாங்கினேன். இந்த வீட்டை வெறுமனே பார்த்து விட்டு போகத்தான் வந்தேன். ஏனென்றால்... ஏனென்றால்..." என்னால் அதற்குமேல் பேச இயலவில்லை. எனவே மறு பக்கமாகத் திரும்பி நின்று கொண்டு, "என்னை மன்னியுங்கள். நான் வெறுமனே இந்த வீட்டைப் பார்த்து விட்டுப் போகத்தான் வந்தேன். இங்கு வசிக்கும் யாரையும் வெளியேற்றுவதற்காக அல்ல" என்று சொன்னேன்.

அந்தக் கிழவி அப்படியே வியந்து விறைத்துப் போய் விட்டாள்; அவளது கைகள் தூணைப் பலமாக அணைத்துப் பிடித்துக் கொண்டன; எலும்பும் தோலுமாய் வெளிறிப் போயிருந்த அவளது கைவிரல்கள் சந்திர ஒளியில் பளபளத்துத் தெரிந்தன. அவள் நெடிய மூச்சு வாங்கிக் கொண்டு, தன் வியப்புணர்ச்சியை விழுங்கியவாறு, சிறிது நேரங்கழித்துப் பேசத் தொடங்கினாள்: "தாங்களா?....... தாங்களா?........"

வெகு நேரம்வரையிலும்அவள் குனிந்த தலை நிமிராமல், வாய் பேசாமல் அந்தத்தூணைஒட்டியே நின்றாள். வெகுநேரம் வரையிலும் நானும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். பின்னர் அவள் தன் தலையை மெதுவாக நிமிர்த்தியவாறு என்னைநோக்கிச் சாதுரியமாகப் புன்னகைசெய்து கொண்டேபேசத்தொடங்கினாள் "வாருங்கள்.... என் குடும்பத்தாரைப் பாருங்கள்...அதோ அவன்தான் மூத்தமகன்; இவன்தான் இளையவன். அதோ அவள்தான் என் மூத்தமகனின் மனைவி;

என் மருமகள். அந்த வாண்டுப் பயல்தான் என் தலைப்பேரன்; இந்தச் சின்னப்பெண்தான் என் பேத்தி!...... உஷ்!...... அவரை எழுப்பாதீர்கள். அவர்தான் என் கணவர். அவர் நன்கு தூங்கட்டும். அவருக்கு உடம்புக்குச் சுகமில்லை......"

பின்னர் அவள் என்னிடம் திரும்பி, "உள்ளே வாருங்கள்!" என்று வரவேற்றாள்.

நான் அவளைப் பார்த்தேன்; அவளுக்குப் பின்னாலுள்ள மண் சுவரைப் பார்த்தேன். அந்தச் சுவரில் அறையப்பட்டிருந்த ஒரு மூலைக் கம்பின்மீது, வறுத்த சோளக் கதிர்கள் மாலைபோலக் கட்டப்பட்டுத் தொங்கிக்கொண்டிருந்தன. நான் அந்தச்சோளக் கதிர்களைப் பார்ப்பதை அவள் கவனித்தாள்; அதைக் கண்டு, புன்னகை செய்தாள்.

"எனக்கு இப்போது ஒரு பல் கூட இல்லை!" என்றாள் அவள்.

"எனக்கும் ஒன்றிரண்டு பற்கள்தான் மிச்சம். என்றாலும் அவற்றைத் தின்ன முடியாது" என்றேன் நான். என் மக்கள் என்னைத்தொடர்ந்து அந்தவீட்டினுள் வந்து சேர்ந்தார்கள். சீக்கிரமே அவர்கள் அங்குள்ளவர்களிடம் பழகி, பரவசத்தோடு பேசிக் களிக்கத் தொடங்கி விட்டார்கள். நானும் அவளும் மட்டும் மெதுவாக வெளியே நழுவினோம். நாங்கள் இருவரும் ஏரிக்கரைப் பக்கமாகச் சென்றோம்.

"உங்களுக்காக, நான் ஆறு வருஷங்கள் வரையிலும் காத்துக் கிடந்தேன். நீங்கள் என் தேதியில் திரும்பி வரவில்லை!" என்று கேட்டாள் அவள்.

"நான் வந்தபோது, நீ ஒரு இளைஞனோடு இருக்கக்கண்டேன் எனவே திரும்பிப் போய் விட்டேன்!" என்றேன் நான்.

"இல்லவே இல்லை!"

"நிஜமாகத்தான் உன்னோடு ஒரு இளைஞன் இருந்தான். நீயும் அவனும் ஒரே தட்டில் சாப்பிட்டுக்கொண்டிருந்தீர்கள்; சிரித்துக் கொண்டிருந்தீர்கள். உங்கள் கண்களிலும் காதல் வேட்கை பிரதிபலித்தது. எனவே தான் நான்போய்விட்டேன்."

அவள் ஒரு கணநேரம் பிரமித்துப் போய் நின்றாள்! பின்னர் அவள் முகம்மலர்ந்தது; இடுப்பை இருகைகளாலும் இறுகப்பிடித்துக்கொண்டு, குலுங்கக் குலுங்க வாய் விட்டுச்சிரித்தாள்.

"என்ன விஷயம்? ஏன் இப்படிச் சிரிக்கிறாய்?" என்று கேட்டேன் நான்.

"என்னத்தைச் சொல்ல? அவன் என் சொந்தச் சகோதரன் தான்! நீங்கள்தான் உள்ளே வந்து சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளாமல் அசட்டுத்தனமாய் ஓடிப்போய்விட்டீர்கள்!"

திடீரென்று அவள் தன் சிரிப்பையெல்லாம் நிறுத்திவிட்டு அவளது வாழ்க்கை வரலாற்றை மெல்ல மெல்லச் சொல்லத் தொடங்கினாள்:

"நான் முழுசாக ஆறு வருஷ காலம் தங்களுக்காகக் காத்துக் கிடந்தேன். நீங்கள் போன

புதிதில், நான் மிகவும் துக்கித்தேன். பின்னர் எனக்கு ஒரு மகன் பிறந்தான். உங்கள் மகன் தான்! ஒரு வருஷம் கழித்து, அவன் இறந்து போனான். மேலும் நாலு வருஷ காலம் நான் உங்களுக்காகத் தவம் கிடந்தேன். பிறகுதான் நான் கல்யாணம் செய்து கொண்டேன்."

அவள் என்னைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

ஒரு சிறுவனும் சிறுமியும் வீட்டுக்குள்ளிருந்து எங்களை நோக்கி ஓடி வந்தார்கள். ஓடி வரும் அந்தப் பையனைச் சுட்டிக் காட்டியவாறே, "அவன்தான் என் பேரன்" என்றாள் அவள்.

"அவள் தான் என் பேத்தி!" என்றேன் நான்.

அந்தக் குழந்தைகள் எங்களை விட்டுப் பிரிந்து ஏரிக்கரையை நோக்கி ஓடத் தொடங்கினார்கள். நெடுநேரம் வரையிலும் நாங்கள் இருவரும் அமைதியோடு நடந்து வந்தோம். பின்னர் அவள் என்னருகே நெருங்கி வந்து என்னை நோக்கிப் பேசினாள்: "இன்று நீங்கள் வந்துவிட்டீர்கள். எனக்கு இப்போது துக்கமே இல்லை. பாருங்கள், எனக்கு இப்போது பெரிய குடும்பமும் குழந்தைகளும் இருக்கின்றன. நான் அவர்களோடு வாழ்கிறேன். இங்குள்ள காற்றோடும், மண்ணோடும், நீரோடும் வாழ்கிறேன். இன்று நீங்கள் வந்துவிட்டீர்கள். இனிமேல் எனக்கு எள்ளளவும் துக்கமில்லை. உங்களுக்கு வருத்தமாய் இருக்கிறதா?"

நான் ஒரு கணம் பேசாதிருந்தேன். பிறகு பேசினேன்: "இத்தனை வருஷ காலமும், உன்னைச் சந்தித்துவிடக்கூடாது என்ற பயத்தால் இங்கு வரவு மில்லை. ஆனால், இப்போது நான் இங்கு வந்துவிட்டேன். என் இதயத்திலும் இப்போது வேதனை இல்லை. உண்மையாகவே..."

ஏரிக்கரை ஓரமாக, நாங்கள் அமைதியாக நடந்தோம். குழந்தைகள் இருவரும் எங்களிடம் திரும்பி வந்து விட்டார்கள். அவள் என்னுடைய பேத்தியை வாரியெடுத்துக் கொண்டாள்; நானும் அவளுடைய பேரனைக் கையில் தூக்கிக் கொண்டேன். நாங்கள் இருவரும் ஒருவர் கண்களை ஒருவர் பார்த்து ஆனந்தித்தவாறே, அந்தக் குழந்தைகளை ஆலிசேர முத்தமிட்டோம். அப்போது தீக்ஷண்யம் நிறைந்த அவளது வயோதிகக் கண்களில் மீண்டும் பூர்ணிமை ஒளி பரப்பியது; அந்த நிறைநிலாப் பிரவாகம் என்னை நோக்கிப் பின்வருமாறு சொல்லிற்று:

"மனிதர்கள் மறைவார்கள். எனினும் வாழ்க்கை நிலைத்திருக்கும். இந்த ஆண்டின் வசந்த பருவம் கழிந்து மறையும்; எனினும் அடுத்த ஆண்டில் புதிய வசந்தம் பூத்து மலரும். ஆண் பெண்களின் பேதைமை நிறைந்த இளங் காதல்கள் வாடி மறையும்; எனினும் வாழ்க்கையின் மகோந்நத வேட்கை என்றென்றென்றும் நிரந்தரமாய் சிரஞ்

சியாய் நிலைத்திருக்கும். சென்ற வசந்தருதுவின் போது நீங்கள் இருவருமே இங்கில்லை; இந்த வசந்த ருதுவிலோ நீங்கள் இருவரும் வாழ்வின் வேட்கையை, மகிழ்ச்சியின் தாகத்தை ருசித்து அனுபவிக்கிறீர்கள். அடுத்த வசந்த ருதுவின் போது ஒரு வேளை நீங்கள் இருவரும் இங்கு இல்லாதிருக்கலாம். எனினும் வசந்தம் இங்கிருக்கும்; காதல் இருக்கும்; வாழ்க்கை இருக்கும். இளமை இருக்கும்; இதய பரவசம் இருக்கும். அழகு இருக்கும்; அன்பு இருக்கும்; அறிவறியாப் பேதைமையும் இருக்கும்..."

அந்தக் குழந்தைகள் எங்களை விட்டுப் பிரிந்து ஏரிக் கரையில் ஓடியாடி விளையாடத் தொடங்கி விட்டன. அவர்கள் இருவரும் கையோடு கை கோத்துக் கொண்டு, அங்குநின்ற இலந்தை மரத்தருகே சென்று, அதில் கட்டிப் போடப்பட்டிருந்த படகில் ஏறி அமர்ந்துகொண்டார்கள்.

நான் அவளை நோக்கிப் பரவசத்தோடு கேட்டேன்: "இது அந்தப் பழைய, — அதே இலந்தை மரம்தானே!"

"இல்லை, இது அதன் பேரன்" என்றாள் அவள்! ★

✱

## எத்தனுக்கு எத்தன்!

இரண்டு பணம்படைத்த எத்தர்கள் பங்காளிகளாகச் சேர்ந்து ஒரு சோப்புக் கம்பெனியை நடத்தி வந்தார்கள். அந்தப் பங்காளிகளில் ஒருவன் திடீரென்று படுக்கையில் விழுந்து விட்டான்; மரணம் அவனை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது அவன் தனது பங்காளியை வரவழைத்து, படுக்கைக்கருகில் அவனை அமர்த்திக்கொண்டு, அவனை நோக்கி மிகுந்த வருத்தத்தோடு பின்வருமாறு கூறத் தொடங்கினான்:

"நண்பனே! நான் உனக்கு இதுநாள்வரையிலும் தெரியாதிருந்த சில ரகசியங்களைச் சொல்லப்போகிறேன். நமது கம்பெனியிலிருந்து நான் உனக்குத் தெரியாமல் கணக்கில் மோசடி செய்து, ஐம்பதினாயிரம் ரூபாயை அபகரித்திருக்கிறேன். மேலும், நமது கம்பெனி சோப்புச் செய்யும் தொழில் நுணுக்க ரகசியத்தையும், வேறொரு கம்பெனிக்கு எழுதிக் கொடுத்து, இருபத்தி ஐயாயிரம் ரூபாய் வாங்கியிருக்கிறேன். இத்தனைக்கும் மேலாக, உனது டிராயரிலிருந்த ரகசியக் காதல் கடிதங்களைத் திருடி எடுத்து உன் மனைவியிடம் கொடுத்து, அவள் உன்னிடம் ஜீவனாம்சம் கோரி வெற்றி பெறுவதற்கும் வழி செய்து கொடுத்தேன். இதையெல்லாம் உன்னிடம் சொல்லிவிட விரும்புகிறேன்........."

மேற்கண்டவாறு கூறியதைக் கேட்ட அவனது பங்காளி குறுக்கிட்டுப் பேசினான்: "இதெல்லாம்என்ன பிரமாதம்? அதைப்பற்றி நீ ஒன்றும் கவலைப்படாதே. இப்போது நீ செத்துக் கொண்டிருக்கிறாயே. அதுவும் என்னால்தான். நான் தான் உனக்கு விஷம் வைத்துவிட்டேன்!..."

✱

கவிமணி தே. வி. இன்று நம்மிடையே இல்லை. அவர் புகழுடல் எய்தி மூன்றுமாத காலமாகிவிட்டது. எனினும் அவரது கவிதைகளும் கருத்துக்களும் நம்மிடையே நிலவுகின்றன. கவிமணியின் அந்திமகாலத்தில் கலை இலக்கியம் பற்றிய அவரது கருத்துக்கள் பலவற்றைக் கேட்டுத்தெரிந்த நமது நிருபர் எஸ். ஆர். அந்தக் கருத்துக்களைக் காற்றோடு கலந்து போகவிடாமல் அப்படியே தொகுத்துச் சுவைபடத் தந்திருக்கிறார். கவிமணியின் கருத்துக்களிற் சில அபிப்பிராயபேதத்துக்கு இடமளிப்பவை. எனினும் அபிப்பிராய பேதத்தின் மூலமாகத்தான் ஆராய்ச்சியும், ஆராய்ச்சியின் பயனாகத்தான் உண்மையும் புலப்படும்! இல்லையா?

# கவிமணி தந்த கருத்துக்கள்

எஸ். ஆர்.

சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்னால்—

ஒரு நாள் நானும், கவிஞரான என் நண்பருமாக, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களைக் கண்டு வருவதற்காக, புத்தேரி சென்றோம். நாகர்கோயில் நகரத்துச் சந்தடியிலிருந்து விலகி, நாங்கள் சென்ற பஸ் புத்தேரிக் கிராமத்தை அடைந்தது. பஸ்ஸிலிருந்து இறங்கினோம். அப்போது கடுமையாக வெயில் காய்ந்தது. எனினும் நாஞ்சில் வளநாட்டின் சூழ்நிலை வெயிலின் வெம்மையைச் சமனப் படுத்தியது. தூரத்தே அரண் வகுத்து நிற்கும் நீலமலைச் சிகரங்கள், சிகர வடிவங்களைப் பிரதிபலித்து அசையும் பரந்த ஏரிநீரின் குளுமை, வயல் வெளியிலிருந்தும், தென்னஞ் சோலைகளிலிருந்தும் சிலுசிலுத்து வீசிய தண் காற்று — எங்களுக்கு வெயிலின் உக்கிரமே தோற்றவில்லை.

'கவிமணிப் பாட்டா' வின் வீடு உள்ள திசையில் திரும்பியதும், பக்கத்திலுள்ள கோயிலில் மணி அடித்தது.

"சுபசூசகம்தான்!" என்றார் நண்பர்.

"சுபசூசகமோ இல்லையோ? தேவி விழித்துக் கொண்டிருந்தால் சரி" என்றேன் நான்.

கவிமணியின் வீடுள்ள சிறிய சந்தினுள் நுழைந்து, கவிமணி அவர்கள் தங்கும் அந்தச் சிறிய சுத்தமான அறைக்குள் பிரவேசித்தோம்.

"யாரது?"—மெல்லிய குரல் கேட்டது. ஆம். தமிழின் குரல்! கவிமணி விழித்துக்கொண்டு தான் இருந்தார்.

ஜன்னலோரத்தில் நார்க் கட்டில். அந்தக் கட்டிலில்தான் முக்கால் நூற்றாண்டுக் காலமாக, தமிழுக்கு உணர்வு ஊட்டி வந்த கவிமணி பார்த்தவர்கள் கண் கலங்கும் நிலையில் படுத்துக் கிடந்தார். சதையெல்லாம் வடிந்து வற்றி எலும்பெடுத்து

விகாரமாகிவிட்ட உடம்பு; அந்த உடம்பிலே வியாதியின் உபாதை; வேதனை. அசையக் கொள்ள முடியாதவாறு 'கிடை'யிலே வைத்துவிட்ட நோய்க் கொடுமை. இத்தனையையும் தாங்கிக்கொண்டு அந்த மெலிந்த உருவம் படுத்திருந்தது. எனினும் அந்த வற்றிய உடம்பிலிருந்து அந்தச் சமயத்திலும் முற்றிக் கனிந்த தமிழ் கனிரென்று ஒலி செய்தது; தடுமாற்றமில்லாத சிந்தனை; குழப்பமில்லாத கருத்து.

இம் முறை நான் கவிமணியைக் கண்டுவரச் செல்லும் போது, அவரது உடல் நிலையைக் கண்டுவர மட்டும் செல்லவில்லை. தமிழ் இலக்கியம் பற்றியும், தமிழர் வாழ்வையும், தமிழ் நாட்டையும் பற்றியும் கவிமணியின் கருத்துக்கள் பலவற்றையும் தெரிந்துகொள்ளும் நோக்கத்துடனும் சென்றேன். எனவே சிறிது நேரம் வேறு விஷயங்களைபற்றிப் பேசிவிட்டு நான் அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்பிய சில வினாக்களைக் கேட்கத் தொடங்கினேன். எனது கேள்விகளுக்கெல்லாம் கவிமணி உற்சாகத்தோடும் மகிழ்ச்சியோடும் தமது அருமையான பதில்களைக் கூறி வந்தார்.

"தங்கள் வாழ்நாளில் தமிழ் இலக்கியம் எந்த முறையில் வளர்ந்திருக்கிறது? எந்த முறை வளரவேண்டும் என்று தாங்கள் விரும்புகிறீர்கள்?" என்றுகேட்டேன் நான்.

கவிமணி உற்சாகத்தோடு கூறினர்: "தமிழுக்கு என்ன குறைவு? அது வளர்ந்துகொண்டு தான் வருகிறது. பழைய நூல்களெல்லாம் தமிழ் மக்களிடம் நன்கு பரவி வருகிறது. ஏன்? இன்று அதற்கெல்லாம் எளிமையான உரைகளும் வந்து கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களும் அவற்றை ஆவலோடு படித்து வருகிறூர்கள். பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன்னுல் கூட, இந்த உணர்ச்சி இல்லை. தமிழ்ப் பண்டிதர்களின் கைக்குள் (கவிமணி இரு கைகளையும் பிணைத்து அபிநயித்துக் காட்டி) தமிழ் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. அன்று அவர்கள் வைத்தது சட்டம். இன்று அப்படியா? சாதாரணக் குதிரை வண்டிக்காரனும் பத்திரிகை படிக்கிறுன். அவனும் இலக்கியம் பேசுகிறுன். ஆனுல் இது மட்டும் போதுமா? போதாது. தமிழில் இன்னும் விஞ்ஞானம் போதிய முறையில் வளரவில்லை. வந்த நூல்களிலும் தெளிவு காணுது. ஒன்றிரண்டு பார்த்தேன். மேல் நாட்டு விஞ்ஞான வார்த்தைகளுக்கெல்லாம் தமிழ் வார்த்தைகள் கண்டு பிடிப்பதிலேயே மூளை பூராவும் காலியாய் விடுகிறது போலிருக்கிறது! (இதைக் கூறியவாறே கவிமணி சிரித்துக்கொண்டார்.) ஆனுல் போகப் போக நல்ல நூல்கள் வெளிவரும். இன்று தமிழுக்கு ஏற்பட்டிருக்கும் மறு மலர்ச்சிக்கெல்லாம் பாரதிதான் காரணம். மறுக்க முடியுமா, இதை? பாரதி கவிராஜன்........"

கவிமணியின் பேச்சு திடீரென்று தடைப்பட்டது. உபாதையினுல் "அம்மாடி!" என்று முனகினுர்; தாங்க முடியாதவாறு இருமினுர். எனவே அவர் பாரதியைப்பற்றிச்

சொல்ல வந்த விஷயம் அறுபட்டுப்போயிற்று. சிறிது நேர அவகாசத்துக்குப்பின்னர் நான் இன்னொரு கேள்வியைக் கேட்டேன்.

கேள்வி: "தேசிய இயக்கத்தால் தமிழ் மொழி சகலருக்கும் புரியக் கூடியதாகவும் புதிய விஷயங்களைத் தருவதாகவும் வளர்ந்து வந்திருக்கிறது. எனவே மக்களின் இயக்கத்தோடு ஒட்டியிருந்தால்தான் இலக்கியமும் மொழியும் வளர்ச்சி பெறுகிறது. கடந்த இருபதாண்டு இலக்கியவளர்ச்சிஇந்தஉண்மையைத் தானே பிரதிபலிக்கிறது. இல்லையா?"

கவிமணி பதிலளித்தார்: "தேசிய இயக்கம் தமிழை ஓரளவு மக்கள் மத்தியில் பரவச்செய்தது எவ்வளவு பேச்சு, பாட்டு கட்டுரைகள் எல்லாம்! தமிழ் என்பது ஏட்டிலே மட்டுமில்லை. பேச்சிலும் நுழைந்துவிட்டது. விரும்பினலும் விரும்பாவிட்டாலும் எல்லோர் காதிலும் மேடைப் பேச்சு விழத் தொடங்கி விட்டது. தமிழின் கடினம் குறைந்து, அனுவசியமான அலங்காரங்கள், சோடனைகள் மறைந்து, பாமரனுக்குப் புரிந்து கொள்ளும்படியாகி விட்டது. மக்கள் இயக்கத்தோடு ஒட்டியிருந்தால் மொழியும் இலக்கியமும் வளரும் என்பதில் சந்தேகமில்லை. இலக்கியம் மட்டும் என்ன? எல்லாமே அப்படித்தான். விஞ்ஞானம், சங்கீதம் எல்லாம் மக்களுடன் நெருங்கிப் பழகும் வரையிலும்தான் அதன் சக்தி ஓங்கி நிற்கும். எத்தனை மொழிகள் மக்களுடன் தொடர்பில்லாமல் மறைந்துபோய் விட்டன, பாருங்கள். மக்களோடு தொடர்பு இருந்தால்தான் மொழி காலத்துக் கேற்றபடி வளரும். பலதரப்பட்ட அறிஞர்களும் மொழியைக்கையாளமுடியும்."


கவிமணி

நான் மூன்றுவது கேள்வியைத் தொடங்கினேன்: "சரி. இலக்கியத்தின் கடமை என்ன? மக்களின் பண்பையே மழுங்கடிக்கும் பல இலக்கியங்கள் வெளி வருகின்றனவே. அவற்றைத் தடுக்க இலக்கிய கர்த்தாக்கள் என்ன செய்ய வேண்டும்?"

கவிமணிபதிலளித்தார்: "மோசமான புத்தகங்கள் பல வந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். நல்லவேளை! இந்தத் திருக்கூத்தையெல்லாம் நான் பார்க்கவில்லை. ஆனால் அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? நாம் கண்டிக்கலாம்; விமர்சிக்கலாம். எழுதுகிறவன் கேட்க வேண்டாமா? அவன் அதற்காகவே கச்சை கட்டிப்

புறப்பட்டிருக்கிறவன். நாம் என்ன சொல்லக் கிடக்கிறது? காலம்தான் அதற்கெல்லாம் பதில் சொல்லும். அவையெல்லாம் காலத்தோடு அடிபட்டுப் போகும். நதியில் புது வெள்ளம் வருகிறது. எதிர் நீச்சல் போடுவதென்றால் லேசான விஷயமா? பலசாலி கரைக்கு ஏறி வருவான். சோனி வெள்ளத்தோடு போய்விடுவான். 'குதிக்காதே. ஆற்றோடு போய் விடுவாய்' என்று நாம் சொன்னால், 'நீ யாருடா சொல்ல, நான் சோனியென்று?' என்பான். ஹூம். இருக்கத்தான் செய்யும் இதெல்லாம். தினசரி வீட்டைப் பெருக்குகிறோம். சுரணையுள்ள குப்பை யென்றால் மறு நாள் வருமா? திரும்பத் திரும்பப் பெருக்கித் தள்ள வேண்டியதுதான்!''

நான் குறுக்கிட்டேன்: ''பெருக்கித் தள்ள வேண்டாமா என்றுதானே நாங்களும் கேட்கிறோம்!''

கவிமணி சிரித்தார்; வாய்விட்டுச் சிரித்தார்: ''பெருக்கத்தான் வேண்டும். அதற்கு நம் கையில் வாரியல் (விளக்குமாறு) இல்லை யென்று தானே சொல்லுகிறேன்'' என்று கூறிவிட்டு, பின்னர் அழுத்தம் தொனிக்கக் கூறினார்: ''கவலைப் படாதீர்கள். அதையெல்லாம் காலம் கொண்டுபோய்விடும்!''

நான் மறு கேள்வியை எழுப்பினேன்: ''மனிதத் தன்மையையும் மனித வாழ்வையும் வளப்படுத்துவதற்குத் தானே இலக்கியம் பயன்பட வேண்டும்! இல்லையா?''

''இலக்கியத்தின் நோக்கமே அதுதான். மக்களை வளப்படுத்தி அவர்களுக்கு அறிவூட்டி, அவர்களை வாழ்வதற்குத் தகுதியாக்குவதே இலக்கியத்தின் நோக்கம். வாழ்வுக்குத் தான் இலக்கியம் பயன்பட வேண்டும். இதை நான் பல பிரசங்கங்களில் சொல்லியிருக்கிறேனே!'' என்றார் கவிமணி.

அடுத்தாற்போல் நான் கவிமணியிடம் பாரதியைப்பற்றி நீண்டதொரு கேள்வியையே கேட்டு விட்டேன்: ''பாரதியைப்பற்றி இரண்டு கருத்துக்கள் தமிழ் நாட்டில் நிலவுகின்றன. சிலர் பாரதியை வேதாந்தி என்கிறார்கள். சிலர் பாரதியை மக்கள்கவி என்கிறார்கள். இதுபற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன? பாரதியை வேதாந்தியாகச் சித்தரிக்கும் விமர்சகர்கள் பாரதி மக்களின் துன்ப துயரங்களைப்பற்றிப் பாடியுள்ள பாடல்களை 'அற்பாயுள் பாடல்கள்' என்றும், துன்ப துயரங்கள் தீர்ந்து விட்டால் அந்தப் பாடல்களும் தீர்ந்துவிடும் என்று கூறுகிறார்களே. அதுபற்றித் தங்கள் கருத்தென்ன? ஏனைய தமிழ்ப் புலவர்களைவிட, பாரதி அதிகமான செல்வாக்குப்பெற்றிருப்பதற்கு முக்கிய காரணம் என்ன? பாரதியைப் பின்பற்ற வேண்டிய எழுத்தாளர்கள் எந்த அம்சத்தைக் கருத்தில் கொள்ளவேண்டும்?''

கவிமணி கூறியதாவது: ''பாரதி — அவன் மகான். தமிழை அற்புதமான முறையில் கையாண்டிருக்கிறான். அந்த எளிமையின் காரணமாக, அவனுக்கு எல்லோர் நெஞ்சிலும் இடம் கிடைத்தது. மக்கள் அவனைப் புரிந்து கொண்டாடி

ஞர்கள்; பாராட்டினர்கள். ஆனால், ஒவ்வொரு கொள்கை உடையவனும் கவிஞனைத் தனக்கு வக்கீல் ஆக்கப் பார்க் பார்க்கிறன். உதாரணமாக... எதற்கு அதெல்லாம்? நான் பேர் சொல்லவில்லை...சுருக்க மாக, அதுதான் காரணம்.பாரதி இதைப்பற்றிதான் எழுதியிருக் கிறன் என்று சொல்ல முடியுமா? அவன் சீர்திருத்தப் பாடலும் பாடியிருக்கிறன். சமூகப் பாடல்களும் பாடியிருக் கிருக்கிறன். தேசியப் பாடல் களும் பாடியிருக்கிறன். கடவுள் தோத்திரங்களும் பாடியிருக்கி றன். அதனுல் பாரதி 'இப்படிப்பட்டவன்' என்று சொல்ல முடியாது. சந்தையில் காய்கறி வைக்கிற மாதிரி கவிஞனைக் கூறுபோட முடியுமா? கேட்பவன் சிரிப் பானே!...

''சாதாரண விஷயங்களைப் பற்றி பாடினல், விஷயம் முடிந்ததும் கவிதை மறந்துதான் போகும். இதை யாரிடம் கேட்க வேண்டும்? நாலு நாளைக்கு முன் ஒரு பையன் வந்தான். அவர்கள் ஊரில் கிணறு இல்லையாம். அதைக் கவிதையாக எழுதி யிருக்கிறன். கிணறு தோண்டு வது வரை, அதற்கு ஆயுசு உண்டு. 'என்று தணியுமிந்த சுதந்திர தாகம்' என்ற பாரதி பாடலை இன்று எந்த மேடையி லாவது கேட்க முடிகிறதா? காரணம் என்ன? அந்தக் கவிதைக்கு இன்று விடை கிடைத்து விட்டது. நாம் சுதந் திரம் பெற்றுவிட்டோம். எல் லாப் பாட்டுக்களும் இப்படி மறைந்து போகுமா? போகாது. பாரதி இன்னும் எவ்வளவோ விஷயங்களைப்பற்றியும் பாடி யிருக்கிறனே!''

கவிமணியின் இந்தப் பதிலைக் கேட்டதும், எனக்கு வேருெரு கேள்வியையும் கேட்க வேண்டும் என்று தோன் றியது; கேட்டேன்.

''சரி. கவிஞன் என்பவன் காலத்துக்கு எப்படிக் கட்டுப் பட்டவன்? எப்படிக் கட்டுப் படாதவன்?''

''கேள்வி புரியவில்லையே!'' என்றுர் கவிமணி.

''கவிஞன் தான் வாழும் காலத் தையும் அந்தக் காலத்தில் நில வும் கருத்தோட்டங்களையும் தானே தனது கவிதையில் பிரதி பலிக்க முடியும்! அதனை மீறி அவனல் ஒன்றும் செய்ய முடி யாதல்லவா?'' என்று விளக்கிக் கேட்டேன் நான்.

''கவிஞனும் மனிதன்தானே. அவனுக்கு மட்டும் என்ன, தலை கொம்பா? காலம் சாதாரண மனிதனிடம் உண்டு பண்ணும் கருத்து வேற்றுமைகளுக்கும் இதர அனுபவங்களுக்கும் கவிஞ னும்தான் ஆளாகிறன்.கவிஞன் காலத்துக்குக் கட்டுப் பட்ட வன்தான். காலத்துக்கு மீறின வன் அல்ல. பாரதி பதினேழாம் நூற்றண்டில் பிறந்திருந்தால் சுதந்திரப் பாடல்கள் பாடியிருப் பானு?...''

கவிமணியின் பேச்சு தடைப் பட்டது. அவர் பேச்சை நிறுத்தி விட்டு, குடிக்கத் தண்ணீர் கேட்டார். எனது நண்பர் கவிமணியின் வாயில் மெதுவா கத் தண்ணீரைப் ஊற்றினர். தண்ணீரைப் பருகிவிட்டு, கண் களை அயர்ந்து மூடினர்கவிமணி.

''தங்களுக்கு ஆயாசமாயிருந்தால் இன்னொரு முறை பேசிக் கொள்ளலாமே'' என்றேன்.

உடனே கவிமணி கண்களைத் திறந்து விட்டார்; திடீரென்று அவருக்கு உற்சாகமும் தெம்பும் பிறந்து விட்டது. ''ஆயாசமா? அது ஒன்றுமில்லை. நானே பேச்சுத் துணைக்கு ஆளில்லாமல் இந்தத் தனிமையான இடத்தில் கிடந்து தவிக்கிறேன்... இன்னும் எத்தனை நாளுக்கு இந்தக் கஷ்டமோ?...சரி நீங்கள் என்ன கேட்டீர்கள்?'' என்று மீண்டும் பேசத் தொடங்கிவிட்டார்.

நான் அடுத்த கேள்வியைக் கேட்டேன்: ''அதிகப்படியான மக்கள் படிக்கிறார்கள் என்பதால் ஒரு புத்தகமோ பத்திரிகையோ இலக்கியம் ஆகிவிட முடியுமா?''

''அதெப்படி ஆகமுடியும்? அதிகப்படியான மக்கள் படிப்பதால் மட்டும் ஒரு புத்தகம் சிறந்ததாகி விடாது. புத்தகத்தின் தரத்தில்தான், சாராம்சத்தின்தான் அதற்கு மதிப்பு ஏற்படுகிறது; அது இலக்கியமாகிறது'' என்றார் கவிமணி.

''எழுத்தாளருக்கு நிதி திரட்டிக் கொடுப்பது, போட்டிப் பரிசுகள் கொடுப்பது பற்றித் தங்கள் கருத்து என்ன? எழுத்தாளருக்கு வாசகர்கள் செய்யக் கூடிய பிரதிபலன் என்ன?'' இது எனது அடுத்த கேள்வி.

கவிமணி இந்தக் கேள்விக்கு மிகவும் வருத்தத்தோடும் உணர்ச்சியோடும் பதிலளித்தார்: ''எழுத்தாளருக்கு நிதி திரட்டிக் கொடுப்பது நல்லதுதான். ஆனால் எழுத்தாளனை அந்த மாதிரி நிலையில் வைத்திருப்பது மகாகேவலம். என்ன செய்வது? இப்பொழுதெல்லாம் எழுத்தாளனுக்கு ஏது மதிப்பு? ரொம்பப் பேர் எழுத்துத் தொழிலை மேற்கொண்டு கஷ்டப் படத்தான் செய்கிறார்கள். உங்கள் புதுமைப்பித்தன் கதையும் அப்படித்தானேய்யா!''

அடுத்தாற்போல் என் மனத்திலிருந்த இன்னொரு கேள்விக்கும் கவிமணியின் விடையைத்தெரிந்துகொள்ள விரும்பினேன். எனவே பின்வருமாறு கேட்டேன். ''எழுத்தாளன் ஆஸ்திகனாகவோ நாஸ்திகனாகவோ இருப்பதைக் கொண்டு, அவனது இலக்கியத்துக்கு மதிப்புக் கொடுக்கலாமா? அல்லது அவன் மக்களுக்குப் பயன்படும் கருத்துக்களைத் தருகிறானா,இல்லையா என்பதைக்கொண்டு அவனை மதிப்பிடுவதா?''

''ஒரு எழுத்தாளன் நாஸ்திகனாக இருந்தால்,அவன் அதைத்தான் பரப்புவான். அதை ஆஸ்திகனால் ஒப்புக்கொள்ள முடியாது. ஆஸ்திகன் நாஸ்திகனை வெறுக்கத்தான் செய்வான். 'இவன் நாஸ்திகனானாலும் இவன் புத்தகத்தை நான் விரும்புகிறேன்' என்று எந்த ஆஸ்திகனும் சொல்ல மாட்டான்.அப்புறம் அவன் கருத்துக்களைப் பற்றி என்ன சொல்ல இருக்கிறது? அவனுடைய சிஷ்யர்கள்தான் அவனை பாராட்ட வேண்டும்'' என்று பதிலிறுத்தார் கவிமணி.

இலக்கிய சம்பந்தமான இந்தக் கேள்விகளுக்குப் பின்னர் நான் கவிமணியிடம்தமிழ்மொழியையும் தமிழ் நாட்டையும் பற்றிச் சில கேள்விகளைக் கேட்டேன்.

அவற்றுக்கும் கவிமணியவர்கள் தெளிவோடும் திர்க்கபுத்தியோடும் பதிலளித்தார்.

''பிறமொழிக் கலப்பினுல் ஒரு மொழி எவ்வாறு வளர்ச்சியடையமுடியும்? அன்னியமொழி ஆதிக்க மொழியாயிருந்தால் தேசிய மொழி வளர்ச்சியடைய முடியுமா? அன்னிய மொழிக்கு ஒரு நாட்டில் கொடுக்கவேண்டிய ஸ்தானம் என்ன? ஒரு நாட்டில் தாய் மொழிதானே ஆட்சி மொழியாயிருக்க வேண்டும்?'' என்று கேட்டேன் நான்.

''தன் மொழியில் இயல்பாய் இல்லாத புதிய வார்த்தைகளைப் பிறமொழியிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். சுத்தத் தமிழ் தான் வேண்டுமென்று சொல்வது சரியல்ல. அப்படி ஒரு மொழியும் கிடையாது. ஆங்கிலத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அது எப்படி வளமுள்ள மொழியாயிற்று? கதவைத் திறந்து கொடுத்துத்தான். அவர்கள் தாராளமாகப் பிறமொழிச் சொற்களை எடுத்துக்கொள்கிருர்கள். ஆனுல் பிறமொழியை நாம் நம்மொழி மேல் குதிரை ஏறமட்டும் விட்டுவிடக் கூடாது. அன்னிய மொழி கல்வித் துறையைப் பொறுத்தவரையில் இஷ்ட பாடமாகவே இருக்க வேண்டும். பிரியமுள்ளவன் படித்துக்கொள்கிருன். அன்னிய மொழியைக் கண்டிப்பாய்ப் படிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் கூடாது. அறிஞர்கள் பல மொழிகள் கற்க ஆசைப்படுவார்கள். அவர்கள் படித்துக் கொள்ளட்டும். எழுத்தாளர்களுக்கும் பல மொழிகள் தெரிவது நல்லதுதான். முக்கியமாக ஆங்கிலம் தெரிந்திருப்பது நல்லது. தாய் நாட்டில் தாய் மொழிதான் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் சாதாரண மக்கள் யதார்த்தமான பிரஜைகள் ஆவார்கள். அப்போது நான் அவர்களும் நாட்டு நிர்வாகத்தில் பங்குகொள்ளமுடியும்'' என்று விளக்கமாகப் பதில் தந்தார் கவிமணி.

அடுத்து நான் பின்வரும் கேள்வியைக் கேட்டேன்: ''ஒரு மொழி பேசுகின்ற மக்கள் சேர்ந்துதானேவாழ வேண்டும்? நாஞ்சில் நாடு, பிரஞ்சிந்தியா முதலியவற்றிலுள்ள தமிழர் தமிழ் நாட்டுடன் சேர்வதால் எவ்வாறு மேம்படமுடியும்?''

''மொழி வழி மாகாணம் ஏற்படத்தான் வேண்டும். அதை எப்போது செய்துமுடித்தாலும் துன்பம் அனுபவிக்கும் ஜனங்களுக்கு அதன்மூலம் பரிகாரம் கொடுக்கவேண்டும். நாஞ்சில் நாட்டையும் தமிழ் நாட்டோடு சேர்க்கவேண்டியது மிக அவசியம். தமிழ் மக்கள் எத்தனை நாட்கள்தான் தாங்கிக் கொண்டிருக்க முடியும்? விரைவில் அவர்கள் கிளர்ச்சியில் இறங்கினுல் கூட, ஆச்சரியப்படுவதற்கில்லை!... அதே மாதிரி பிரஞ்சிந்தியா போன்ற பகுதிகளும் இந்தியாவோடு சேர வேண்டியதுதான். இந்தப் பகுதிகள் இன்னும் ஆபத்தானவை. அவற்றை உடனே சேர்க்க வேண்டும். தமிழ்மக்கள் தாயகத்தோடு சேர்ந்தால் தான் தன்மானத்தோடு வாழ முடியும். நமது கலையும் கலாசாரமும் இலக்கியமும் தழைக்கும்'' என்ருர் கவிமணி.

ஆம். கவிமணி அவர்கள் கூறியதுபோலவேஇன்றுபிரஞ் சிந்தியா தாயகத்துடன் சேர்ந்து விட்டது. நாஞ்சில் நாட்டிலும் தாயக இணைப்புக் கிளர்ச்சி வெடித்து விட்டது! ஆனால் கவிமணியவர்களுக்குத்தான் இவற்றைக் காணும் வாய்ப் பில்லாது போய்விட்டது......

''இந்தியா பூராவும்மொழிவழி மாகாணங்களாகப் பிரிந்து தானே ஒன்றுபட்டுவாழவேண் டும்? பல மொழி பேசும் மக்கள் ஒரு தேசத்தில் எப்படி இணைந்து வாழமுடியும்?'' என்று அடுத்துக் கேட்டேன் நான்.

''அதைத்தான் சொல்லி விட் டேனே. மொழிவழி மாகாணம் ஏற்படுவதால் நாட்டின் ஐக்கியம் ஒன்றும் குலையாது. நிம்மதியாக வாழ முடியும். இந்தியா என்ற பொதுப்பரப்பின் கீழ் நாம் ஒன்று பட்டு வாழ முடியும்'' என்றார் கவிமணி.

''ஆந்திர ராஜ்யம் ஏற்பட் டதற்கு ஆந்திர மக்களின் பெரும் போராட்டம்தானே காரணம்! இல்லையா?''

''அவர்கள் எத்தனைநாட்களுக் குத்தான் பொறுத்துக் கொண் டிருக்க முடியும்? அணை உடைந்து விட்டது!''

''சரி. தமிழ் ராஜ்யம் ஏற்பட நாம் என்ன செய்யவேண்டும்?''

இந்தக் கேள்விக்குக் கவிமணி யிடமிருந்து உடனே பதில் கிடைக்கவில்லை; சற்றுப் பொறுத்தும் பதில் கிடைக்க வில்லை. எனவே சிறிது கழித்து, நான் மீண்டும் அந்தக் கேள் வியை எழுப்பினேன்.

அதன் பின்னர் கவிமணி தணிந்த குரலில் பதில் கூறினார்: ''என்ன செய்ய வேண்டும்? ஆந்திரர்களைப் பின் பற்றவேண்டும். 'மயிலே மயிலே இறகு போடு' என்றால் போடுமா?... மெள்ள இழுத்து எடுக்க வேண்டியதுதான்!...'' இதைக் கூறும் போது கவிமணி யின் முகத்திலே சிறு குழந்தை யின் கள்ளமும் குறும்பும் நிறைந்த மெல்லிய சிரிப்பு ரேகை காட்டி மறைந்தது......

பின்னர் நாங்கள் கவிமணி யிடம் வேறு பல விஷயங்கள் குறித்து அளவளாவிக் கொண் டிருந்தோம். நாங்கள் புத்தேரி யில் இறங்கும் போது மணி மூன்று. சுமார் இரண்டரை மணி நேரம் கவிமணியவர்களி டம் பல கேள்விகளுக்கு விடை கேட்டுத்தெரிந்துகொண்டேன். கவிமணியின் வீட்டிலுள்ள சுவர்க் கடிகாரம் ஆறு மணி அடித்தது. அதற்கு மேலும் அவருக்குத்தொந்தரவு கொடுக்க நான் விரும்பவில்லை. எனவே நாங்கள் புறப்படத் தயாரா னோம்.

''சரி, நாங்கள் வரட்டுமா?'' இருவரும் கவிமணியைக் கை கூப்பி வணங்கியவாறே எழுந் தோம்.

''சரி. போய் வாருங்கள்... நல்லா இருக்கணும்!...எத்தனை நாட்களுக்குத்தான் நான் இப் படிக் கிடந்து கஷ்டப்படப் போகிறேனோ?...... இன்னும் அழைப்பு வரவில்லை...... சரி போய் வாருங்கள்'' என்று கூறி எங்களை வழியனுப்பி வைத்தார் கவிமணி. ★

★ "புதுமைப்பித்தன்" பாராட்டுக் கதை.



# இன்றைய சந்தையில்

"முரளி"

எந்நாளும் துள்ளியோடிக் கொண்டு வரும் சந்திரன் அன்று முகமெல்லாம், சுண்டிச் சுருங்கிக் கால்கள் தளர்ந்து தள்ளாட, வீடு வந்து சேர்ந்தான். வந்தவன் வீட்டுக்குள்ளேயே செல்லவில்லை. தெருத் திண்ணையிலேயே உட்கார்ந்து விட்டான். அவன் கைகள் அவனையறியாமல் கையிலுள்ள புத்தகத்தைப் புரட்டின.

அ—இம் — மா = அம்மா

அ—இப் — பா = அப்பா

புத்தகத்திலுள்ள வரிகளை அவன் எழுத்துக்கூட்டி முணு முணுத்தான். மீண்டும் அந்தப் படத்தைப் பார்த்தான். அந்தப் படத்தில் மிக அழகான ஒரு 'அப்பா'வும் ஒரு 'அம்மா'வும் இருந்தார்கள். அவர்கள் காலடியைச் சுற்றி தாயின் மடுவுக்காகத் தட்டழியும் பூனைக்குட்டிகளைப்போல், இரண்டு மூன்று குழந்தைகள் அவர்களைத் தழுவிக்கொண்டிருந்தன. சந்திரன் அந்தப் படத்தையே வெறித்துப் பார்த்தான்; பெருமூச் செறிந்தான்.

''ஏண்டா, திண்ணையிலேயே உக்காந்துட்டே?'' என்று கேட்டுக்கொண்டே ராஜாங்கம் வெளியே வந்தான். சந்திரன் தலை நிமிர்ந்தான்; ஆனால் ராஜாங்கத்தைக் கண்டதும், அவன் தலை தொங்கிவிட்டது. ராஜாங்கம் சந்திரனின் மனநிலையை உணர்ந்து கொள்ளாதவனாய் அவனை அல்லாக்காய்க்

உலகத்திலே விலை மதிக்க முடியாத பொருள் மனித உயிர்தான்; ஆனால், ஏழைகள் மலிந்த நாட்டிலோ மனித உயிர்தான் மலிவான சரக்காகி விடுகிறது. நாட்டின் செல்வங்கள், எதிர்காலப் பிரஜைகள், வருங்கால 'மன்னர்'கள் என்றெல்லாம் புகழப்படும் சமுதாயக் குருத்துக்களான குழந்தைகள் கூட ஏலப் பொருளாகி விடுகிறார்கள். அப்படி, தான் பெற்றெடுத்த குழந்தையை விலை சாட்டிய ஒரு ஏழைத்தாயின் மனோ வேதனையைச் சித்தரிக்கிறது இந்தக் கதை.

கைகளில் தூக்கிப் பந்தாடிக் கொண்டே, வீட்டினுள் சென்ருன்.

ஆனுல் அப்போதும் அந்தச் சிறுவனின் முகத்தில் மகிழ்ச்சி துள்ளாடவில்லை. பறித்துப் போட்ட தாமரை மலரைப் போல, அவன் முகம் கூம்பி வாடிக் கிடந்தது.

"ஏண்டா சந்திரா? அழுதியாடா?"

"இல்லே"

"யாராவது அடிச்சாங்களா?"

"ஊஹூம்!"

"வாத்தியார் ஏதாச்சும் சொன்ஞரா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே!"

"பின்னே ஏண்டா 'உம்'முன்னு முகத்தைத் தொங்க வச்சிக்கிட்டு இருக்கே?"

"ஒண்ணுமில்லே!"

ராஜாங்கத்துக்குச் சந்திரன் ஏன் அப்படி இருக்கிருன் என்று புரியவில்லை. சந்திரனின் நெற்றியிலும் நெஞ்சிலும் கை வைத்துப் பார்த்தான். உடம்புக்கு ஒன்றுமில்லை. பிறகு அவன் கையில் ஒரு மிட்டாய்ப் பொட்டலத்தைக் கொடுத்து, "சிரிடா, சிரிடான்னு!" என்று கூறிக் கொண்டே, சந்திரனுக்குக் 'கிசுகிசு' மூட்டினுன். ஆனுல் சந்திரனே சிரிப்பதற்குப் பதிலாக, கூச்சல் போட்டு அழுது விடுவான் போலிருந்தது. எனவே ராஜாங்கம் அவனை அவன் போக்கில் விட்டு விட்டான்....

அன்று நள்ளிரவில் ராஜாங்கமும் அவன் மனைவி கோவர்த்தினியும் தமக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள்; பக்கத்துப் பாயில் சுருண்டு மடங்கிப் படுத்துக் கொண்டிருந்தான் சந்திரன்.

"சந்திரன் ஏன் இன்னிக்கி ஒரு மாதிரியா இருக்கான்?" என்று கேட்டான் ராஜாங்கம்.

"என்னமோ? நானும் கேட்டுப் பார்த்துட்டேன். வாயைத் திறந்து ஒண்ணும் சொல்லவும் மாட்டேங்கான்."

"சாப்பிட்டானு?"

"பேருக்கு ரெண்டு பருக்கையைக் கொரிச்சான். அவ்வளவுதான்!"

"அவனுக்கு அவன் விஷயம் தெரிஞ்சிருக்குமோ?"

"யாரு சொல்லப்போரு?"

"ஊர் வாய்க்கு உலை மூடி உண்டா? எத்தனையோ பேரு"

"வளர்ற மரத்தை கூடையைப் போட்டு எத்தனை நாளைக்கு மூட முடியும்? அந்தந்த வயசு வந்தா, தெரியத்தான் செய்யும். பெத்தவ எந்தத் திக்கிலே போனுளோ, என்ன கதி ஆனுளோ?......"

திடீரென்று அணையுடைத்துப் பாயும் வெள்ளம் போல் ஓவென்று அலறல் கேட்டது. ராஜாங்கமும் கோவர்த்தினியும் திடுக்கிட்டு விட்டார்கள். உடலை அசைக்காமல் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு சந்திரன் தான் அவ்வாறு அலறினுன். பிரளயம் நிகழ்ந்து கொண்டிருக்கும் அந்தச் சின்னஞ்சிறு மனம் குபீரென்று வெடித்து அலறியது.

"ஏண்டா, ஏய் சந்திரா! வயித்தை வலிக்குதாடா?" என்று கேட்டான் ராஜாங்கம்.

''இல்லே...அப்...போவ்...''

''சொப்பனத்திலே பூச்சாண்டி வந்துதாடா?''

''வரலே...''

''பயப்படாதேடா.ஏய், இங்கே வா. எங்கிட்ட வந்து படுத்துக்கோ. தூங்குடா தூங்கு...'' என்று ராஜாங்கம் அவனை எடுத்துத் தன் பக்கத்தில் போட்டு அணைத்துப் படுத்துக்கொண்டான். ஆனால் சந்திரனுக்கோ அந்த அரவணைப்பினாலும் தூக்கம் வரவில்லை. இரவு முழுவதும் தூங்காமலே விசும்பிக்கொண்டிருந்தான்.

அன்று இரவெல்லாம் சின்னச்சாமி அவன் காதுக்குள் வந்து உட்கார்ந்து கொண்டு, ''உனக்கு அம்மா அப்பா இல்லை. கோவர்த்தினியும் ராஜாங்கமும் உன்னை விலைக்குத்தான் வாங்கினார்கள். உன்னுடைய கிரயம் ஐந்து ரூபாய். இன்னும் லாபம் கொடுத்து, உன்னை யாரும் வாங்கிக் கொண்டு போனாலும் போவார்கள். சந்தைக் கடைச் சரக்குப் போலத்தான் நீ! என்னைப் பார். என் அம்மாவும் அப்பாவும் லட்ச ரூபாய்கொடுத்தாலும் என்னை விற்கமாட்டார்கள்!'' என்று அலறிக் கொண்டிருப்பது போல் தோன்றியது.

## 2

ஆறு வருஷங்களுக்கு முன்னால்—

'புத்' என்ற நரகம் இருக்கிறதோ இல்லையோ? ஆனால், கோவர்த்தினி இந்த ஜன்மத்திலே அப்படிப்பட்ட ஒரு நரகத்தில் கிடந்து தவிப்பதைப் போல் புழுங்கிக் கொண்டிருந்தாள். ஊரார் கட்டிய 'மலட்டுப்' பட்டமும், வயிற்றில் பாரமேற்று அறியாததால் ஏற்பட்ட மனப் பாரமும் நெஞ்சை அழுத்த அவள் தன்னந்தனியே பெருமூச்சு விட்டுத் தவித்துக்கொண்டிருந்தாள். தனக்குள்ளே தானாய், அவள் வெந்து குமைந்து கொண்டிருந்த வேளையில்தான் அந்தக் குரல் கேட்டது.

''அம்மா! கொஞ்சம் தவிடு கிடைச்சிது. ஒரு கருப்பட்டித் துண்டு இருந்தா, குடுங்க தாயீ!''

''கருப்பட்டியுமில்லெ, ஒண்ணுமில்லெ!'' என்று கசந்து குரல் கொடுத்தவாறே கோவர்த்தினி குரல் வந்த திக்கைப் பார்த்தாள். அங்கு ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள்.அவள் கையில் ஒரு சின்னஞ்சிறு குழந்தை ஒட்டிக்கொண்டு கிடந்தது. குழந்தையைக் கண்டதும், கோவர்த்தினியின் மனம் மாறிவிட்டது.

''கஞ்சி வேணா இருக்கு. ஊத்தட்டுமா?'' என்று கேட்டாள்.

அந்தப் பிச்சைக்காரிக்கு வயிறு நிறையக் கஞ்சி ஊற்றிய பிறகும் அவளை வழியனுப்பி வைக்க, கோவர்த்தினிக்கு வாயும் மனமும் வரவில்லை.

''உனக்கு எந்த ஊரு?''

''பொறந்து வளந்து வாக்கப்பட்டது தென்காசி, தாயே. மொதலிமாரு. இன்னிக்கி, பிச்சைக்காரச் சாதி!''

''சரி. ஏன் இப்படி அலையுதே?''

''இதென்ன கேள்வியம்மா? பின்னே நான் இருக்க இடத்தைத் தேடியா கஞ்சி வரப்போவுது. நாலு வீடு இரந்துதான் குடிக்கணும் என்று என் தலையிலே எழுதியிருக்கே!''

''புருசன் இருக்காஞ?''

''ராசன் இருக்காரு. ஆஞ, இருக்கிற திசைதான் தெரியலெ!''

கோவர்த்தினி தலை வாசலைத் தாளிட்டு விட்டு வந்தாள். தன்னையும் உள்ளே நிறுத்திக் கதவைத் தாளிடுவதைக் கண்டு அந்தப் பிச்சைக்காரி திகைத்தாள்.

''சரி. உன் பிள்ளையை இப்படிக் கொஞ்சம் கொடேன். பாத்துட்டுத் தாரேன்'' என்ருள் கோவர்த்தினி.

அதைக் கேட்டு அந்தப் பிச்சைக்காரி மனமும் உடலும் கூசிஞள். அது ஏதோ நடக்கக் கூடாத, நடந்தால் உலகம் பொறுக்காத, பொல்லாங்கான காரியமாக அவளுக்குத் தோன்றியது.

''வேண்டாம் தாயி. நான் பிச்சைக்காரி. பிச்சைக்காரி புள்ளெயை நீங்க எடுக்கதாவது?...'' என்று குரலடைத்துக் கம்மிஞள் அவள்.

கோவர்த்தினி பெருமூச்செறிந்தாள்.

''பார்க்கப்போஞ, ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு விதத்திலே பிச்சைக்காரி தான். உனக்குச் சோறு வேணும்; கிடைச்சுப்போவுது. எனக்குப் புள்ளே வேணும். கிடைக்க மாட்டேங்குது ... சரி. நீ ஒண்ணும் பயப்படாதே. ஒரே நிமிஷம். பாத்துட்டுத் தந்திருதேன்'' என்று அவள் மடியிலிருந்து பலவந்தமாக அந்தக் குழந்தையைத் தூக்கி மார்போடு அணைத்து கொண்டாள் கோவர்த்தினி. குழந்தையின் மெல்லிய ஸ்பரிசம் அவளுடம்பில் பட்டதுமே, அவளது மார்பகம் கனப்பதுபோல், உடம்பில் ஏதோ ஒரு ஜீவரசம் பரவித் தெறிப்பதுபோல் தோன்றியது. செக்கச் செவேலேன்று இருந்த அந்த மெலிந்த பச்சிளம் குழந்தை கோவர்த்தினியின் அரவணைப்பில் சுகம் கண்டு நளுக்கிப் புரண்டது. பாவம், பணம் படைத்தவன் வீட்டில் பிறந்திருந்தால் அந்தக் குழந்தை பழுத்துக் கனிந்த மாம்பழம் போல் தளதளத்துக் கொழுகொழுத்து மின்னிக் கொண்டிருக்கும். ஆஞல் நெஞ்சில் அன்பைத் தவிர்த்து அமிர்தத்தைச் சுரக்க இயலாத ஏழைப் பிச்சைக்காரியின் வயிற்றிலே பிறந்த பாவம், அது இருட்டில் வளர்ந்த இளங்கொடிபோல் பசந்து மெலிந்து கிடந்தது...

ஒரு வளர்ப்புக் குழந்தையின் வாயாலாவது ''அம்மா'' என்ற மந்திரச் சொல்லைக் கேட்க வேண்டும் என்று கோவர்த்தினியின் நெஞ்சு துடிக்கத் தொடங்கி, பத்து வருஷ காலமாகி விட்டது. சொத்து நிறைய இருந்திருந்தால் தத்துப் புத்திரர்களுக்காவது போட்டி ஏற்பட்டிருக்கும். ஆஞல் கோவர்த்தினியும் ராஜாங்கமும் வயிற்றைக் கழுவி வாழும் பிறவிகள். மலிவாக ஒரு அஞதைக் குழந்தையை வாங்கிஞல் தான் உண்டு....

''இது எங்கிட்டயே இருக்கட்டுமே'' என்ருள் கோவர்த்தினி.

''அதென்னம்மா, அப்படிக் கேக்கிறீங்க?''

''ஆசையிருந்தது, கேட்டேன்.''

"பொன்னு, பொருளா? தூக்கிக்கொடுக்க? பத்து மாசம் சுமந்து பெத்திருக்கேனே, தாயி. கேட்க வாய்தான் கூசலியா?"

"நீயோ அலைஞ்சி திரிஞ்சி அல்லல்படப் போறே. எங்கிட்டெ குடுத்தா, பூவோ பொன்னேன்னு வளர்க்கிறேன். பிரியமிருந்தா குடு."

"வேண்டாம்மா. இதொன்னு தான் என் உசுரு!"

பிச்சைக்காரி போய் விட்டாள். கோவர்த்தினி கல்லாய்க் கனத்துத்தோன்றிய அடி வயிற்றில் கையை வைத்தவாறு நீண்ட பெருமூச்செறிந்தாள்.

ஆனால் மறு நாள் அதிகாலையில் கோவர்த்தினி தலைவாசலுக்குக் கோலமிட வந்த போதோ, அங்கு அந்தப் பிச்சைக்காரி நின்று கொண்டிருந்தாள்.

"விடியறதுக்குள்ளேவா பிச்சை!" என்று நினைத்தவாறு, கோவர்த்தினி அவளைப் பார்த்தாள். ஆனால் அவள் பிச்சை கேட்பதற்கு வந்தவளாகத் தெரியவில்லை. பின்னே—பிச்சை கொடுப்பதற்கா? ...

"என்ன வேணும்?"

அவளிடமிருந்து பதில் பிறக்கவில்லை. இரவெல்லாம் தூங்காமல் விழித்திருந்த முகம் வீங்கியிருந்தது. குழி விழுந்த கண்கள் சிவந்து புடைத்திருந்தன. அந்தக் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் கொட்டியது. உதடுகள் துடித்தன; வாய் அசைந்தது; கைகள் நடுங்கின; தொண்டைக்குழி ஏறி இறங்கியது; பதில் மட்டும் வரவில்லை.

"உள்ளே வாயேன்" என்றாள் கோவர்த்தினி. பிச்சைக்காரி உள்ளே வந்தாள்.

"நான் கேட்டதில் கோவமா?"

"இல்லை" என்பதாகத் தலையசைத்தாள் பிச்சைக்காரி.

"குழந்தையைத் தாரியா?" என்று படபடத்துக் கேட்டாள் கோவர்த்தினி. தலையைத்தான் அசைத்தாள் அந்தத் தாய்.

ராஜாங்கம் தூங்கி விழித்து வெளியில் வந்தான். "இதைத்தான் சொன்னேன்" என்று குழந்தையைச் சுட்டிக் காட்டினாள் கோவர்த்தினி. அவன் அலட்சியமாக 'சரி சரி' என்று உள்ளே போய்விட்டான். பத்து வருஷத் தாம்பத்ய வாழ்வுக்குப்பின்னும் தன் மனைவிக்கு விலைக் குழந்தையைத் தானே வாங்கிக் கொடுக்க முடிந்தது என்ற எண்ணம் அவனுக்கு வேதனை கொடுத்ததோ, என்னவோ?

கோவர்த்தினி குழந்தையை எடுத்துக்கொண்டாள். ஆம், 'சரக்கு' கைமாறியது. மகவை இழந்த கைகள் நீண்டபடியே நின்றன; சிறிது நேரத்தில் ஐந்து ரூபாய்ச் சில்லறையின் கனம் அந்தக் கைகளைத் தாழ வைத்தது.......

கணவனுக்குக் கழுத்தைக் கொடுத்து, மனத்தைக் கொடுத்து, உடலைக்கொடுத்து, அவள் அந்தக் கருவை ஐயிரண்டு மாசமாய்ச் சுமந்தாள். செத்துப் பிழைத்துச் சென்மம் எடுத்தது போல் அதைப் பிரசவித்தாள். பின்னும் எட்டு மாதங்கள் அந்தக் குழந்தைக்குப் பாலூட்

டிச் சீராட்டிப் பதனமாக வளர்த்தாள். எல்லாவற்றுக்கு மாக அவளுக்கு ஐந்து ரூபாய்க் ''கூலி'' கிடைத்து விட்டது! கைமேல் கிடைத்து விட்டது!

கோவர்த்தினி இலைபோட்டுப் படைத்த சோற்றை அந்தத் தாய் அழுதுகொண்டே பிசைந்தாள். முதல் உருண்டையே தொண்டைக்குஅப்பால் செல்ல வில்லை. இலையோடு சுருட்டி எடுத்து, அந்தச் சோற்றை வெளியில் கொண்டு எறிந்தாள், அவள். பசித் தீயும், அதனைத் தணிக்கவென்று பறிகொடுத்த தீயும் சேர்ந்து அவள் உதர கர்ப்பத்தில் பற்றியெறிந்தன.

தேம்பித்தேம்பி அழுதவாறே அவள் நடந்தாள். அவளுக்கு முன்னால் ஒருவன் இருபது இரு பத்தைந்து ஆடுகளை ஓட்டிக் கொண்டு போனான். ஆம். இரண்டு நாள் கழித்தால் முஸ்லிம்களுக்கு ஈத் பண்டிகை. விற்பனையில் அவன் அந்த ஆடுகள் ஒவ்வொன்றுக்கும் சராசரி இருபது ரூபாயாவது பார்த்து விடுவான். ஆடுகள் கை மாறி விட்டால், அவனுக்கு ஒரு சந்தோஷம்.

ஆனால் அவளோ தன் குழந்தையைக் கை மாற்றிக் கொடுத்து விட்டுக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்......

## 3

இன்னும் எதை யெல்லாம் விற்க முடியும் என்று ஆராய்ச்சி செய்து பார்த்த போது, சுப்பையா முதலியாருக்கு தமது கைத்தறி ஒன்று தான் பிரம்மாண்டமாகக் காட்சி யளித்தது. ஒரு தலை முறைக்கு மேலாக, அந்தக் குடும்பத்துக்கு அந்தத் தறிதான் காமதேனு; கற்பக விருட்சம்; அட்சயபாத்திரம். ஆனால் அந்தக் காமதேனு கடந்த பல மாதங்களாக, கறவை இழந்த மலட்டுப் பசுப் போலாகி விட்டது. எனவே தேவையும் பயனுமில்லாத அந்தத் தறியை விற்று விட்டான் சுப்பையா. அந்தப் பஞ்ச காலத்தில் அதற்குக் கால் விலை கிடைத்ததே பெரும்பேறு.

தறி விற்ற பணத்தைத் தின்று தீர்த்தும் கூட, சுப்பையா தினமும் இரண்டு மூன்று என்று செலவு செய்து கொண்டிருந்தான். செலவுக்குப் பணம் ஏது :என்று அவன் மனைவி சீதாலட்சுமி சந்தேகப் பட்ட போதும், அவன் அவளிடம் எதுவும் சொல்லவில்லை. கடைசியாக, பஞ்சாயத்து போர்டார் கொடுத்த பிராதின் மேல் போலீஸ் விசாரணை நடந்தது. ஒரு மின்சாரக் கம்பத்தடியில் அண்ணாந்து பார்த்து நின்று, சுப்பையா கீழே இறங்கியதும் போலீஸார் அவனை ஸ்டேஷனுக்கு அழைத்துப் போனார்கள். அவனிடமிருந்து 'பல்பு'களை விலைக்கு வாங்கிக் கொண்டிருந்தவன் பெயரையும் 'கக்க'வைத்து, இரண்டு பேரை 'அரசாங்க விருந்தாளி' யாக்கி வைத்தார்கள் போலீஸார்.

சுப்பையா சிறைக்குச் செல்லும்போது, சீதாலட்சுமி மூன்று மாத காலமாகக் 'குளியாமல்' இருந்தாள். நாளுக்கு நாள் வளர்ந்து கனக்கும் வயிற்றுப் பாரத்தோடு, அவள் விறகு வெட்டிக்கொண்டு வந்து விற்றாள். உடலை இழுத்து வேலை செய்யச் 'சந்தி'யற்றுப் போன

போது, சுப்பையா வைத்து விட்டுப்போன மிச்சம் மிஞ்சாடி தட்டுமுட்டுச் சாமான்களையும் விற்று ஜீவித்தாள். கடைசியில் ஒரு நாட்டு மருத்துவச்சியின் காலைக் கையைப் பிடித்து, தன் வயிற்றுப் பாரத்தை இறக்கினாள். பெற்றவள் கவலையை யறியாது பிறந்த அந்த ஆண் குழந்தை காலையையும் கையையும் உதைத்துக்கொண்டு அழுதது; சிரித்தது; அழுதது....

ஆறுமாசத் தண்டனை முடிந்த பின்னும், சுப்பையா வீட்டைத் தேடிவரவில்லை. அவனைப்பற்றி ஒரு தகவலையும் காணோம். அவன் எப்படியும் வந்து விடுவான் என்ற நம்பிக்கையையும் அவள் நாளடைவில் இழந்து விட்டாள். கடைசியாக, குடியிருந்த வாடகை வீட்டையும் காலிசெய்துவிட்டு, கையில் ஏந்திய குழந்தை ஒன்றே துணையாக, சீதாலட்சுமி ஒரு நாள் இரவு இந்தப் பரந்த உலகில் பிரவேசித்து விட்டாள். இந்தப் பரந்த உலகிலே, உலகச் சந்தையிலே அவள் தன் குழந்தையையும் கோவர்த்தினியிடம் விற்று விட்டாள்....

ஐந்து ரூபாய்ச் சில்லறையை மடியில் கட்டிக்கொண்டு, இரண்டு நாள் வழி நடந்து அவள் தென்காசிக்கு வந்தாள். அங்கு தான் குடியிருந்த தெருவுக்குள் நுழைந்ததும், தபால்காரன் அவள் பெயரை விசாரித்துக் கொண்டிருந்தான். அவள் பெயருக்கு ஒரு மணியார்டர் வந்திருந்தது. அத்துடன் வந்திருந்த ஒரு கடுதாசியையும் வாசித்துக் காட்டினான் தபால்காரன். அவற்றைப் பெற்றுக் கொண்டதும் ஒரு நிமிஷம் கூடத் தாமதிக்காமல் திருநெல்வேலிக்கு பஸ் ஏறினாள், சீதாலட்சுமி.

பொங்கித் தவழும் புன்னகையோடு எதிரில் வந்து நின்ற சீதாலட்சுமியைக் கண்டதும் கோவர்த்தினிக்கு வியப்பாக இருந்தது.

''ஏம்மா! என் புருசன் இருக்காரு. அவரு பணம் அனுப்பியிருக்காரு. இதை வச்சிக்கிட்டு என் கனியைத் தந்திருங்கம்மா. நீங்க நல்லாயிருக்கணும்!'' என்று கூறியவாறே ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினாள் அந்தப் 'பிச்சைக்கார' சீதாலட்சுமி.

கோவர்த்தினி நின்று யோசித்தாள். 'வாங்கிய சரக்கை வாபஸ் கொடுக்க' அவள் தயங்கினாள். வீட்டுக்குள் சென்று குழந்தையை எடுத்து வந்தாள். இரண்டே நாட்களில் அதன் சிவந்த மேனியில் மெருகேறியிருந்தது. மேகவர்ணப் பட்டுச் சட்டை; சிவந்த உடலுக்கு ஏற்ப, கழுத்தைச்சுற்றிச் சிறு கறுப்புப்பாசிச் சரம்; நெற்றியில் கருஞ்சாந்துப் பொட்டு; தலையிலுள்ள பூமுடியை மெல்லிய ஜடையாகப் பின்னி அதில் சிறு பட்டு 'ரிபனை'யும் வைத்து முடித்திருந்தாள் கோவர்த்தினி.

சீதாலட்சுமிக்குத் தன் குழந்தையைக்காண உள்ளம் பூரித்துப் புளகித்தது. இந்த அலங்காரங்களை யெல்லாம் களைந்து விட்டு, 'பழைய மூளி' யாகத் தான் அவள் குழந்தையைக் கொடுப்பாளோ?

மீண்டும் தலைவாசலை

அடைத்து விட்டு வந்தாள் கோவர்த்தினி.

"சரி, ஓம் புருசன் எங்கே இருக்கான்?"

"திருச்சிணுப்பள்ளியிலே"

"வேலை என்னதாம்?"

"யாரோ ஒரு மவராசன் வாடகைக்கு ரிஷ்கா வண்டி குடுத்திருக்காராம்."

"ரூபா எவ்வளவு வந்தது?"

"பதினஞ்சி."

"அப்பேபா பணக்காரியா யிட்டே!" கோவர்த்தினி குறும்பாகச் சிரித்தாள்.

"இல்லேம்மா. இன்னம் ஒரு மாசத்துக்குப் பிச்சை எடுக்க மாட்டேன்."

"பிறகு?"

"மாசாமாசம் பணம் வரத் தானே செய்யும்."

"ஆமா! சிமையிலில்லாத வேலை! ஒண்ணந்தேதி உனக்குப் பணம் அனுப்பப் போருன்! பணம் வரல்லேன்ஞ என்ன செய்வே? அதைச் சொல்லு..."

"வரல்லேன்ஞ..." சீதாலட்சுமி யோசித்தாள்.

"பிச்சையெடுப்பே... புள்ளை யை ஏலம் போடுவே!..."

சீதாலட்சுமி வாயடைத்துப் போய்விட்டாள்.

"இந்தாபாரு. என் யோசனை யைக் கேளு. நேரே ஊருக்குப் போ. ரெண்டு மாசம் பாரு. ஒழுங்கா பணம் வருதா, அதை வச்சி புள்ளையும் நீயும் புழைக்க முடியுமான்னு பாரு. பிறகு வந்து உன் புள்ளையை வாங்கிக்கிட்டுப் போ" என்று நீட்டி முழக்கிப் பேசினுள் கோவர்த்தினி.

"இரண்டு மாசம் தானே" என்று தெம்புடன் திரும்பினுள் சீதாலட்சுமி. ஆனுல் இரண்டு மாதங்கள் அல்ல, எழுபது மா தங்கள், ஆறு வருஷங்கள் கழிந்தபின்னும் சீதாலட் சுமியால் திருநெல்வேலிக்கு வர முடியவில்லை. அவள் விலை சாட்டிச் சென்ற பிள்ளையோ சந்திரன் என்ற பெயரோடு நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்து பள்ளிக்கூடமும் போய் வந்து கொண்டிருந்தான். அடகு வைத்த அந்தச் செல்வம் மீட்ட முடியாமல் முங்கி முழுகிப் போய் விட்டது போலிருந்தது.

## 4

காலையில் சாப்பாட்டை முடிக்கும் வரை சந்திரன் அசை யும் பதுமை போலவே நடந்து கொண்டான். கோவர்த்தினி அவனை நன்ருக அலங்கரித்துப் பொட்டிட்டு, புத்தகப் பையை யும் தோளில் மாட்டியபோது அவன் அந்தப் பையை உதறி யடித்தான். "நான் இனிமே பள்ளிக்கூடத்துக்குப் போவ மாட்டேன்!" என்று சிணுங் கிச் சீறினுன் அவன்.

"ஏண்டா?" என்ருள் கோ வர்த்தினி.

"பள்ளிக்கூடமும் வேண் டாம்; ஒண்ணும் வேண்டாம்!"

"ஏன்னுதான் சொல்லேன்"

"எல்லாரும் என்னைக் கேலி பண்ணுதாங்க"

"எதுக்காம்?"

"நீ எனக்கு அம்மா இல்லி யாம்; அப்பாவும் அப்பா இல்லி யாம்"

கோவர்த்தினி திடுக்கிட்டாள். தான் அவனது பெற்ற தாயல்ல என்ற ரகசியம் அவனுக்கு என்றைக்காவது தெரியத்தான் போகிறது என்பது அவளுக்குத் தெரியும். எனினும் இவ்வளவு சீக்கிரத்தில் தெரிந்து விடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

''எவண்டா சொன்னான் அப்படி?''

''சின்னச்சாமி!''

''எந்த சின்னச்சாமி?''

''இங்'னே பல்லு உளுந்திருக்கும் பாரு, அவன்!''

''செல்லம்மக்கா மவனா?''

''அவன்தான்''

''அட, பாவி! அவன் ரொம்பப் பொய் சொல்லுவானே!''

''நான் பொய்யின்னேன், அவன் அதையே சொன்னான்.''

''சரி. நீ நாளைக்குப் போ.''

சந்திரனின் மனம் சமாதானப் பட்டது; கோவர்த்தினியின் மனமோ சஞ்சலப்பட்டது.

''ஏம்மா! நீ அஞ்சி ரூவாயிக்கு என்னை வாங்கினேன்னு அந்தப் பயல் சொன்னான். நான் சொன்னேன், எங்கம்மா தான் என்னைப் பெத்தான்னு!'' என்று பெருமையாகச் சொன்னான் சந்திரன்.

''அப்படித்தாண்டா சொல்லணும்!''

கோவர்த்தினி பதில் கூறி முடிப்பதற்குள் வாசல் நடையில் நின்று யாரோ குரல் கொடுத்தார்கள். குரலைக் கேட்டுத் திடுக்கிட்ட கோவர்த்தினி அவசர அவசரமாக வெளியில் வந்து பார்த்தாள். அவளுக்குப் பகீர் என்றது. ஆறு வருஷங்களுக்கு முன்னிருந்ததை விட முதுமையும் மெலிவும் பலவீனமும் நிறைந்த நோஞ்சானாக, சீதாலட்சுமி எதிரே நின்று கொண்டிருந்தாள்.

''நீயா, எப்போ வந்தே?''

''இப்பதான்...குழந்தை நல்லாயிருக்கா, தாயி?''

''இருக்கு, இருக்கு. எதுக்கு வந்தே?''

''பாத்துட்டுப் போவலாமின்னுதான் வந்தேன்'' என்று கூறியவாறு முன்றானை முடிச்சை அவிழ்க்கத் தொடங்கினாள் சீதாலட்சுமி.

கோவர்த்தினிக்கு நெஞ்சு நளுக்கென்றது. ''சரி சரி. அவுங்க வார நேரமாச்சி. போயிட்டுப் புறவு வா. பேசிக்கிடலாம்'' என்று கூறி அவளை வழியனுப்பி விட்டாள்.

மத்தியானம் ராஜாங்கமும் கோவர்த்தினியும் ஒரே கட்சிக்காக வெகு நேரம் வாதாடிக் கொண்டிருந்தார்கள். பெற்ற குழந்தையில்லா விட்டாலும் வளர்த்த பாசம் போய் விடுமா? ஆறு வருஷம் கண்ணில் எண்ணெய் ஊற்றிக் காத்தது போல் வளர்த்து விட்டு, இப்போது சந்திரனை உயிரோடு தூக்கிக் கொடுத்து விட இருவருக்குமே மனமில்லை.

சீதாலட்சுமி கால்கள் வெளியே நிலைக்கவில்லை. மத்தியானமே அவள் வந்து விட்டாள். அவளை வரவேற்க, கோவர்த்தினி வெளியில் வரவில்லை; ராஜாங்கம் தான் வெளித் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

## மனிதன்

மனிதனுக்கப்பாலுள்ள எதை பற்றியும் எனக்கு சிந்தனை கிடையாது. ஏனெனில் மனிதன் மட்டுமே பலபொருள்களைப் படைக்கிறான்: பல எண்ணங்களை எண்ணுகிறான்; அவன் ஒரு மந்திரவாதி; இயற்கையின் பல சக்திகளையும் அடக்கி ஆளப் போகும் வருங்காலத்தலைவன்.

— மாக்ஸிம் கார்க்கி

''ஐயா!'' சீதாலட்சுமி குரல் கொடுத்தாள்.

''யார் நீ?''

''தெரியலியா? பெத்த மதலையை வித்த பாதகத்தி ஐயா, பாதகத்தி!''

''நீயா?''

''காலையிலேயே வந்தேன். குழந்தையைக் கேக்கலாமின்னு...''

''அவ ஒண்ணும் சொல்லலியா?''

''பெறவு வா, தாரேன்னுகை''

''எங்கே இருந்து தருவா?'' எரிச்சலுடன் பேசினான் ராஜாங்கம்.

''என்னய்யா?'' என்று திடுக்கிட்டாள் அவள்.

''அவ சொல்றதுக்குக் கூசிக்கிட்டு உன்னை ஏமாத்தியிருக்கா. தாய் இல்லாத புள்ளே தரிக்குமா, சொல்லு, ஹூம்! உனக்கும் குடுத்து வைக்கலெ; எங்களுக்கும் குடுத்து வைக்கலெ. அது போயி, வருசம் அஞ்சாச்சு. இப்போ நினைச்சி என்ன செய்ய?'' என்று பரிவோடு கூறியவாறு அவளை நோக்கினான் ராஜாங்கம்.

ஆனால் அதற்குள் சீதாலட்சுமி கீழே உட்கார்ந்து ''ஏ, எம்புறவி ராசையா!'' என்று புலம்பத் தொடங்கி விட்டாள்.

''இந்தா, இதென்ன அஞ்சு வருஷத்துக்குப் பிறகு ஒப்பாரி? சும்மா இரு. ஊரை கூட்டாதே!'' என்று அதட்டினான் ராஜாங்கம்.

அவள் அழுது கொண்டிருக்கும் போதே, அவளது புதல்வனான சந்திரன் கோவர்த்தினியின் அதட்டலையும் அடக்குமுறையையும் மீறிக்கொண்டு 'வெளியே என்ன சத்தம்' என்று வேடிக்கை பார்க்க வந்துவிட்டான்! சந்திரனின் பால் வடியும் முகத்தையும் சாயலையும் கண்டவுடன் சீதாலட்சுமியின் அழுகை சட்டென்று நின்றது; கங்கு கரையற்ற ஆனந்தம் இதயத்தில் புகுந்து 'இன்ப வேதனை அளித்தது.

''இந்தாயிருக்கே என் புள்ளே!...பெத்தவளுக்குத் தெரியாதா?... அநியாயமாகச் சொல்லிட்டீங்களே ராசா! தரமாட்டேன்னாலும் போயிட்டுப் போறேன். இந்த வார்த்தை சொல்லலாமா?'' என்று கலங்கினாள் சீதாலட்சுமி. அவள் கரங்கள் பெற்ற மகனைத் தழுவிக் கொள்ளத் துடித்தன.

''இவ யாரப்பா?'' என்று கேட்டான் சந்திரன்.

''இவ உனக்கு அம்மாவாம்! சொல்றதைப் பாத்தியா?'' என்றான் ராஜாங்கம்.

''ஆமாண்டா கண்ணு! நான் தாண்டா உன்னைப் பெத்த பாவி! ஆறு வருஷமா உன்னை மறந்திட்டு இருந்திட்டேனே, கல் மனசா!'' என்று பரிதபித்

தாள் அவள். அவள் கண்களி லிருந்து பொல பொல வென்று நீர் வடிந்தது. சந்திரன் ராஜாங் கத்தின் கால்களை இறுகக் கட்டிக்கொண்டு "எங்கம்மா ஊட்டுக் குள்ளே யில்லா இருக்கா. நீ எங்க அம்மா இல்லெ. பொய் சொல்லுதே!" என்று பெருமையோடு கூறி ஞன்.

இந்த வார்த்தைகளைக் கேட்டு நிம்மதியாகப் பெருமூச்சு விட்டு விட்டு, கோவர்த்தினி வெளி யிலே தலை காட்டிஞள்.

"இவனைக் கூட்டிக்கிட்டுப் போவலாம்ணு தான் வந்தியா?'

"ஆமா தாயி" என்று கூறிய வாறே முன்ருனை முடிச்சில் கை வைத்தாள் சீதாலட்சுமி.

"பணம்இருக்கட்டும். முதல்லெ இவனைக் கூப்பிட்டுப்பாரு"

"வாம்மா என் தங்கம்!" கைகளை நீட்டிஞள் அவள்.

"ஙக்ளே! புடிச்சிட்டுப் போ லாம்ணு பாக்கியா?" என்று கூறியவாறே, கோவர்த்தினியை வந்து அப்பிக்கொண்டான் சந்திரன்.

"இவனைக் கொண்டு போய் வளக்க முடியுமின்னு நினைக் கிறே?" என்ருள் கோ வர்த்தினி.

சீதாலட்சுமி ஊமையாய் நின்ருள்.

## 5

**சு**ப்பையா புறப்பட்டு வருவ தாக வந்த கடிதத்தின்படி, சீதா லட்சுமி நான்கு நாளாக கணவனை எதிர்பார்த்துத் தவித் துக் கொண்டிருந்தாள். ஒரு மட்டும் சுப்பையா ஒரு நாள் வந்து சேர்ந்தான். அவன் வந்து சேர்ந்ததும் சேராததுமாக, வீட் டை முற்றும் கண்ணேட்டம் விட்டுப் பார்த்த வாறே, "ஆமா, நான் போற போது உனக்கு மூணு மாசமில்லா! இல்லெ?" என்று ஆர்வத்தோடு கேட்டான்,

"அது அழிஞ்சி போச்சி!" என்று அமைதியாகப் பதில் கூறிஞள் அவன் மனைவி! ★

●

## கற்றுக் கொடுத்த பாடம்!

ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஞானபாட வகுப்புக்குச் சென்று வந்த தனது மகளை நோக்கி ஒரு தாய் பின் வருமாறு கேட்டாள்: "இன்று உனக்கு என்ன பாடம் அம்மா சொல்லிக் கொடுத்தார்கள்?"

"ஸாலமன் என்பவனைப்பற்றி" என்ருள் மகள்.

"ஸாலமனைப் பற்றி நீ என்ன தெரிந்து கொண்டாய்?"

"அவனுக்கு முன்னூறு பெண்டாட்டிகள் இருந்தார்களாம்!"

— தி கோட்.



# ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

"புதுமைப்பித்தன்"

அருமை ராசாவுக்கு,

உன்னுடைய கடுதாசி எனக்கு இன்று மத்தியானம் கிடைத்தது. நீ என் வீட்டுப் பக்கம் இன்று வந்திருந்தால் என் கடுதாசி கிடைத்திருக்கும். பரஸ்பரம் ஒரே சமயத்தில் இரண்டு பேரும் கடிதம் படித்துக்கொள்வதும் ஒரு நல்ல ஏற்பாடுதானே! நிற்க. உன் கடுதாசியைப் படித்த பிற்பாடு உனக்கு ஒரு கதை சொல்ல வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. 'ஏலே, எங்கிட்டையே மூட்டையை அவுக்கிரியே' என்று எண்ணாமல் பொறுமையாகக் கேளு.

ஒரே ஒரு காட்டில் இரண்டு மூன்று ஓநாய்கள் கூட்டுறவு ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தி அதன் மூலம் தம் பசியைத் தீர்த்துக்கொண்டு வாழ்ந்து வந்தன. அந்த ஓநாய்கள் யாவும் கம்பெனிச் சட்டத்தைக் கரைத்துக் குடித்திருந்தபடியால், யாருக்கும் பயப்படாமல், நல்ல வெள்ளையான மூன்று மாத வெள்ளாட்டுக் குட்டிகளைப் பட்டவர்த்தனமாக, சட்டப்படி குருமா செய்து சாப்பிட்டு வந்தன. இந்த ஓநாய்க் கம்பெனியில் ஒரு மலடு தட்டிப் போன கிழட்டு வெள்ளாடு காரியதரிசி. அதுதான் தன்னுடைய இனத்தில் நல்ல சரக்காக இருப்பதைத் தாஜாப் பண்ணி கூட்டிக் கொண்டுவந்து தன்னுடைய எஜமானர்களின் மேஜையை அலங்காரம் பண்ணும். அந்த வரட்டு வெள்ளாட்டுக்கு நாலு வேதம் ஆறு சாஸ்திரம் அறுபத்திநாலு கலைக் கியானத்துடன் பால் கறவை காணாத பெரியதொரு மடுவும் உண்டு. இதனுடைய சத்சம்பாஷணையை நம்பி தாய் ஆடுகள் தம்முடைய குட்டிகளை உலக அனுபவம் பெறுவதற்கு ஒப்படைக்கும். கொஞ்ச நாள் கழித்து இந்த வரட்டு வெள்ளாடு தாய்களின் கண்



" புதுமைப்பித்தன் "

*தமிழ்ச் சிறுகதைக்கோர் பிதாமகனாக விளங்கிய புதுமைப்பித்தன் (சொ. வி.) சிறந்த சிறுகதைகளையும் கட்டுரைகளையும் எழுதிவந்தது போல் தமது ஆப்த நண்பர்களுக்கு கருத்தழகும் கலை நயமும் நிறைந்த கடிதங்களையும் எழுதி வந்துள்ளார். உரிமைப்போரில் ஈடுபட்டிருந்த ரகுநாதனை ஊக்கி உற்சாகமூட்டுவதற்காக எழுதப்பட்ட கடிதம் இது. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய இந்தக் கடிதம் இப்போதுதான் அரங்கேறுகிறது.*

---

களில் தப்பித்தவறி எத்துப் பட்டால் 'உன்னுடைய குழந்தை படித்துப் பட்டம் பெற்று கைலாச யாத்திரை போயிருக்கிறது. கவலைப்படாதே' என்று சொல்லி விட்டுத் தப்பி விடும். இந்த ஆடு தரையில் நடக்கிறதைப் பார்த்தால், தருமத்துக்கும் கடவுளுக்கும் பயந்து பயந்து நடக்கிற மாதிரி தோன்றும். அதற்கு இரண்டுவித ஆயுதங்கள் உண்டு. ஒன்று பயந்த மாதிரி மிரள்வது; மிஞ்சிப் போனால் இரண்டு சொட்டுக் கண்ணீர் விடுவது.

இப்படிப்பட்ட கூட்டுறவு சத்சங்கத்துக்குள்ளே உலகத்திலேயே இதற்கு முன் இல்லாத அளவு அவ்வளவு வெள்ளையான வெள்ளாட்டுக் குட்டி துள்ளிக் கொண்டு ஓடி வந்தது. அதற்கு இரண்டரை மாதங்கூட வயசாகவில்லை. தாயாருக்கு டிமிக்கி கொடுத்து விட்டு உலகத்தைப் பார்க்கப் புறப்பட்ட ஆட்டுக் குட்டி, தன்னிச்சையாகத் துள்ளி வந்த வெள்ளாட்டுக் குட்டி, ஓநாய் கூட்டுறவு ஸ்தாபனக் கட்டிடத்துக் 'கேட்'டுக்குள் நுழைந்து, உள்ளே என்ன அதிசயம் என்று பார்க்கப் போயிற்று. அங்கே உள்ளே உட்கார்ந்து ராமநாமம் ஜெபித்துக் கொண்டிருந்த கிழட்டு ஆடு இதைக் கண்டதும் தனது ஓநாய் எஜமானர்களுக்காக நாக்கில் ஜலத்தை ஊற வைத்துக்கொண்டது. 'எஜமானர்கள் இதை எவ்வளவு ரசித்துச் சாப்பிடுவார்கள்? அதனால் நமக்கு எவ்வளவு நன்மை?' என்று எண்ணும் போது அதற்கு நிஜமாகவே எஜமான விசுவாசத்தால் நாக்கில் ஜலம் ஊறிற்று. இந்த ஆட்டுக்குட்டியை எப்படியாவது வளைக்க வேண்டும் என்று நினைத்து மேஜையிலிருந்த கண்ணாடியை எடுத்துப் போட்டுக் கொண்டது. பால் சுரக்காத

தனது வரட்டு மடுவை ஒரு துடையில் மூட்டையாக ஏற்றி வைத்துக்கொண்டு மீது அதன் தன் தொந்தியைச் சாய்த்துக் கொண்டு, "எங்கே வந்தே?" என்றது.

குசும்பு பிடித்த சித்தாட்டுக் குட்டி சும்மா வெளியே போகாமல், "சும்மா உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்!" என்றது.

"பாத்தாச்சோல்லியோ?" என்றது வரட்டு ஆடு.

"ஆமாம். பாத்தாச்சு. போரேன்" என்று திரும்பியது சித்தாடு.

"அடேடே! அவ்வளவு அவசரமா? உனக்கு நல்ல காலம் வந்துதான் இங்கே வந்தே. அதுக்குள்ள போகவா? இங்கே இப்படி கிட்ட வா. உனக்கு ராமாயணம் வருமா?" என்றது வரட்டு ஆடு.

"ஓ, ராமாயணமா? அது எனக்குத் தலைகீழ்ப் பாடமே. சொல்லட்டுமா?" என்று துள்ளிக் கொண்டு ஓடி வந்தது சித்தாட்டுக் குட்டி.

"வேண்டாம், வேண்டாம். உனக்குத் தெரிந்தால் போதும். இங்கே நான் ராமாயணம் சொல்லுவேன். அதுக்கு இந்தக் கட்டட முதலாளிகள் உனக்குச் சம்பளம் போட்டுத் தருவா. சம்மதமா?" என்றது வரட்டு ஆடு.

"சம்மதம் என்று நான் சொல்ல வேறு வேணுமா? ஆனால் ஒன்று. சாப்பிடுகிற நேரம் தவிர, மத்த நேரத்தில்தான் இருந்து கேட்பேன்" என்றது விவகாரம் தெரிந்ததாக நினைத்துக்கொண்ட சித்தாட்டுக்குட்டி.

"சாப்பாடா? அதற்கென்ன தனி நேரம்? எங்கூடவே காப்பி பாரில் சாப்பிட்டால் போகிறது. கேட்டால் போதும். சாப்பாட்டு பில்கூட கொடுக்க வேண்டாம்" என்று கண்ணிலிருந்த கண்ணாடியை எடுத்து, கைக்குட்டையில் துடைத்து மாட்டிக்கொண்டு அதைக் கூர்ந்து பார்த்துச் சொல்லியது வரட்டு ஆடு.

சித்தாடு தனக்கு உடனே உலகத்தின் போக்கு பூராவும் அத்துபடியாகி புத்திசாலித்தனமாக வரட்டு ஆட்டை ஏமாற்றி விட்டதாக நினைத்துக்கொண்டு ஒரு துள்ளு துள்ளியது. பிறகு நிதானமாக நின்று, "இது வெறும் பேச்சாகி விடக்கூடாது; எனக்கு உன்கட்டடத்து எஜமானர்களிடமிருந்து ஆபீஸ் ஆர்டர் வேண்டும்" என்றது.

மறு நாள் "ராமாயணம் கேட்பதற்காக சித்தாட்டுக் குட்டி மாதம் ரூ. 65ல் நியமிக்கப்பட்டிருக்கிறது" என்ற ஒரு உத்தரவை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தது வரட்டு ஆடு. அதற்கு ஒரு சித்தாடு வேண்டும்; ஓநாய்களுக்கு சாப்பாடு வேண்டும். அவ்வளவு தானே.

மூன்று மாதங்கள் சித்தாடு ராமாயணம் கேட்டு காப்பி குடித்தது. சில சமயம் ஓநாய்கள் உள்ளே வந்து உலாவும்; நாக்கைச் சப்புக் கொட்டும்;

வரட்டாட்டிடம் கண் காட்டி விட்டுப்போகும்.

நாளாக நாளாக, ஓநாய்களுக்குப் பொறுமை குறைந்து போக, ஒரு நாள் வரட்டு ஆடு ராமாயணத்தோடு ராமாயணமாகத் தன்னைப் பிறருக்காகக் கொடுப்பதின் மகிமையைப்பற்றி ஒரு மணி நேரம் மூச்சு விடாமல் பேசியது. சித்தாட்டுக் குட்டியைக் குனிந்து கூர்ந்து பார்த்தது. சித்தாடும் உருகி விட்டது. அதுவும் ஏற்கெனவே பிறருக்காகச் சாகக் கொடுத்து வைத்தவர்களே தேவர்கள் என்று ராமாயணத்திலும் பத்திரிகைகளிலும் அடிக்கடி படித்திருக்கிறது; பெரியவர்கள் பிரசங்கங்களில் கேட்டிருக்கிறது; தானும் பிரசங்கம் பண்ணி இருக்கிறது. இதற்கு மேலாக அனுபவ பூர்வமான அத்தாட்சி வேண்டாம் என்று முடிவு கட்டி, "நீங்கள் சொல்வது வாஸ்தவந்தான்" என்றது.

வரட்டாடு நிம்மதியாகப் பெருமூச்சு விட்டு விட்டு, "வா. போயி காப்பி பாரில் காப்பி சாப்பிடுவோம்" என்று அழைத்துச் சென்றது.

இரண்டும் சூடான காப்பிக்கு எதிரே உட்கார்ந்திருக்கும் போது, வரட்டாடு, "உனக்குப் பசிக்கிறதானல் எதுவும் சாப்பிடு" என்று சொல்லிக்கொண்டு, ஒரு கரண்டி சர்க்கரையையும் ஒரு கோப்பைப் பாலையும் தனது கோப்பையில் கொட்டிக்கொண்டது. கையில் கோப்பையை எடுக்காமல் குனிந்து வாய் வைத்து நக்கி ருசி பார்த்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தது. தனது வரட்டு மடுவை தனது இடது துடையில் ஏற்றிக்கொண்டது. மேலே சுற்றிக்கொண்டிருந்த மின்சார விசிறியைப் பார்த்து ஒரு கனைப்பு கனைத்துக் கொண்டு, "நம்ம எஜமானர்களுக்கு உன்மேல் ரொம்ப ஆசை; உன்னுடைய சதையை, மல்லிகைப்பூப் போன்ற சதையைச் சுவைத்துப் பார்க்க ஆசைப்படுகிருர்கள்; பிறருக்காகச் சாவதைப்போல, உலகில் பெரிய காரியம் என்ன இருக்கிறது?" என்று கேட்டது.

சித்தாட்டுக் குட்டிக்கு திடீரென்று குடித்துக்கொண்டிருந்த காப்பி பொறுக்கமுடியாமல் சுடுவது போலிருக்க, கோப்பையைக் கீழே வைத்து, "அப்படியா சேதி?" என்றது.

வரட்டு ஆட்டுக்கு...... கொடுக்கவும் ராமாயணம் பண்ணவும்தான் தெரியும். சித்தாடு சொல்வதைப் புரிந்து கொள்ளப் போதுமான புத்தி இல்லை. தனது பொக்கைப் பல்லைக் காட்டி, "அதுதான் சேதி!" என்றது.

சித்தாட்டுக் குட்டி சிரிக்காமல் கொள்ளாமல், "எனக்கும் என் சதையை எஜமானர்களுக்குக் கொடுப்பதைப்போல மகிழ்ச்சி தரும் காரியம் வேறு ஒன்றும் கிடையாது; ஆனல் எனக்கும் என் ஆசைக்கும் மதிலாக இந்தப் பாழாய்ப்போன ஆபீஸ் உத்தரவல்லவா குறுக்கே நிற்கிறது. என்ன செய்யட்டும்?" என்று சொல்லி இரண்டு சொட்டுக் கண்ணீர் விட்டது.

வரட்டாட்டுக்கு இது புரிய வில்லே. "தெளிவாய்ச் சொல்லு!" என்றது.

"எனக்கு என் எஜமானர்கள் மீது ரொம்பப் பிரியந்தான். அவர்களுக்குத் துரோகம் பண்ண மனசு வரவில்லே. ஆனால் ஆபீஸ் உத்தரவு ராமாயணம் கேட்கத்தான் எனக்கு மாதச் சம்பளம் என்றிருக்கிறது. நான் சதையைக் கொடுத்து விட்டால் அப்புறம் ராமாயணம் கேட்க முடியுமா? ராமாயணம் கேட்க முடியாதுபோனால், ஆபீஸ் உத்தரவை மீறுவதாகாதா? அதுவும் ஒருவிதத்தில் எஜமானத் துரோக மாச்சே! எந்த விதமான எஜமானத் துரோகத்துக்குப் பணிந்தால் தருமத்திற்குப் பொருந்தும் என்பது தெரியாமல் சங்கடப் படுகிறேன். நீங்கள் எஜமானர் களிடம் போய்க் கேட்டுத் தெரிந்து கொண்டு வாருங்கள்" என்று சொல்லித்தட்டிக் கழித்தது.

வரட்டாடு காப்பி குடித்ததும் குடியாததுமாக, எஜமானர்களிடம் ஓடி சித்தாட்டுக் குட்டியின் மனோ வேதனையைச் சவிஸ்தாரமாகச் சொல்லியது. கூட்டுறவு ஸ்தாபனம் நடத்தும் ஓநாய்களுக்கோ சித்தாட்டுக் குட்டியின் சித்திர வேலேமானம் புரியவில்லே. இதற்கு முன்பெல்லாம் பேருக்கு உத்தரவு, பிளேட்டுக்குக் கறி என்றிருந்தது போக, கத்திரிக்காய் எதிர்த்துப் பேசுகிறமாதிரி சித்தாட்டுக் குட்டி வாதாடுவதைப் பார்த்து, வரட்டாட்டிடம் "உன்வேலே போய் விடும். குட்டியைக் கொண்டா!" என்று உறுமின.

வரட்டு மடுவை மூத்திரம் நனேக்க வரட்டாடு ஓடி வந்து, "உனக்கு எதற்கு அப்பா இந்த ஆத்ம வேதனே? நான் சொல்கிறபடி உன் சதையைக் கொடுத்து விடு. அதுதான் தர்மம்" என்று உபதேசம் செய்தது.

சித்தாடு, "நீங்கள் சொல்வது சரியாகத்தான் படுகிறது. போய் எஜமானர்களிடம் உத்தரவை மாற்றி எழுதி வாங்கி வாருங்கள். நான் உங்களுடன் கூட வருகிறேன்" என்றது.

வரட்டாடு திரும்பவும் ஓடியது. ஓநாய்கள் அதன் மூஞ்சியிடம் தமது கோரப் பற்களேக் காண்பித்து, "சித்தாடு இல்லாவிட்டால் நீ!" என்றன.

வரட்டாடு "மே" என்று கத்திக்கொண்டு கழிந்து கொண்டு ஓடி வந்து, "உனக்குக் கோடிப் புண்ணியமப்பா, என்னுடன் வா" என்று கெஞ்சி அழுது மூத்திரம் வடித்துக் கழிந்தது.

சித்தாட்டுக்கு இளகிய மனசு. பாவம் போகட்டுமே. நம்மால் ஒரு வரட்டு ஆடு பிழைக்கட்டுமே என்று நினேத்து தியாகம் பண்ணத் தீர்மானித்து, எதற்கும் அம்மாவிடம் கேட்போம் என்று டிரங்க் டெலிபோன் செய்தது. சித்தாட்டுக் குட்டியின் அம்மா வெகு கைக்காரி. அவள் சொன்னுள். "ஓநாய் உறுமுவதும், வரட்டாடு ...... காண்டம் பேசுவதும் உன் சதையைப் பிய்க்கத்

தானே. வரட்டு ஆடு ஓநாய்க் காகத்தானே அழுகிறது. உனக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டதா? தேவடியாள் மாதிரி நெஞ்சைக் கல்லாக்கு. கிழடு சாகட்டுமே!" என்று சொல்லி யனுப்பியது........

ரகு. நான் உனக்கு வேறு என்னத்தைச் சொல்லப் போகிறேன்? பிடி உன் கையிலிருப்பதால்தானே உறுமலும் மாய் மாலக் கண்ணீரும்! உன்னிடம் அக்கறை உள்ளவரானல் உனக்கு ஒரு மாதச் சம்பளம் கிடைப்பதற்கு வழி செய்து, உன்னை ரிலீப் செய்ய வரட்டு ஆடு ஏற்பாடு செய்யாதா? தன்னுடைய 300க்குப் பழுதில்லாமலிருக்க, ஹம்பக் செய்யும் கண்ணீருக்கு நீ ஏன் இளக வேண்டும்? உன்னுடைய நெஞ்சழுத்தம் எங்கே? ரூ. 65. அறு பத்தியஞ்சுதானே. சும்மா வருகிறதா?.................வுக்கு இழக்கப் பிரியமில்லாமல் உன்னை மிரட்டினல் அதற்காக நீ ஓடி வந்து விடுவதா? அவனுக்கு...... வேலை செய்வது மாதிரி உன் கழுத்தறுக்கத் துணிந்த வரட்டு ஆட்டின் மீது உனக்கு என் நெஞ்சிளக்கம்? கோழை என்ற மாய்மாலத்தால் காரிய சாதனை செய்யும் அயோக்கியத்தனத்தை, கோழைத்தனம் என்று ஏமாருதே. அது ஒரு வேஷம். உனக்கு 22 வயசு. இளகுவது இயல்பு. உரிமைக்காகப் போராடு என்று பெரிய வார்த்தைகளைப் போட்டு நான் உன்னை நிர்ப்பந்தப் படுத்தவில்லை.......பதிப்பிக்கும் அயோக்கியர்கள் மத்தியில் பெரிய வார்த்தைகளுக்கு இடமில்லை. பெருச்சாளியைக் கொல்வதற்கு Bren Gun தேவை இல்லை. பெரிய தடி போதும். பிரென்கன் உபயோகிப்பது நமது முட்டாள் தனத்துக்கு அறிகுறி. நீ உன் உறுதியை அயோக்கியர்களிடம் பிரயோகித்துப் பாரேன். உரிமைக்காகப் போராடச் சொல்லவில்லை. அதில் எனக்கு நம்பிக்கை கிடையாது. ரூ. 65ஐ எந்தக் காரணத்துக்காக இழப்பதும் மடத்தனம் என்று சொல்லுகிறேன். உன்னுடைய கடிதத்தைக் கண்டதும் 'கை கடக்க விட்ட பின்பு கட்டுரைப்பதென் கொலோ' என்ற வார்த்தைகள் தான் ஞாபகம் வந்தது. இந்தக் கடிதம் வருமுன் நீ இப்பொழுதுள்ள நிலையில் காரியத்தை உனக்குப் பாதகமாக முடித்துக் கொண்டு விடுவாய் என்றுதான் எதிர் பார்க்கிறேன். வேலையைத் தீர்த்து விட்டால் உனக்கு அவகாசம் உண்டு. சென்னை கார்ப்பரேஷன் அப்ட்டாயருக்கு (ஆடு வெட்டும் இடம்) போய்ப் பார். ஆடுகளை வரிசையாக நிறுத்தி, பளபள வென்று கொலைக் கத்தியை ரூல் தடி வைத்துக் கோடு போட்ட மாதிரி இழுத்து வர, தலைகள் உருளும். ஆடுகள் தன் தன் முறை வரும்போது குனிந்து கொடுக்கும். இந்த ஆடுகளில் ஒன்றுதான் என்னுடைய ரகு, என் ராசா என நினைக்க எனக்கு நெஞ்சு கொதிக்கிறது. இந்த ஒரு விசை கை சுட்டு விட்டது. இனியாவது இந்த விஷப்

பரீட்சை செய்யாதே. இனிமேல் செய்ய உனக்கு உரிமை இல்லாத படி உனது கைப்பிடித்து ஒருத்தி நிற்பாள். அவளையும் மறந்து சோதனை செய்வாயோ? சத்திய சோதனை செய்ய எல்லாருக்கும் உரிமை கிடையாது. கதையில் ஒருவன் செய்து நமக்கு நம்பிக்கை ஊட்டுகிறன்; வாழ்வில் ஒருவன் செய்து நம்மையெல்லாம் காயடித்து விட்டான். இரண்டுபேர் போதும். மூவருக்கு அங்கே நிற்கக்கூட இடமில்லை. முடிவாக, நீ செய்திருப்பது சத்திய சோதனை அல்ல. அயோக்கியர்களுக்குப் பணிவு. நான் கடுமையாகத்தான் எழுதுவேன். ஒன்று நீ எதற்கும் நிலை குலையாதே. என் தோள் பலம் உனக்கு எப்போதும் உண்டு. உனது ரத்த பந்தங்கள் உன்னைக் கண்டு மிரளலாம். உனது செய்கை என்னைச் சிரிக்கத்தான் வைக்கிறது. உன் சொ.வி.யிடம் உன்னல் கோபப்பட முடியாது. போனது போகட்டும். வருந்தாதே. இனிமேல் ஏமாருதே. அதற்கு அவசியமும் இராது.

உனது

சொ. வி.

★

## கேட்ட கேள்வி

மேல்சபை தேர்தலுக்கு அபேட்சகராக நின்ற ஒரு ஆசாமி, தமக்கு ஓட்டுச் சம்பாதிப்பதற்காக, தமக்குத்தெரிந்த ஒரு பிரமுகரிடம் சென்ருர். அவர் அபேட்சகரை நோக்கிப் பின் வருமாறு கேட்டார்: "உங்களுக்கு ஓட் போடுவதுபற்றித் தீர்மானிப்பதற்கு முன்னர் நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். நீங்கள் மதுபானம் செய்வதுண்டா?"

அபேட்சகர் சிறிதுநேரம் மௌனமாகஇருந்துவிட்டு, பதிலுக்கு இன்னொரு கேள்வியைக் கேட்டார்: "நான் பதில் சொல்வதற்கு முன்னல் உங்களிடம் ஒரு கேள்விகேட்க விரும்புகிறேன். நீங்கள் இந்தக் கேள்வியை ஏன் கேட்டீர்கள்? எனக்கு ஓட்டுப்போடுவதைத் தீர்மானிக்கவா? அல்லது விருந்தளிக்கவா?"

## அமெரிக்க நாகரிகம்!

ஒரு ஹாலிவுட் நடிகர் ஒருநாள் ஒரு பெண்ணைச் சந்தித்தார். அந்த நடிகரைப்பார்த்தவுடன், அந்தப் பெண் அவரை நோக்கிப் பின்வருமாறுகேட்டாள்: "என்னை உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? பத்து வருஷங்களுக்கு முன்னல் உங்களைக் கல்யாணம் செய்து கொள்ளுமாறு என்னிடம் கேட்டீர்களே!"

"இருக்கலாம். ஆனல் நீ என்னைக் கல்யாணம் செய்து கொண்டாயோ?" என்று சந்தேகாஸ்பதமாகக் கேட்டார் அந்த நடிகர்!



# புத்தக விமர்சனம்

விமர்சனத்துக்கு இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும்.

## வழி பிறந்தது

[ஆசிரியர்: அகிலன்; பக்கங்கள் 190 வெளியீடு: அன்புப் பண்ணை. கிடைக்குமிடம்: பழனி பிரசுரம், பெரிய தெரு, சென்னை 5. விலை ரூ 2—0—0.]

**பி**ரபல எழுத்தாளர் அகிலன் எழுதிய பன்னிரண்டு சிறுகதைகளின் தொகுதி இது. இத் தொகுதியிலுள்ள பிற கதைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, முதல் தீபாவளி, முதற் கவிதை, அருவிக்கரையில், உயிர்த் துளி முதலிய கதைகள் சர்வ சாதாரணமானவை. பூச்சாண்டி, வழிபிறந்தது, வெறி, மனிதர்கள் முதலிய கதைகளில் கதை சொல்லும் திறன் நன்கு வெளிப்படுகின்றது. எனினும் இந்தக் கதைகளில் கருத்தோட்டம் பழமை மனப்பான்மையில் வேரூன்றிநிற்கிறது. 'பூச்சாண்டி'யில், அக்கிரமம் செய்த ஒரு போலீஸ்காரன் வெறும் பயப் பிராந்தியாலேயே செத்து விழுகிறான். இந்தக் கதையில் அகிலன், போலீஸ்காரனின் மனச்சாட்சியின் உறுத்தலே பூதாகாரமான மனப்பிராந்தியாக, பூச்சாண்டியாக மாறி அவனுயிரைக் குடித்தது என்ற உண்மையைக் கூறாமல் 'தெய்வம் நின்று சொல்லும்' என்ற கருத்தோடு முடிக்கிறார். இதனால், ஒரு மனிதனின் அக்கிரமச் செயலை அம்பலப்படுத்த முனைந்த ஆசிரியரின் நோக்கமே திரிந்து விடுகிறது எனலாம். 'மனிதர்கள்' என்ற கதைக்குத் தலைப்புப்பொருத்தமில்லை. இல்லாதவன் ஏமாற்றுவதற்கும் இருப்பவன் ஏமாற்றுவதற்கும் வித்தியாசம் உண்டு. எவன் எந்தச் சூழ்நிலையில் எதற்காக ஏமாற்றுகிறான் என்பதைக் கொண்டே, நாம் உண்மையை உணரமுடியும். பொதுவாக, கும்பிக்கொதிப்புக்காக ஏமாற்றும் ஒருவனைக்கண்டு நாம் கசந்து கொள்ளக்கூடாது; அனுதாபம்தான் கொள்ள முடியும். ஆனால், இந்தக் கதையோ, 'மனித குலமே ஏமாற்றுக் கூட்டம்' என்று கூறுவதுபோல் தொனிக்கிறது. 'வெறி' ஒரு எழுத்தாளனின் கதை. எழுதுவது ஏதோ ஒரு வெறியினால் மட்டுமே என்ற கருத்து தொனிக்கிறது, இந்தக் கதையில். ஆனால் அந்த 'ஏதோ ஒரு'வுக்கு விளக்கம் தராதவரை, கதை பயனுள்ளதாகாது. ஆறறிவுபடைத்த மனிதனுக்கு 'எழுத்து வெறி' காரண காரிய

மற்றுப் பிறப்பதில்லை; ஏதாவது ஒரு லட்சிய வேட்கையில், ஆசாபாசத்தில்தான் சிருஷ்டி உத்வேகம் பிறக்கும். இனம்தெரியாத ஒரு வெறியினுல் எவனும் எழுதுவதில்லை; அதனுல் ஏற்படும் கஷ்டநஷ்டங்களையும் மனமுவந்து ஏற்றுக்கொள்வதில்லை. இந்த உண்மையைக் கதையில் சுட்டிக் காட்டியிருந்தால் நன்ருயிருந்திருக்கும்.

இந்தத் தொகுதியிலுள்ள கதைகளில், வெட்கம், புயல், மூன்று வேளை, மனமும் மானமும் ஆகிய கதைகள் தனிச்சிறப்புடன் வரவேற்கத்தகுந்த வகையில் அமைந்துள்ளன. 'மானம் வெட்கம் இல்லாமல்' ரோட்டோரத்தில் காதல் செய்யும் பிச்சைக்காரியைக் கண்டு பொருமைப்பட்டு, அவளைக் கண்டிக்கிருர் ஒரு 'பெரிய மனிதர்'. அந்தப் பெரிய மனிதரைப் பார்த்து, 'எதுக்கு சாமி வெட்கம்? நாங்க எங்கேயும் திருடினமா? ........ யாரோடே சொத்தையும் கொள்ளையடிச்சமா?' என்று அந்தப் பிச்சைக்காரி கேட்கும்போது, வெட்கப்பட வேண்டியது அவரே தவிர அவளல்ல என்ற உண்மை தொனிக்கிறது. காதலிக்கவும், கல்யாணம் பண்ணவும், பிரசவிக்கவும்கூட அந்தரங்கமின்றி எண்ணற்ற பேர் வாழும் சமுதாய அலங்கோலத்தை இக்கதை சுட்டிக்காட்டுகிறது. பசிக் கொடுமைக்காக உடலை விற்கும் விலைமகளிடம்கூட, தியாக உணர்ச்சியும், நட்புக்கடனும், மகத்தான நல்லுணர்ச்சிகளும் உண்டு என்பதை நன்கு சித்தரிக்கிறது 'மனமும் மானமும்' என்ற கதை. தாழ்வுற்று வறுமை மிஞ்சி, தவறிக்கெட்ட நிலையிலும் 'பிழைக்க முடிந்தால் மானத்தோடு பிழைப்போம்' என்று புனித சங்கற்பம் செய்துகொள்ளும் ஏழைமக்களின் பேருணர்ச்சியை விளக்குகிறது 'மூன்று வேளை' என்னும் கதை. இந்தத் தொகுதியிலே 'புயல்' என்ற கதைதான் தலைசிறந்து விளங்குகிறது. தனிமனிதனின் தயாள சிந்தையோ தர்மமோ ஏழைகளின் துயரை எதிர்பார்க்கும் விதத்தில் துடைத்துவிட முடியாது என்ற கருத்தை இக்கதை எழுப்புகிறது. கதையின் அமைப்பும் கருத்தும் முத்தாய்ப்பும் சிறப்பாக அமைந்துள்ளன. — தொ. மு. சி.

## கம்யூனிஸமும், மனிதகுலமும்

[ஆசிரியர்: ஜான்கொலான். தமிழாக்கம்: எஸ். சண்முகம். கிடைக்குமிடம்: இலக்கியப் பண்ணை, கரூர். விலை இரண்டு அணு]

இந்நூல் மூல ஆசிரியரின் கட்டுரையைத் தழுவித் தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. கம்யூனிஸத்தின் லட்சியம் என்ன, கம்யூனிஸ்டுகளுக்கு விரோதிகள் ஏன் தோன்றுகிருர்கள், சோஷலிஸம், கம்யூனிஸம் இவை இரண்டும் முரண்பட்ட இரண்டு கொள்கைகளா, சோஷலிஸ நாடுகள் சமாதானத்தை விரும்புவதன் காரணம் என்ன என்ற கேள்விகளுக்குச் சுருக்கமாக இச்சிறு நூல் விடையளிக்கிறது. எஸ். சண்முகம் எளிய தமிழ் நடையில் கருத்துக்களைத் தெளிவாக்கியுள்ளார்.

— நா. வானமாமலை.

★ விமர்சனம்

திரைப் படம்

# எதிர்பாராதது

★

'ரத்தபாசம்' நாடகத்தை நான் முதன் முதலில் கண்ட போது, தமிழுக்கு ஒரு நல்ல கதாசிரியர் கிடைத்திருக்கிறார் என்று அகமகிழ்ந்தேன். 'பெரிய மனிதர்'களின் சின்னத்தனத்தையும்' சின்ன மனிதர்'களின் பெரியதனத்தையும் கதையின் பிரதானக் கருத்தோட்டமாகக் கொண்டு, கதாசிரியர் ஸ்ரீதர் ரத்தபாசத்தைச் சிருஷ்டித்திருந்தார். இப்படிப்பட்டதோர் உண்மையைப் பிரதிபலிக்கும் கதையை, ரத்தபாசத்துக்கு முன்னர் எவரும் நாடக மேடையிலோ திரையுலகிலோ அரங்கேற்றத் துணியவில்லை என்றே சொல்லலாம். 'ரத்தபாசம்' திரைப்படமாக வந்தபோது என் மனம் மேலும் மகிழ்ச்சி அடைந்தது. எனவே ரத்தபாசத்தை எழுதிய ஸ்ரீதரின் 'எதிர்பாராதது' என்ற திரைப்படம் வெளிவந்ததும், நல்ல கதையை எதிர்பார்த்து அதனை ஆவலுடன் பார்க்கச் சென்றேன்; ஏமாந்தேன். ரத்தபாசத்தை எழுதிய ஸ்ரீதர் இப்படிப்பட்ட ஒரு கதையையும் எழுதத் துணிவார் என்ற உண்மை நான் 'எதிர்பாராதது'தான்! 'மனிதன்', 'ரத்தக்கண்ணீர்' போன்ற படங்கள் வெளிவந்த பின்னரும், இப்படிப்பட்ட ஒரு கதை படமாகி வந்துள்ளதைக் கண்டு நான் பெரும் ஏமாற்றம் அடைந்தேன்.

பத்மினி, சிவாஜி கணேசன், நாகையா, துரைசாமி முதலியோரின் மெச்சத் தகுந்த நடிப்பு, சுரபியின் இனிமையான பாடல்கள், நாராயணமூர்த்தியின் போற்றத் தகுந்த டைரக்ஷன், பாராட்டத்தகுந்த படப்பிடிப்பு, ஸ்ரீதரின் கச்சிதமான வசனங்கள் முதலிய பல அம்சங்களும் சேர்ந்து எதிர்பாராதது எதிர்பார்த்ததைவிட, ஒரு படி மேலாகவே இருந்தது. ஆனால், நான் எதிர்பார்த்துச் சென்ற அம்சமான கதை மட்டும் பெரும் ஏமாற்றமாக இருந்தது. திறமையான டைரக்ஷன், நடிப்பு, இசையமைப்பு, படப் பிடிப்பு இத்தனையையும் துணைகொண்டு, பிற்போக்கான, அறிவுக்கும் நடைமுறைக்கும் பொருந்தாத, வளர்ந்து வரும் பண்புக்கும் பாரம்பரியத்துக்கும் ஒவ்வாத

ஒரு கருத்தை எவ்வளவு சாமர்த்தியமாக மக்களிடம் புகுத்த முடியும் என்பதைத்தான் நான் 'எதிர்பாராத'திலிருந்து கண்டு கொண்டேன். குஷ்டரோகிக்குப் பட்டுப் பீதாம்பரம் சாத்தி, கொலுவில் அமர்த்திக் கும்பிடுவதுபோல, அர்த்தமும் அவசியமும் அற்ற ஒரு கருத்தை, கலையழகு ததும்ப வலியுறுத்திச் சிருஷ்டிக்கப்பட்ட படமே 'எதிர்பாராதது!'

எதிர்பாராததின் கதாசாரம் இதுதான்: சுமதி, சுந்தர் இருவரும் காதலர்கள். அயல் நாடு செல்லும் காதலன் விபத்துக்கு ஆளாகி மாண்டு விட்டதாகச் செய்தி வருகிறது. மகனை இழந்த சுந்தரின் தந்தை தயாபரர் மனச் சாந்திக்காக மறுமணம் செய்யத்தீர்மானிக்கிறார். காதலனை இழந்த சுமதி 'தியாகம்' என்ற பெயரால் திருமணத்துக்குச் சம்மதிக்கிறாள். இதன் பலனாக, தயாபரரும் சுமதியும் தம்பதிகளாகிறார்கள். முதல் நாள் இரவிலேயே மகனின் காதலிக்கு மாலை சூடிய உண்மையை உணர்கிறார் தயாபரர். எனவே அவர் தமது சொத்துச் சுகத்தையெல்லாம் சுமதிக்கே உரிமையாக்கிவிட்டு, மீண்டும் மனச் சாந்தியைத் தேடி 'விலாசம் தெரியாமல்' வெளியேறுகிறார். காதலித்தும் கன்னியாக, கல்யாணமாகியும் கன்னியாக வாழ்கிறாள் சுமதி. பின்னர் செத்துப் போனதாகக் கருதப்பட்ட சுந்தர் கபோதியாகத் திரும்பி வருகிறான். தந்தையிடம் தனது காதலைக் கூறி, சுமதியைச் சந்திக்கத் தந்தையின் உதவியை நாடுகிறான். அவரும் உதவுகிறார். சுமதியும் சுந்தரும் சந்திக்கிறார்கள். மணமானவள் என்ற காரணத்தால் சுந்தரின் காதலை ஏற்க மறுக்கிறாள் சுமதி. கெட்டுப்போன கண் பார்வை மீண்டும் சுந்தருக்குக் கிட்டுகிறது. அவனுக்குத் தெரியாதிருந்த உண்மையும் வெளிப்படுகிறது. தயாபரர் மகனுக்குச் செய்த துரோகத்துக்காக, மரணத்தைச் சரணடைகிறார். தந்தையின் மனைவியைக் காதலிக்க நேர்ந்ததற்காக வருந்துகிறான் சுந்தர்; தன் கணவனின் மகனே தன் 'காதலன்' சுந்தர் என்பதை அறிகிறாள் சுமதி. உடனே அந்த 'இளங் காதலர்'களுக்கிடையே இருந்த உறவு மாறுகிறது. சுமதியிடம் தன் 'தாயை'க் காண்கிறான் சுந்தர்; சுந்தர தன் 'மகனாக' ஏற்றுக் கொள்கிறாள் அந்தத் 'தாய்!'

இந்தக் கதையின் மூலம் மகனுக்காக, தந்தை செய்யும் தியாகத்தையும், தந்தைக்காக மகன் செய்யும் தியாகத்தையும், எல்லாவற்றுக்கும் மேலாக, தியாகத்தின் பேருருவாய், பெண்மையையும் பெண்மைக் குலத்தின் பாரம்பரியத்தையும் கண்ணகி வழி வந்த கற்பின் மாட்சியையும் பிரதிபலிக்கும் கற்பரசியாய், சுமதியையும் அறிமுகப்படுத்துவதாகக் கதாசிரியர் ஸ்ரீதர் கற்பனை செய்துள்ளார். ஆனால், இந்தக் கற்பனைக்கு கதையில் இடமிருக்கிறதா?

சுமதி எவ்வாறு சித்தரிக்கப்படுகிறாள்? ஸ்ரீதர் கற்பனை செய்துள்ள பழைய பாரம்பரியத்தில் வந்தவள்தான் சுமதி என்றால், சுமதி சுந்தர் ஒருவனுக்கே தன் உடலையும் உள்ளத்

தையும் சமர்ப்பித்திருப்பாள். எதிர்பாராத விதமாக, அவன் இறந்து விட்டான் என்ற போது, அவள் மாதவியைப் போல் துறவு பூண்டாளா? அல்லது கண்ணகியைப் போல் காதலனைப் பின்பற்றினுளா? காரைக்காலம்மையாரைப்போல் ஈசுவரத் தியானத்தில் ஈடுபட்டாளா? எதுவும் இல்லை. ஆனுல் அதற்குப் பதிலாக, அவள் 'தியாக'த்தின் பெயரால் தன் உடலை ஒன்றரை லட்ச ரூபாய்க்கு விற்கத் துணிந்து விடுகிருள். புதுமைப்பித்தன் எழுதியுள்ள 'பொன்னகரம்' என்ற கதையில் அம்மாளு என்பவள் நோயாய்க் கிடக்கும் தன் கணவனுக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுப்பதற்காக, முக்கால் ரூபாய்க்குத் தன் உடம்பை வாடகைக்கு விடுகிருள். அம்மாளுவின் கற்புணர்ச்சியையும் தியாகத்தையும் இந்த நடைமுறை உலகில் நம்மால் புரிந்து கொள்ள இயலும். ஆனுல், ஊதாரியான தன் அண்ணனின் கடனை அடைப்பதற்காக, ஒன்றரை லட்ச ரூபாய்க்காக, தனக்கு விருப்பமில்லாதிருந்தும் ஒரு கிழவனிடம் தன் வாழ் நாள் முழுவதற்குமே உடலை விற்கத் துணியும் ஒரு பெண்ணின் செய்கையில் ஸ்ரீதர் எப்படிப்பட்ட கற்புணர்ச்சியைப் பிரதிபலிக்க விரும்பினுர் என்பது தான் நமக்குப் புரியவில்லை.

தன்னை மனமாரக் காதலித்து, தன்னுடன் பாடியாடிக்களித்து தன்னை மணப்பதாகவும் உறுதி கூறிச் சென்ற ஒருவனை, 'விதியின் சதியால்' மறந்து விட்டு, வேறொருவனைக் கல்யாணம் செய்து கொண்ட ஒரு பெண், கல்யாணம் செய்தும் கணவனுடன் ஒரு நாள்கூடப் பேசியறியாத, கூடியறியாத ஒரு பெண் 'கணவன் எங்குசென்ருன் என்ன ஆனுன் என்பதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாத ஒரு பெண், தனது பழைய காதலன் திரும்பி வந்தவுடன் அவன் முன் காதலியாக நடந்து கொள்ளாமல், பெண்ணுகவும், சிநேகிதியாகவும், இறுதியில் தாயாகவும் காட்சியளித்து, தமிழ்ப் பாரம்பரியத்தை நிலை நாட்டுகிருள் என்பது நடைமுறைக்கும் யதார்த்தத்துக்கும் பொருந்தாத ஒரு கற்பனை. அதுபோலவே, கண்ணை இழந்தும், காட்டிலே கஷ்டப்பட்டும், பிச்சை யேற்றுத் திரிந்தும், கொண்ட காதலை மறக்காமல், காதலியைத் தேடிவரும் ஒரு காதலன், அவள் தன் காதலை ஏற்றுக்கொள்ள இயலாத வேற்ருன் மனைவி என்ற நிலையிலும் இரவோடு இரவாய் மழையோடு மழையாய் அவளை நாடிவரும் ஒரு காதலன், க்ஷணநேரத்தில் தன் காதலியைத் தாயாக மதித்துத் தன் காதலைத் தியாகம் செய்கிருன் என்பதும் நடைமுறைக்குப் பொருந்தாத ஒரு கற்பனை. இந்தக் கற்பனையைச் சிகரமாகக் கொண்டே ஸ்ரீதர் தமது கதையைப் புனைந்திருக்கிருர்; அதன் மூலம் கால வெள்ளத்தில் அடிபட்டு உருத்தேய்ந்து வலு விழந்து போன ஒரு கருத்தை ஸ்தாபிக்க முனைந்திருக்கிருர்.

அந்தக் கருத்துஎன்ன? மகனை இழந்ததால் சாந்தி குலைந்த தயாபரர் சாந்தி நாடி மறு மணம் செய்துகொள்கிருர். ஆனுல்அந்த மறுமணத்தால் ஒரு இளம்

பெண்ணின் சாந்தி குலையுமே என்பதை அவர் எண்ணிக்கூட பார்க்கவில்லை. மணம் செய்து கொண்ட பின்னராவது அவளுடன் வாழ்க்கை நடத்தினாரா? அதுவும் இல்லை. கணவனை இழந்து தவிக்கச் செய்து விட்டு ஓடி விடுகிறார். மகனைப் பிரிந்ததால் சாந்தி குலைந்த தயாபரருக்கு மறுமணம் செய்து கொள்ள உரிமை இருக்குமானால், மறுமணம் செய்து கொண்ட பின்னரும் தம் மனச் சாந்திக்காக கட்டிய மனைவியைக் கை கழுவிவிட்டு ஓடுவதற்கு உரிமை யிருக்குமானால், காதலனையும், கணவனையும், தந்தையையும் இழந்து மனச் சாந்தி குலைந்த ஒரு அபலைப் பெண்ணுக்கு மட்டும் அவ்வித உரிமைகள் கிடையாதா? திரும்பி வரமாட்டான் என்றிருந்த காதலன் திரும்பி வந்த போது, அவனைத் தவிர, தன் உள்ளத்தில் வேறு யாருக்கும் இடமில்லாத போது, அவன் மீதுகொண்ட காதல் நீறு பூத்த நெருப்பாய் உள்ளுக்குள் தகிக்கும் போது, அவனுக்காக எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் காத்திருப்பதாய்ச்சொன்ன உறுதி மொழி நெஞ்சில் உறுத்தும் போது, தன்னையறியாமலே தன் காதலனுக்கு எதிராக ஒரு துரோகச் செயலை அவசரப்பட்டுச் செய்து விட்டோம் என்ற உண்மையை உணரும் போது, ஒரு காதலிக்கு, கல்யாணம் ஆன தினத்தன்றே கணவனை இழந்து விட்ட (சுமதியைப் பொறுத்த வரை தயாபரர் இருந்தும் இறந்தவர்தானே! திரும்பி வருவார் என்ற நம்பிக்கைக்கு இடம் ஏது?) ஒரு கன்னிக்கு மட்டும் தன் காதலைப் புதுப்பித்துக் கொள்ளவோ, காதலனின் கையைப்பிடிக்கவே உரிமை கிடையாதா? இந்தக் கேள்விக்குத்தான் ஸ்ரீதரின் கதை விடையளித்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக, பழமையின் பெயராலும், ஒழுக்க நியதிகளின் பெயராலும் ஒட்டுறவிற்காகத் தவிக்கும் காதல் உள்ளங்களைப் பிரித்துவைக்கும் வைதிகச் சூழ்ச்சிக்குத்தான் ஸ்ரீதர் இரையாகியிருக்கிறார். 'ஆண்கள் மனச் சாந்திக்காக எத்தனை பெண்களை வேண்டுமானாலும் கைப் பிடிக்கலாம்; ஆனால் பெண்களோ, கல்யாணமாகியும் கன்னியாயிருந்தால் கூட, அவ்வாறு மறுமணம் செய்துகொள்ளக் கூடாது' என்ற பழைய பத்தாம் பசலிக் கொள்கையை, பெண் குலமும் மனிதவர்க்கமும் தூக்கி யெறிந்துவரும் உளுத்துக் கலகலத்த உதவாக்கரைக் கொள்கையைத்தான் கற்பின் பெயராலும், பெண்மையின் பெயராலும், தாய்மையின் பெயராலும், கதாசிரியர் ஸ்ரீதர் நடைமுறைக்கும் அறிவியலுக்கும் புறம்பான முறையில் தமது கதையில் திரித்துத் திணித்து கூற முனைந்துள்ளார். இந்த உண்மையைத் தான் 'எதிர்பாராதது' நமக்குப் புலப்படுத்துகிறது.

"நிருபணன்"

"SHANTHI" Edited and Published by T. M. C. Ragunathan at 81, High Road, Tirunelveli Jn. Printed by S. Ramiah at Sri Lakshmi Press, 120, High Road, Tirunelveli Jn.

# பாளையங்கோட்டை நகர்மன்றப் பொருட்காட்சி

[பிச்சைக்கார விடுதி நிதிக்காக]

வ. உ. சிதம்பரனார் விளையாட்டரங்கில்

## 9—1—55 முதல் 30—1—55 முடிய

நாடக, நடன, இன்னிசை, குஸ்தி நிகழ்ச்சிகள்.

---

| | | | |
|---|---|---|---|
| 9-1-55 ஞாயிறு | இரவு 9-30க்கு | குமாரி ஸ்ரீ கலா & பார்ட்டி | நடனம் |
| 10-1-55 திங்கள் | ,, | நடிகவேள் ஸ்ரீ M. R. ராதா & பார்ட்டி (நாடகம்) | இரத்தக்கண்ணீர் |
| 11-1-55 செவ்வாய் | ,, | ஷை | தூக்குமேடை |
| 12-1-55 புதன் | ,, | சீர்காழி ஸ்ரீ கோவிந்தராஜன் & பார்ட்டி | இசைவிருந்து |
| 13-1-55 வியாழன் | ,, | விகடம் சந்தானம் சந்துரு & பார்ட்டி | விகட நாடகம் |
| 14-1-55 வெள்ளி | ,, | திருச்சி ஸ்ரீ லோகநாதன் & பார்ட்டி (நாடகம்) | அனார்கலி |
| 15-1-55 சனி | ,, | ஷை | ஷை |
| 16-1-55 ஞாயிறு | ,, | வாஸந்தி செல்லப்பா & பார்ட்டி | நடனம் |
| 17-1-55 திங்கள் | ,, | ஸ்ரீ M. N. நம்பியார் & பார்ட்டி | கவியின் கனவு |
| 18-1-55 செவ்வாய் | ,, | (நாடகம்) ஷை | விதி |
| 19-1-55 புதன் | ,, | ஸ்ரீ R. S. மனோகர் & பார்ட்டி | இன்ப நாள் |
| 20-1-55 வியாழன் | ,, | (நாடகம்) ஷை | அளவுக்கு மீறினால் |
| 21-1-55 வெள்ளி | ,, | ஸ்ரீ T. M. சௌந்தரராஜன் & பார்ட்டி | இசைவிருந்து |
| 22-1-55 சனி | ,, | ஸ்ரீ K. A. தங்கவேலு & பார்ட்டி (நாடகம்) | லெக்ஷ்மிகாந்தன் |
| 23-1-55 ஞாயிறு | ,, | ஸ்ரீ T. S. துரைராஜ் & பார்ட்டி | டி. எஸ். பி. |
| 24-1-55 திங்கள் | ,, | (நாடகம்) ஷை | நடனம் & நாடகம் |
| 25-1-55 செவ்வாய் | ,, | ஸ்ரீ கண்டசாலா & பார்ட்டி | இசைவிருந்து |
| 26-1-55 புதன் | ,, | ஸ்ரீ M. G. ராமச்சந்திரன் & பார்ட்டி | இன்பக்கனவு |
| 27-1-55 வியாழன் | ,, | (நாடகம்) | சமூக நாடகம் |
| 28-1-55 வெள்ளி | ,, | ஷை | பகைவனின் காதலி |
| 29-1-55 சனி | ,, | ஷை | ஷை |
| 30-1-55 ஞாயிறு | ,, | ஸ்ரீமதி U. R. ஜீவரத்தினம் | இசை விருந்து |

14-1-55 வெள்ளி மாலை 5-30 மணிக்கு
16-1-55 ஞாயிறு ஷை
18-1-55 செவ்வாய் ஷை
20-1-55 வியாழன் ஷை

} உலக மாமல்லர் கிங்காங், டைகர் ஜோகிந்தர், தாராசிங், கேப்டன் மார்வெல் முதலியோர் மல்யுத்தம்

**நுழைவுக் கட்டணம் அணா 2 தான்!**

10 நுழைவு டிக்கட் உள்ள புஸ்தகம் ரூ. 1—0—0

நகர்மன்றப் பொருட்காட்சி கமிட்டியார்,
பாளையங்கோட்டை.

அழகுக்கு அழகு செய்ய....

சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி என்னும் ஐம்பெருங்காப்பியங்களையும் அணிகலன்களாகப் பெற்ற பாக்கியவதி என்று தமிழன்னையைப் புலவர்கள் பாராட்டுகிறார்கள். ஆம், நல்ல நகைகள் அழகுக்கு அழகு செய்யும் சிறப்புடையவை.

★

திருவாங்கூர் கொச்சியில் உயர்தரமான
தங்கம், வெள்ளி, வைர நகைகளுக்கு பிரசித்தி பெற்ற இடம்

ஜூவல் மான்ஷன்

50 ஆண்டுகளாகப் பொது மக்களின்
நம்பிக்கையைப் பெற்றுள்ள ஆபரண மாளிகை

★

உரிமையாளர் :

பி. எம். சி. சுப்பிரமணியன் செட்டியார்

"ஜூவல் மான்ஷன்"

சாலை : : திருவனந்தபுரம்

Wrapper printed at Shanti Press, Madras-1